திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN



தில்லைக் கூத்தப் பெருமான்

மாலை 9] பராபவ-மார்கழி-ஜனவரி, 1967 [மணி 4

சென்னை அரசாங்க அறநிலையப்



சென்னை திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் கலியாண மண்டபத்தில் நிகழ்ந்த சர்வ வாத்திய நிகழ்ச்சிக்குத் தமிழக முதலமைச்சர், ஆணையர், சென்னைத் துணை ஆணையர், தலைமை நிலையத் துணை ஆணையர் முதலிய பெருமக்கள் வருகை தருதல் (4-12-66).

ஆண்டுச் சிறப்பு மலர்

(சனவரி—தைத்திங்கள்)

பொருளடக்கம்

1. தருமையாதீனத் தலைவர் ஆசியுரை
2. திருவாசகமும் சங்க நூல்களும்
3. சங்க நூல்களின் சிறப்பு
4. இராமலிங்க அடிகளாரின் இனிய உரைத்திறன்
5. தலப்பெயர்களில் கவிப் புனைவுகள்
6. இதுதான் இந்துமதம்
7. கண்ணனுக்கும் உடையவர்க்கும் காணும் ஒற்றுமைகள்
8. ஞான சித்தர்களும் சித்தமருந்தும்
9. தில்லையில் திருஞான சம்பந்தர்
10. கண்ணுதலான் காதல்
11. ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை
12. ஆற்றிலே எதிரேறிய அருட்கவிதை
13. விடை தெரியுமா?
14. விடை விளக்கம்
15. திருவான்மியூர்த் தலவரலாறு
16. திருமழிசைக் கல்வெட்டுக்கள்
17. திருத்துழாயின் சிறப்பு
18. சமணமும் தமிழும்
19. இறை வழிபாடு

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பராபவ-மார்கழி-ஜனவரி '67 [மணி 4

தருமையாதீனத் தலைவர் ஆசியுரை

[தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள், சென்னை திருமயிலாப்பூரில், 10–12–1966 அன்று, இந்து சமயப் பரப்புநர்—விளக்குநர் பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டு, மாணவர்களுக்கு வழங்கி யருளிய ஆசியுரை.]

தமிழின்நீர்மை பேசித்தாளம்
வீணைபண்ணி நல்ல
முழவம்மொந்தை மல்குபாடல்
செய்கைஇடம் ஓவார்
குமிழின்மேனி தந்துகோல
நீர்மையது கொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய
பவள வண்ணரே

—சம்பந்தர்.

ஆணையர் அவர்களே!

துணை ஆணையர் அவர்களே!

பயிற்சியாளர்களே!

மற்றுமுள்ள அன்பர்களே!

எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கரின் திருவருளால், சென்னை-திருமயிலை இந்து சமயப் பரப்புநர்-விளக்குநர் பயிற்சி நிலையம் நடைபெற்று வரும் இவ்விடத்திற்கு வந்து, உங்கள் அனைவரையும் கண்டு மகிழும் வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பெரிதும் மகிழ்கின்றோம். நமது அன்பிற்குரிய அறநிலைய ஆணையர் திருமிகு. சாரங்கபாணி முதலியார் அவர்கள் தெரிவித்தது போல, தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில் நடைபெறும் நிலையில், இந்தப் பயிற்சி நிலையமானது முன் கூட்டியே தொடங்கப் பெற்று வளர்ந்து வருவது கண்டு, மிகவும் மகிழ்ச்சியுறுகின்றோம்.

ஏழிசை :

இங்கே எழுந்தருளியுள்ள ஏழு திருமடங்களின் தலைவர்களையும், முதற்கண் வரவேற்றுப் பேசிய திருமதி. சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்கள், 'ஏழு சுரங்கள்' என்று குறிப்பிட்டார்கள். அது மிகமிகப் பொருத்தம். இறைவன் இசை வடிவினன்; இசைப் பயனாகத் திகழ்பவன்;

இசைக்கு உருகி இன்னருள்புரிபவன். ஆதலின் இறைவனேயே 'ஏழிசை' என்று நம்முடைய பெரியோர்கள் கூறுவர்.

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக் குடனுகி
மாழையொண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்னுரூர் இறைவனையே.

என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு.

திருஞான சம்பந்தர் மக்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கு உடன் பயக்கும் நற்றமிழ்த் திருப் பதிகங்களை இன்னிசையோடு கலந்தே அருளிச் செய்தனர். இதனையும் சுந்தரர்,

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம் பந்தனுக்(கு) உலகவர்முன்
தாளம்ஈந்(து) அவன் பாடலுக்கு
இரங்குந் தன்மையாளனை

என அருளிச் செய்கின்றார்.

இந்த நினைவு ஓர் அம்மையார் வாயிலாக நமக்கு வந்ததிலும் ஒரு பொருத்தம் உண்டு. தேவாரத் திருப்பதிகங்களுக்கு அவற்றுக்குரிய பண்களை வகுத்துக் கொடுத்தது திருநீலகண்ட யாழ்ப் பாணர் வழியில் வந்த மதங்க சூளாமணியார் என்னும் ஒரு பெண்மணியே அல்லவா?

2. தோத்திரமும் சாத்திரமும்:

இங்குப் பயிற்சி பெறும் பரப்புநரும் விளக்குநரும் ஓதி உணர வேண்டிய உயரிய நூல்கள் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களும் ஆம். அவற்றின் சிறப்பைப் பண்டு தொட்டு வழங்கி வரும் ஒரு வெண் பாவால் உளங்கொள்ளலாம்:

வேதம் பசு;அதன்பால்
மெய்யா கமம்;நால்வர்
ஓதுந் தமிழ்,அதனின்
உள்ளுறுநெய்;—போதமிகு
நெய்யின் உறுசுவையாம்
நீள்வெண்ணெ மெய்கண்டான்,
செய்ததமிழ்
நூலின் திறம்.

என்பது அப்பாட்டு.

மக்களுக்குப் பயன்படும் விலங்குகளுள் தூய்மையும், நன்மையும், கடவுட்டன்மையும் உடையது பசு; அது போல நூல்களுட் சிறப்புடையது வேதம். பசுவினால் கிடைக்கும் பொருள்களுள் மிகச் சிறந்தது அதன் இன் சுவைப்பால்; பால் மக்களுக்கு உணவாகவும், மருந்தாகவும், இறைவழிபாட்டின் உபகரணமாகவும் பயன்படும். ஏனைப் பொருள்கள் அத்துணைப் பயன் படா. அதுபோல, வேதம் பலகொள்கைகளுக்கும் மூலமாக இருப்பினும், அதன் முடிந்தபயன் சிவநெறியே யாம். வேதம் பொது; சிவாகமம் அருஞ் சிறப்பு. ஆதலினால், 'அதன் பால் மெய் ஆகமம்' எனப்பட்டது. மெய் ஆகமம் என்றது வேதத்தின் உண்மைத் தாற்பரியத்தை விளக்கும் திவ்விய ஆகமங்கள் எனப்படும் சைவ ஆகமங்களேயே ஆம். ''வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க'' எனவும்,

உலகியல் வேதநூல்
ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ
நெறிய(து) என்பதும்
கலதிவாய் அமணர்காண்
கிலார்கள்; ஆயினும்
பலர்புகழ் தென்னவன்
உணரும் பான்மையால்.

எனவும் எழுந்த சேக்கிழார் பெருமான் திருவாக்கு நினைவில் வைக்கத் தக்கது. இன்னும் அப் பெருமான், ''சைவத்தை வேதப்பயன்'' என அறுதியிட்டுக் கூறி யருளுகின்றார். இக் கருத்தைக் கருவாகக் கொண்டுள்ள பெரிய புராணத் திருவிருத்

தம் மாணுக்கர்களால் மனனஞ் செய்தற்கு உரியது. அது,

பண்ணின் பயனும் நல்லிசையும்
பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும்
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும்
வேதப் பயனுஞ் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ

எனவரும். இது திருச்சேய்ஞலூரின் சிறப்பைக் கூறுவது.

இதில், 'கருத்தின் பயனும் எழுத்தஞ்சு' என்றதும், 'வேதப் பயனும் சைவம்' என்றதும் சிறப்பாகக் கருதத் தக்கன.

இனி, பாலிலிருந்து கிடைக்கும் பொருள்களுள் மிகச் சிறந்தது நெய்; அது எளிதிற் காணவும் பெறவும் படாமல் பாலின்கண் மறைந்து உறைவது. ஆதலால், அதனை 'உள்உறு நெய்' என்றது அப்பாட்டு. அதுபோல, வேதத்தின் பயனுகவும் உபநிடதப் பொருளின் தெளிவாகவும் உள்ள உயரிய கிரியைகளையும் மெய்யுணர்வையும், சிவாகம ஞானபாதப் பொருளோடு முரணுதபடி, தம்மிடம் விளங்கக் கொண்டுள்ள தமிழ் மறைகள் தேவார திருவாசகங்களே யாகும். ஆதலால், ''நால்வர் ஓது தமிழ் அதனின் உள்ளுறுநெய்'' என அடுத்துக் கூறிற்று அப்பாட்டு.

நால்வர் ஆவார் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய ஆசிரியர்களே ஆவர். இவர்கள் எல்லோரும் முழு முதற்கடவுளாகிய சிவபிரானுல் ஆட்கொள்ளப் பெற்றவர்கள்; சிவபரம் பொருளைத் தலைப்பட்டுணர்ந்து சிவமேயாய் நின்றவர்கள்; முதல்வன் அருளாணையால் அற்புதச் செயல்கள் பல புரிந்து 'சைவ சமயமே மெய்ச் சமயம்' என உலகிற்கு விளக்கினவர்கள். ''நாலுபேர் போனபடி போ'', ''நாலுபேர் சொன்னபடி செய்'' என்னும் பழமொழிகள் இவர்கள் விளக்கிய சரியை, கிரியா யோக ஞான நெறிகளில் நிற்க வேண்டும் என்பதையும், தேவார திருவாசகங்களை ஓதி உணர்தல் வேண்டும் என்பதையும் குறிக்கும்.

இனி, நெய் தன் சுவையால் நம்மை இன்புறுத்துவது; நெய்யும் சுவையும் வேறு அல்ல ஆயினும், அவை குணியாகவும் குணமாகவும் இருந்து நன்மை பயப்பவை. அதுபோல, தமிழ் மறைகளின் உள்ளீடும் அடிப்படைக் கடவுள் மெய்யுணர்வும் ஆகியதிருவருள்ஞானத்தைச்சிறந்தெடுத்துத் தெளிய வுணர்த்துவது சிவஞான போதம் என்னும் அருமந்த ஞான நூல்.

அது, நம் சைவ ஆதீனங்களுக்கு எல்லாம் சந்தான முதற் குரவராக, 13-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில், தமிழ் நாடு செய்த தவத்தானே அவதரித்தருளிய, மெய்யுணர்வின் முற்றுப் பேறு உடைய மெய்கண்ட தேவர் அருளிச் செய்தது.

தேவார திருவாசகங்கள் வேதத்தின் மந்திர பாகம் போல் அமைவன; சிவஞான போதம் அதன் வார்த்திகம் உட்பட உபநிடதம் போல்வது; முன்னையவை தெய்வ நெறி உணர்த்தும் இலக்கியம்; பின்னையது அவற்றின் பொருளியல் விளக்கும் இலக்கணம். முன்னையவை தம்மை அன்போடு ஓதுவார் உணர்வைத் தூய்மைப்படுத்தி மலரச் செய்து, திருவருள் ஒளியையும் பேரின்ப அனுபவத்தையும் அவ்வுணர்வில் விளைவிப்பவை ஆகும். பின்னையது நம் உணர்வின் திருகலை நீக்கி ஒழுங்குபடுத்தி, அத்திருவருளை ஏற்றுக் கொள்ளும் செவ்வியை உண்டு பண்ணுவது. இப்படித் தமிழ் மறையும் சிவஞான போதமும் ஒன்றை யொன்று விட்டுப் பிரியாதனவாய், பயனும் சாதனமுமாய் நிற்றலின், அப்பாட்டு இறுதியில், ''நீள் வெண்ணை மெய்கண்டான் செய்த தமிழ் நூலின் திறம் போதமிகு நெய்யின் உறுசுவையாம்'' என முடித்தது. வெண்ணை—திருவெண்ணெய் நல்லூர்.

'ஒருமொழி ஒழி தன் இனம்கொளற் குரித்தே' என்னும் இலக்கணத்தால், 'நால்வர் ஓது தமிழ்' என்றது பற்றிப் பன்னிரு திருமுறைகளேயும், 'மெய் கண்டான் செய்த தமிழ் நூல்' என்றது பற்றிப் பதினுன்கு சாத்திரங்களேயும் கொள்ளுதல் வேண்டும்.

திருமுறைகள் பன்னிரண்டு என்பது புறவிருள் நீக்கும் சூரியர் பன்னிருவர் ஆதல் போல, அகவிருள் நீக்கும் அருள் முறைகள் பன்னிரண்டாக உள்ளன என்பதைக் குறிக்கும். திருமுறை ஆசிரியர் இருபத்தெழுவர்; அளவு படாத வானவெளியின் இடத்தை அளவு படுத்தி உளங்கொள்ள வைப் பன இருபத்தேழு நட்சத்திரங்கள். அது போல, முதல்வன் திருவருளே நம் உணர்வினுல் அளவுபடும்படி விளக்க வந்த அருளாசிரியர்கள் அதே எண் ணிக்கையை உடையவராயினர்.

பதினுன்கு சாத்திரங்கள் வித்தை கள் பதினுன்கு என்னும் மரபைக் குறிப் பன.

திருமுறைகள் பன்னிரண்டும் சாத் திரம் பதினுன்கும் சேர்ந்து இருபத் தாறு நூல்கள் ஆகும். இது முதல்வன் வெளிப்படும் அருவுருவ நிலே ஒன்றும், உருவமாகிய மகேசுவர மூர்த்தம் இரு பத்தைந்தும் ஆக இருபத்தாறு தடத்த இயல்புகளேக் குறிப்பால் உணர்த்தும்.

இவ்வுண்மைகளே யெல்லாம் தெளி விக்க வல்ல ஆசிரியர்களே ஆணேயர் அவர்கள் நியமித்திருப்பது பாராட் டிற்கு உரியது. அவ்வாசிரியர்கள் மூலம் அரியவற்றைக் கற்றுணர்ந்து குற்றம் நீங்கிக் குணமும் மெய்யுணர் வும் நிரம்பப் பெற்றுத் தெய்வ நெறி யைத் தமிழ் நாடு எங்கணும் பரப்பி யும் விளக்கியும் நலன் எய்துவித்தும் எய்தியும் உய்யுமாறு பயிற்சி பெறு வோர்க்குச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் அருள் புரியுமாறு வேண்டு கின்றேம்.

இப்பயிற்சி நிலேயத்தின் ஆசிரியர் களுக்கும், இதனே அமைத்து நடாத்தும் ஆணேயர், துணே ஆணேயர் முதலியவர் களுக்கும், மற்றும் இங்கு வந்துள்ள அனேவர்க்கும், மீனுட்சி சுந்தரனுகிய அப்பெருமான் இம்மை மறுமை நலன் களே வேண்டியாங்கு அருள் புரியுமாறு அப்பெருமான் திருவடிகளே வழுத்து கின்றேம்.

எல்லாம் அரன் நாமமே சூழ்க!

வையகமும் துயர் தீர்கவே!!



சங்கு தீர்த்தக் குளத்தின் தோற்றம்
திருக்கழுக்குன்றம்

திருவாசகமும் சங்க நூல்களும்

சங்க நூல்களின் மேன்மை :

சங்க நூல்கள் தமிழ் மொழிக் கணுள்ள பலதிற நூல்களுள்ளும் மிகவும் பழைமையும் பெருமையும் வாய்ந்தனவாகும். இடைக்கால நூல்களும் பிற்கால நூல்களும் தோன்றுதற்கமைந்த அடிப்படையாகவும் அறிவின்ப ஊற்றாகவும் அமைந்த சிறப்புடையவை சங்க நூல்களே என்பதனை, அறிஞர் அனைவரும் உணர்வர்.

பத்துப்பாட் டாதிமனம்
பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே

எனப் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள் சங்க நூல்களைப் பாராட்டி மகிழ்கின்றனர். ''சங்கமலி செந்தமிழ்'' என்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆர்வ மிகச் சங்கத் தமிழைப் போற்றுதல் காணலாம்.

செவ்விய புலமைச் செல்வியாராய ஔவைப் பிராட்டியாரும் ''சங்கத் தமிழ் மூன்றுந்தா'' என்று இறைவனை வேண்டுதலால், சங்கத் தமிழின் உயர்வினை வெள்ளிடை விலங்கல் என யாவரும் தெள்ளிதின் உணரலாம்.

'ஏணி வைத்துப் பார்த்தாலும் முன்னை நூற் செய்யுட் புலமைக்குப் பின்னை நூற் செய்யுட் புனைவு சிறிதும் எட்ட மாட்டாததாகவே தாழ்ந்து நிற்கின்றது. பத்துப் பாட்டுப் போன்ற நூல்களின் இரண்டுவரிகட்குப் பிற்காலச் செய்யுட்கள் இரண்டிலக்கம் சேர்ந்தாலும் ஈடாக மாட்டா' எனச் சிவத்திரு. மறைமலை யடிகள் சங்க நூல்களின் பெருமையினை மிக வியந்து புகழ்ந்துரைப்பர்.

'அகமும் புறமும் ஆகிய பொருள்களை இயல் நெறியில் திறம்பாமல் உலகியல் ஒழுக்கத்தோடு இயைத்துப் புலனெறிவழக்கமாகச் செய்யுள் இயற்றும் திறம், சங்க காலத்துப் புலவர்களுக்கு அமைந்தது போலப் பிற்காலத்தார் பாற்காண்டல் அரிதாகும். மொழி வளமும், பொருள்களின் இயற்கையை உள்ளபடி எடுத்து விளக்கும் ஆற்றலும், உவமையழகும், ஊன்றிப் படிப்பார்க்கு உணர்ச்சி இன்பம் ததும்பச் செய்யும் இயல்பும் ஒருங்கமைந்து விளங்குவன சங்க இலக்கியங்களேயாம்' எனப் பண்டிதமணி மகாமகோபாத்தியாய கதிரேசச் செட்டியார் அவர்கள், சங்க நூல்களின் மேன்மையினை நன்கினிது தேற்றுவர்.

சங்க நூல்கள் அரிய பெரிய கருத்துக்களை விளக்குவன; இயற்கைப்பொருள்களையும் காட்சிகளையும் எழிலுறப் புனைந்துரைப்பன; ஆராயுந்தோறும் பெருகிச் செல்லும் நுணுக்கங்களையுடையன; மனித வாழ்விற்கு இன்றியமையாத பல உயரிய உண்மைகளை உணர்த்துவன; தூய இனிய கலைத் திறங்கள் செறிந்தன; நமது தமிழ் நாட்டின் பண்டைய வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளுதற்குரிய கருவிகள் ஆகத் திகழ்வன; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்தனவாய் விளங்கி வரும் சங்க நூல்களின்அருமை பெருமைகளுக்கு ஓர் அளவே யில்லை எனலாம்.

சங்ககாலச் சான்றோர்களும் சமயாசிரியர்களும் :

இத்தகைய சங்க நூல்களுக்கும், நம் சைவத் திருமுறை நூல்களுக்கும் தம்முட் பெரிதும் தொடர்புண்டு. ஆனால்

அத்தொடர்பினை நம்மிற் பெரும்பாலோர் நன்கினிதுணர்ந்து போற்றுவதில்லை. சங்க நூல்களும் சைவ நூல்களும் வெவ்வேறானவை என்றும், இவையிரண்டினுக்கும் ஏதுமே தொடர்பில்லை என்றும், தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற சங்ககாலச் சான்றோர்கள் பலரும் வேற்றுச் சமயச் சார்பினராவர் என்றும் சிலர் கூறுவது உண்டு! ஆயினும், உண்மையாக ஆராய்ந்து காணவல்லார்க்குச் சைவ சமய ஆசிரியர்கள் சங்க காலச் சான்றோர்களின் நெறியினையே தழைத்தினிது வளர்ந்தோங்கச் செய்தவர்களாவர் என்னும் உண்மை புலனாகாமற் போகாது.

சைவ சமய ஆசிரியர்கட்குச் சங்க காலச் சான்றோர்கள்பாற் பெருமதிப்பிருந்தது என்னும் செய்தி, அவர்களின் திருமொழிகளாலேயே புலனாகின்றது. ''சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும், உறைவான்உயர்மதிற்கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்'' என, மாணிக்கவாசகர், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளே சங்கமிருந்து மதுரைக்கண் தமிழாராய்ந்த செய்தியினைப் பெரிதும் போற்றிக் குறிப்பிடுதல் காணலாம். ''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற் கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்'' எனத் திருநாவுக்கரசரும், ''அற்றன்றிஅந்தண் மதுரைத் தொகை ஆக்கினான்'' எனத் திருஞானசம்பந்தரும், சான்றோர்கள் பலர் சங்கமிருந்து தமிழாராய்ந்தமையினை அன்பும் ஆர்வமும் மிகப் பாராட்டுகின்றனர். சங்க கால வள்ளல்களுள் ஒருவனாகிய பாரி என்னும் வள்ளலைப் பற்றிக் ''கொடுக்கிலா தானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை'' எனச் சுந்தர மூர்த்திகள் குறிப்பிடுகின்றார். ''பொய்யடிமை இல்லாத புலவர்'' என்பதனை விளக்கப்புகும் நம்பியாண்டார் நம்பிகள், ''தரணியிற் பொய்ம்மை இலாத் தமிழ்ச் சங்க மதிற்கபிலர், பரணர் நக்கீரர் முதல் நாற்பத் தொன்பது பல் புலவோர்'' என்றருளிச் செய்கின்றார்.

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய
அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும் உள, நோன்றலை
மேதி பாயப்
பால்பாய் முலைத்தோய் மதுப்பங்கயம்
பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் உள, செய்யுள்
மிக்கேறு சங்கம்

என வரும் மூர்த்தி நாயனார் புராணப் பாடலில் சேக்கிழார் பெருமான், ''சங்கம்'' பற்றிக் குறிப்பிட்டு அழகுற மொழிதல் அறிந்தின்புறற் பாலது. இவ்வாற்றால் சங்கச் சான்றோர்கள் நெறியும், நம் சமயாசாரியர்களின் நெறியும் தம்முட் பெரிதும் வேறுபட்டன அல்லவாதல் உணரப்படும். இத்தகைய சங்ககால நெறியினை அதற்கு இடைக்காலத்தில் நேர்ந்த பலதிற இடுக்கண்களினின்று தடுத்துக் காப்பாற்றிச் சமய நெறியாக வளர்தற்குப் பல்லாற்றானும் வழிகோலியவர் மாணிக்கவாசகரே யாவர் என்பதுணரற்பாற்று.

திருவாசகம் சங்ககாலம் மருவிய செந்தமிழ் நூல் :

மாணிக்கவாசகரின் திருவாசகம் தோன்றிய காலம் சங்க காலத்தை அடுத்து மிக நெருங்கிய காலமாகும். தேவார ஆசிரியர்களின் பாடல்களிற் போலப் பல்லவர்களைப் பற்றியும் வேறு பிற அரசர்களைப் பற்றியும் திருவாசகத்தின்கண் குறிப்புக்கள் காணப்படவில்லை. ''தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக்கூவாய்'' எனத் தமிழ் மூவேந்தர்களைப் பற்றிய குறிப்பு மட்டுமே திருவாசகத்தின்கண் உளது. திருவாசகப் பாடல்களின் அமைப்பும் சொற்பொருண் மரபமைதிகளும் பிறவும், சங்ககால நூல்களின் இயல்புக்கேற்பவே பெரிதும் இயைந்தொளிர்கின்றன. திருவாசகப் பாடல்களின் அமைப்புகளே, அவை சங்க காலத்தை அடுத்து நெருங்கித் தோன்றியமைக்குச் சான்று பகர்கின்றன.

ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே

எனத் தொல்காப்பியத்துள் நால் வகைப் பாக்களினியல்புகளே கூறப் பட்டனவன்றிக் ''கட்டளைக் கலித் துறை'' ''விருத்தம்'' என்னும் பாடல் களுக்கு இலக்கணம் வகுக்கப் பட வில்லை. கி.பி. மூன்றும்நூற்றாண்டிற்கு முற்பட்ட பழைய செந்தமிழ் நூல் களில் ஒரு சிறிதும் காணப்படாத ''கட்டளைக் கலித்துறை'' என்னும் பாவானது, அம்மூன்றும் நூற்றாண்டின் இடையில் எழுந்த திருவாசகம் திருக் கோவையாரின்கண்தான் முதன் முதற் காணப் படுகின்றது. இவ்வகைப் பாடல்கள், தேவாரத்துள் ''திரு விருத்தம்'' என்னும் பெயரால் வழங் கப்பட்டிருத்தலை உற்று நோக்குங்கால், இஞ்ஞான்று மிகுதியாய் வழங்கி வரும் விருத்தப்பாக்கள் பலவும் இக்கட்டளைக் கலித்துறையினின்றே பிறந்து பல திற மாய்ப் பெருகலாயின என்பது நன் கினிது புலனுகும்.

இக் கட்டளைக் கலித்துறை என்னும் செய்யுள் வகையானது, பண்டைக் காலக் கலிப்பாவுக்கும், பின்றைக்கால விருத்தப்பாவுக்கும் இடைப்பட்ட தொரு காலத்தில் தோன்றியதாகும். ''கலித்துறை'' என்னும் பெயரால் அது பண்டைக் கலிப்பாவின் இனமா தலும், ''திருவிருத்தம்'' என்னும் பெயரால் அது பிற்கால விருத்தப் பாக்களுக்கு அடிப்படையாதலும் பெறப்படும். இவ்வாற்றுல் சங்க காலத்தை அடுத்துத் தோன்றி, முன்னைப் பழநூற்கும் முன்னைப் பழ நூலாய்ப் பின்னைப் புதுநூற்கும் பேர்த் தும் அப்பெற்றியதாய், இலக்கியம் கவிதை என்னும் துறைகளில் ஒரு புதிய வழியினை வகுத்துக் காட்டி வளர்த்து நின்ற திருவாசகத்தின் சிறப்பினை, நாம் பெரிதும் உணர்ந்து போற்றற்பாலம்.

திருவாசகம் சங்ககாலச் செந்நெறி நூல் :

இம்மட்டோ! திருவாசகத்தின்கண் உள்ள முதல் நான்கு அகவல்களும், பத்துப்பாட்டு என்னும் சங்க நூற்றொ குதியின்கண் வரும் அகவல்களின் நடையமைப்பிற்குச் சிறிதும் குறையா மல் சிறந்துயர்ந்த செவ்விய நடையின வாய், அவற்றோடு ஒரு புடையொப் புமை யுடையனவாய்த் திகழ்கின்றன. திருவெம்பாவை என்னும் திருவாசகப் பகுதி, பண்டைத் தமிழ்ப் பெண்கள் மழை வளம் குறித்தும், நல்ல கண வனைப் பெறுதல் குறித்தும் நிகழ்த்திய தாகப் பரிபாடல் கலித்தொகை முத லிய சங்க நூல்கள் கூறும் தைந்நீராட லையே, ஓராற்றுல் மார்கழி நீராடல் என வைத்துப் பாடுகின்றது.

திருவாசகத்தின்கண் போதரும் திருவெம்பாவை திருவம்மானை திருப் பொற்சுண்ணம் திருக்கோத்தும்பிதிருத் தெள்ளேணம் திருச்சாழல் திருப்பூ வல்லி திருவுந்தியார் திருத்தோள் நோக்கம் திருப்பொன்னூசல் முதலிய மகளிர் விளையாடல்களை ஒட்டியபாடல் கள் பலவும், சிலப்பதிகார அரங்கேற்று காதை யுரையில் அடியார்க்கு நல் லார் எடுத்துக் காட்டும் ''சிந்துப் பிழுக்கை'' எனத் தொடங்கும் கலி வெண்பா மேற்கோளால் அறியப் பெறும் பழந்தமிழ் மகளிரின் ஆடல் பாடல்களையே பெரிதும் தழுவி யமைந் தனவாகக் காணப்படுகின்றன.

திருவாசகத்தின்கண் வரும் திருவம் மானை திருப்பொன்னூசல் திருப்பொற் சுண்ணம் என்பன சிலப்பதிகார வாழ்த் துக்காதையில் வரும் அம்மானை ஊசல் வள்ளைப் பாடல்களை நமக்கு நினைவூட்டு கின்றன.

இறைவனுக்குரிய நாடு நகரம் ஆறு மலை ஊர்தி படை பறை தார் கொடி குடை என்னும் பத்துறுப்புகளையும் பாடும் திருவாசகக்கீர்த்தித் திருவகவல், திருத்தசாங்கப் பாடல்கள்,

படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய

என்னும் தொல்காப்பிய நூற்பாவினைத் தழுவி யமைந்தன போலக் காணப்படு கின்றன. ஆசிரியர் நச்சினார்க்கினியர், இப் பத்துறுப்புகளையும் பிற்காலத்தார் ''சின்னப்பூ'' என்று கூறுவர் என ''வழக்கொடு சிவணிய வகைமை யான'' (தொல். புறம். 31) என்னும் நூற்பாவுரையிற் கூறுவர்.

இனி, இறைவன் துயில்கின்றானாகை வைத்து, வைகறைப்பொழுதில் அடி யார்கள் அவனைச் சென்று கண்டு துயிலுணர்த்தி வணங்கி, எமக்கு அருள் செய்க என வேண்டுவது போல அமைந் துள்ள திருப்பள்ளி எழுச்சி என்பது,

> தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
> சூதர் ஏத்திய துயிலெடை நிலை

என்னும் தொல்காப்பிய விதிக்கேற்ப அமைந்ததே யாகும். திருக்கோத் தும்பி, குயிற்பத்து என்னும் திருவா சகப் பதிகங்கள்,

> உறுப்புடை யதுபோல் உணர்வுடையதுபோல்
> மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்
> தும்
> சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
> செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்

என்பன போலும் விதிகளை ஒட்டி யமைந்தனவாகும். அன்னைப்பத்து என்பது ஐங்குறுநூற்றினை நம்ம னோர்க்கு நினைவூட்டுகின்றது. இங்ங னமே பிற பகுதிகளும் கூட ''விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'' என்னும் தொல்காப்பிய விதியைத் தழுவியே அமைந்தனவாகும் என்பதில் ஐயமில்லை.

திருவாசகம் சங்கநூற் சாயல் செறிந்த செந்தமிழ் நூல் :

இவையே யன்றித் திருவாசகம், சங்க நூல்களைப் போலவே சொற் பொருட் கருத்துக்களைத் திட்ப நுட் பம் செறிய வழங்கும் பெற்றிமை மிக்குத் திகழ்தலும், கருதி யுணர்ந்து மகிழற்பாற்று. திருவாசகத்தின்கண் சங்கநூற் சொற்றொடர்களையும் மரபு களையும் கருத்துக்களையும், நினைப்பூட்டு வனவாகப் போதரும் இடங்கள் பலப் பல உள்ளன. ''பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை'' என்னும் திருவாச கம், ''மகதநன்னாட்டு வாள்வாய் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபம்'' ''ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள், பட்டி மண்ட பத்துப் பாங்கறிந் தேறுமின்'' என்னும் சிலப்பதிகார மணிமேகலைப் பகுதிகளை நினைவூட்டுகின்றன.

''ஓத உலவா ஒரு தோழந் தொண் டருளன்'' என்னும் திருவாசகம், ''உகாஅ வலியின் ஒருதோழங்காலம், அறாஅ தணிந்தாரும் தாம்'' என்னும் பரிபாடற் பகுதியாற் பொருள் விளக் கம் பெறுகின்றது.

''விச்சுக்கேடு பொய்க்காகாது'' என் றும், ''கீழ்ச் செய்தவத்தாற் கிழியீடு நேர்பட்டு'' என்றும் வரும் திருவாச கம், ''விரகின்மையின் வித்தட்டுண் டனை'' எனவும், ''விறகொய்மாக்கள் பொன்பொற் றன்னதோர் தலைப்பா டன்றவன் ஈகை'' எனவும் வரும் புற நானூற்றுப் பகுதிகளை ஒத்துக் காணப் படுகின்றன. இன்னோரன்னவை பலப் பல.

இவ்வாற்றால் திருவாசக நூல் முழு வதும் சங்கநூற் பண்பாட்டினையே ஏற்றுப் போற்றித் தழுவி இனிதமைந் துள்ளமை தெளிந்து கொள்ளலாம். மேலும், வடசொற் கலப்புப்பெரி தும் மிகுந்த பிற்கால நூல்கள் போலல் லாமல், வடசொற்கள் நூற்றுக்கு ஏழெட்டு விழுக்காட்டின் மேற்படாத தனித்தமிழ் வழக்கிலேயே அமைந்த தாய்ப், புராணக் கதைகள் அளவின்றி விரவாததாய் விளங்குதலும், திருவா சகத்தின் சங்க நூற் சாயலை வலியுறுத் தப்போதிய சான்றுகளாகும்.

திருவாசகம் இலக்கியப் பேரொளியாய சிறந்த திரு நூல் :

இவ்வாற்ருனெல்லாம் ''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே'' எனத் தானே பாடுமாறுபோல, முன்னைப் பழையசங்க நூல்களின் சாயலைத் தழீ இயும், பின்னைப்புதிய இலக்கியங்களின் தோற்றத்திற்கு வழிகோலியும், இரண் டிற்கும் இடை நடுவே ஓர் இலக்கியப் பேரொளியாக இலங்கிவரும் திருவாச கத்தின் பலதிறச் சிறப்புகளையும் நாம் ஆய்ந்துணர்ந்து, ஓய்ந்த வேளை களிலெல்லாம் அதன்கண் தோய்ந் தோதித் திளைத்தின்புறுவோமாக!

உள்ளம் உருக்கி உணர்வைச் சிவமாக்கும்
தெள்ளு தமிழ்த்திரு வாசகம்தான்—
ஒள்ளியசீர்ச்
சங்கநூற் பண்பெல்லாம் தக்காங்கேய்ந்
தச்சாயல்
விஞ்சி மிளிரும் மிக!

—ஆசிரியர்.



2 திருவானைக்காத் தலவரலாற்று ஐதிகக் காட்சி.

சங்க நூல்களின் சிறப்பு

''சங்கத் தமிழ்மூன்றும் தா'' என்றே வேண்டிநின்று
துங்கமிகும் ஔவை தொழுததனுல்—நன்குயர்ந்த
இன்பஎழிற் சங்க இலக்கியநன் மாண்பெல்லாம்
மன்பெரிதும் தேர்கோம் மதித்து! (1)

வையையும் காவிரியும் வான்பொருநை பாலாறும்
செய்யதமிழ் நாட்டைச் செழிப்புறுத்தும்;—மெய்யதுபோல்
சங்கஞ்சார் நூல்கள் தமிழ், தமிழர்ப் பண்படுத்தி
இங்கெஞ்சாச் சீர்விளைக்கும் இன்று! (2)

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்ருய்,—விலைவரம்பின்று
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளுசங்க நூலின் திறம்! (3)

செகப்பிரியர், சாசர், திகழ்பெர்ஞர்ட் ஷா நூல்
மிகப்பெரிதும் தம்மொழியின் வேறுற்—றிகற்படல்போல்
அன்றி, இரண் டாயிரம்ஆண் டாகியும், சங்கநூல்
ஒன்றுபளிங் கின்விளங் கும்! * (4)

'செகப்பிரியர் பேசிய சீர்மொழி' என்று
மிகப்பெரிதும் கொள்கின்ருர் வீறு!—தகச்சிறிதும்
வள்ளுவர் தொல்காப்பியஞர் வாய்மலர்ந்த செந்தமிழ்என்று
உள்ளி,இன் புற்றிலோம் நாம்! ** (5)

''அகமும் புறமும் அளாய பொருளாய்த்
திகழும் அறிவின் தெளிவாய்''—நிகரிலின்பத்
தேனமிழ்தாய், இன்பம் தெவிட்டாத சங்கநூல்
வானமிழ்தும் கைப்பிக்கும் மற்று. (6)

கருத்தெளிமை, நல்லியற்கைக் காட்சி, நுணுக்கம்,
திருத்தமிகு வாழ்க்கைத் திறங்கள், —அருத்தமுயர்
தூய கலைத்திறமை, தொல்வரலாற் றுக்குறிப்பும்,
மேவியொளிர்ம் சங்கநூல் மிக்கு. (7)

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யறிவு வானில்—உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்கு
இல்லை,சங்க நூலிற்போல் இன்பு. (8)

---

*"Just compare the language of Caedmon, of Langland, of Chaucer, of Shakespeare, of Milton and of Tennyson, one with the other, and see to what great an extent the language of one poet differs from the other."

—*Maraimalai Adigal.*

**"Remember that you are a human being with a soul and the divine gift of articulate speech ; that your native language is the language of Shakespeare and Milton and the Bible ; and don't sit there crooning like a bilious pigeon."

Pygmalion, George Bernard Shaw.

மனக்கவலை மாற்றும் மருந்தாகும், எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்,—தனக்கிணையில்
ஞாயிறுய்த் தெள்ளமுத வான்யாறுய்த் தேனூற்றும்
வாயிருஞ் சங்கநூல் மாண்பு. (9)

பலர்க்கும் உவகைநலம் பாரிக்கும் சீர்த்தி
நலக்க விளங்குவதே நல்ல—இலக்கியமாம்
என்னில், இவண் சங்க இலக்கியங்கள் தாம்அதற்கு
மன்னும்எடுத் துக்காட்டாம் மற்று. (10)

மொழிவழியே வாழ்க்கை முறைமைகளை மெய்யே
எழிலொழுக நற்படமா ஈண்டுப்—பழியொழிய
நன்றினிது காட்டுவதே நல்ல இலக்கியமேல்,
சங்கநூ லாம்அவைகள் தாம். (11)

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

பாவை மாநாடுகள் :

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டைக் கோவில்—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

இராமநாதபுரம் சமஸ்தானம் கோயில்கள்—மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

கருவூர் தான்தோன்றி மலை ஸ்ரீ கல்யாண வேங்கட ரமண சுவாமி, கரூர் ஸ்ரீ கல்யாண பசுபதீஸ்வர சுவாமி கோயில்கள்.

திருக்கைச்சினம் ஸ்ரீ கைச்சினேசுவர சுவாமி கோயில், மதுரை ஆதீனம் தலைமை.

திருவாதிரை விழா :

பூவாளூர் திருமூலநாதர் சுவாமி கோயில்—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

மேலக்கரிவலங்குளம் சுவாமி சௌந்திர பாண்டீசுவரர் கோமதியம்பாள் கோயில்.

திருஉத்தர கோசமங்கை ஸ்ரீ மங்கள நாதர் கோயில்.

திருவலங்காடு ஸ்ரீ ரத்தின சபாபதி ஈசுவரர் கோயில்.

திருக்குற்றாலம் திருக்குற்றால நாத சுவாமி கோயில்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி கோயில்—திருப்பொன்னூசல் திரு விழா.

சர்வ வாத்திய நிகழ்ச்சி :

சென்னை—திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர் கோயில் ஸ்ரீ கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில், திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவரர் பல்கலைக் கழக இசைத் துறைப் பேராசிரியர் திரு. பி. சாம்ப மூர்த்தி, பி.ஏ.பி.எல்., அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். ஆணையர் திருமிகு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். சென்னைத் துணை ஆணையர் திரு. ஆ. சிதம்பரம் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். விழாவிற்குப் பெருமக்கள் பலரும் வந்திருந்து சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது.

இராமலிங்க அடிகளாரின் இனிய உரைத்திறன்

முன்னுரை :

திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் வடலூர் இராமலிங்க அடிகளாரை, நாம் ஒரு சிறந்த அருளாளர்; தேனினும் இனிய சிறந்த திருவருட்பா என்னும் செந்தமிழ்த் துதிப் பாடல்களை அருளிச் செய்தவர்; செந்தண்மை அறம் என்னும் சீவ காருண்ய ஒழுக்கத்தினைப் பெரிதும் போற்றிப் பரப்பியவர்; சன்மார்க்கம் என்னும் சான்றாண்மைப் பெருநெறியை உலகுக்கு உபதேசித்து வளர்த்தவர் என்றே நம்மிற் பெரும்பாலோர் பொதுவாக அறிவோம்.

இராமலிங்க அடிகளார், வேறுபல சிறப்புகளும் உடையவராவர். பொருள் ஒன்றேயாக இருப்பினும், அதனையே ஒவ்வொருவரும் தத்தம் இயல்பிற்கும் மனநிலைக்கும் ஏற்பக் கருதி உணர்ந்து போற்றுவர். **எமர்சன்** என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர், வயல் வெளி ஒன்றினையே பலர் தத்தம் இயல்பிற்கும் மன நிலைக்கும் ஏற்பக் கண்டதாகச் சுவைமிகக் கூறுகின்றார்.* அம்முறையில், இராமலிங்க அடிகளாரின் சிறப்பினை நாமும் பலவகைகளில் கருதி உணர்ந்து மகிழலாம். இராமலிங்க அடிகளை ஒரு சிறந்த பதிப்பாசிரியர், ஒரு சிறந்த உரைநடையாளர், 'ஒப்புயர்வற்ற இனிய உரையாசிரியர் எனப் பல நிலைகளில் நாம் கருதி ஆராய்ந்து போற்றுதற்கு வாய்ப்புள்ளது.

இராமலிங்க அடிகள் ஒரு சிறந்த பதிப்பாசிரியர் என்பதனைத் தொண்டை மண்டல சதகம், ஒழிவில் ஒடுக்கம் என்னும் நூல்களை அவர் பதிப்பித்திருக்கும் செய்தியால் உணரலாம். மனுமுறை கண்ட வாசகம் என அவர் வரைந்துள்ள நூலின் அருமைப் பாட்டினால், அரிய உரைநடை எழுதும் ஆற்றலில் அவர் தலை சிறந்திருந்தமை புலனாகும். மற்றும் அடிகளார் உரை இயற்றும் திறனிலும் ஒப்புயர்வற்ற பெருவல்லமை உடையவர் என்பதை, 'ஒழிவில் ஒடுக்கம்' என்னும் நூலின் சிறப்புப் பாயிரத்திற்கு அடிகளார் வரைந்தருளியுள்ள சிறப்பான அரிய விரிவுரையினால் நாம் அறிகின்றோம்.

அச்சிறந்த விரிவுரையினைப் படித்து மகிழும் போதெல்லாம், ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள், சேனாவரையர் என்னும் உரையாசிரியர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு வகுத்த மாண்பு மிக்க உரையினை வியந்து, 'இவர் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திற்கும் பொருளதிகாரத்திற்கும் உரை வகுக்காமல் போயினரே; அவற்றிற்கும் இவர் உரை வகுத்திருந்தால் எவ்வளவு சிறப்பாகவும் நலம் பயப்பதாகவும் இருந்திருக்கும்' என இரங்கிக் கவலையுற்று நினைந்து வருந்துதல் போல, இராமலிங்கர், திருவாசகம் திருமந்திரம் முதலிய நூல்களுக்கு உரை வகுக்காமற் போயினரே என, நாமும் ஓரளவு கவன்று வருந்த வேண்டியுள்ளது.

சிறப்புப் பாயிரச் செய்யுள் :

இங்ஙனம் நம்மை எல்லாம் பெரிதும் வியந்து மகிழ்ந்து போற்றும்படி செய்யும் நிலையில் அமைந்துள்ள ஒழிவில் ஒடுக்கநூலின்சிறப்புப்பாயிரச்செய்யுளையும், அதற்கு அடிகளார் வரைந்துள்ள

---

*"Seven men went through a field, one after another. One was a farmer, he saw only the grass ; the next was an astronomer, he saw the horizon and the stars ; the physician noticed the standing water and suspected miasma ; he was followed by a soldier, who glanced over the ground, found it easy to hold, and saw in a moment how the troops could be disposed ; then came the geologist, who noticed the boulders and the sandy loam ; after him came the real-estate broker, who bethought him how the line of the house lots should run, where would be the driveway, and the stables. The poet admired the shadows cast by some trees, and still more the music of some thrushes and a meadow lark".

—Ralph Waldo Emerson.

அரிய விரிவுரையின் நுட்பக் குறிப்புக் களையும், ஈண்டு நாம் சுருக்கமாகக் காண்போம்.

வள்ளல் குருராயன் வாதுவென்ற
சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாள்தலைமேல்
வைத்துரைத்தான்—உள்ளத்து
அழிவில் அடுக்குந்தேனை
அன்பரெலாம் உண்ண
ஒழிவில் ஒடுக்கநூல் ஓர்ந்து

இச்செய்யுள் ஸ்ரீகாழிக்கண்ணுடைய வள்ளலார் என்பவர் அருளிச் செய்த 'ஒழிவிலொடுக்கம்' என்னும் சிறப்புப் பாயிரமாக அமைந்திருப்பது. இச் செய்யுள், நாம் மேம்போக்காகப் பார்க்கும்போது ஓர் எளிய சாதாரணமான செய்யுள் போலவே தோன்றுகிறது.

''காழிக்கண்ணுடைய வள்ளலார் என்பவர், குருராயனை வாதில் வென்ற திருஞான சம்பந்தரின் வள்ளற்றன்மை யுடைய மலர்த் தாள்களைத் தம் தலைமேல் வைத்துப் போற்றி, தற்போகத்தின் அழிவின்கண் விளைகின்ற சிவானந்தம் ஆகிய தேனை, அன்பர்கள் எல்லாம் உண்ணுதற்பொருட்டு ஒழிவிலொடுக்கம் என்னும் நூலை ஆராய்ந்து உரைத்தருளினர்.''

என்பதுதான், இப்பாடலின் பொது வான திரண்ட பொருட் குறிப்பாகும்.

சிறப்புப் பொருள் நுட்பங்கள்:

ஆயினும் இச்செய்யுளுக்கு இராம லிங்க அடிகள் மிகவும் நுண்ணிதின் ஆராய்ந்து பல எண்ணரிய நுட்பங் களை, நமக்கு விம்மிதமும் வியப்பும் உண்டாகும் வண்ணம் அழகுற விளக்கி யருளியுள்ளார்.

(1) வள்ளல்: இப்பெயர் இந் நூலின் ஆசிரியருக்குத் தாம் முன்பிருந்த கிரி யாசார்ய நிலைக்கூண் அவ்வாசிரிய மரபின் வழித்தாய் வந்த காரண அபிடேகச் சிறப்புப் பெயர். இது, பின்னர் அவர் ஞானாசார்ய நிலைக்கண் தமது அருள் ஞான நோக்கான் இயைந்த 'கண்ணுடைய' என்னும் காரண விசேடணம், இசையெச்ச நிலையின் நிற்ப நின்றது.

(2) இவ்வாசிரியர் பெயர் 'வள்ளல்' என இச் செய்யுளின் இடை கடை களின் ஒன்றில் நிறுத்தாமல், முதலடி முதல் சீர் எதுகைத் தொடைக்கண் நிறுத்தப் பெற்றமை, இவ்வாசிரியர் சன்மார்க்கம் முதலிய மார்க்கம் நான் கனுள், தலைமையில் தலைமையாய உத் தம சன்மார்க்கத்தினர் என்பது குறித் தது.

(3) குருராயன்: இது திருஞான சம்பந்தருக்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப் பெயர். ஓதி உணர்ந்து பலநாள் பல சாதனங்களில் முயன்று முயன்று ஆசார்யத் தன்மை ஒருவாறு அரிதில் கிடைக்கப்பெற்றும், ஓர் ஒரு காலங்களில் அவத்தை வயப்பட்டு மயங்கும் மற்றை ஆசாரியர்கள் போல் அல்லாமல், ஓதாமலே வேதாகமாதி களை யெல்லாம் முற்றும் உணர்ந்து, இறைப் பொழுதும் ஒரு சாதனத்தின் முயன்றதின்றி ஞானாசார்ய அருள் இலக்கணங்கள் அனைத்தும் தாமே தம்பால் நிரம்பி நிற்ப அமைந்தவர்; அன்றியும் ஓதி உணர்ந்த அவ்வாசாரி யர்க்கெல்லாம் அவரவர் அறிவின்கண் அருளுருவாய் நின்று அறிவிக்கும் ஆசாரிய உருவாய் வெளி நின்று அனுக்கிரகித்து நிற்பவர்; திருநோக்கம் செய்தல் முதலிய அறுவகைத் தீக்கை களாலும் அன்றித் தமது திருவுருவைக் காண்டல், நினைத்தல், மாத்திரையே, பக்குவர் அல்லாரும் பக்குவராய்ப் பயன் பெற நிற்பவர் என்பவற்றை உணர்த்தும்.

(4) 'குருராயன்' என்பதனை 'வாது வென்ற சம்பந்தன்' என்பதற்கு மேல் நிற்க வைத்த விதப்புக் குறிப்பு, திரு ஞான சம்பந்தர் இவ்வவதாரத்திற்கு முற்பட்ட அவதாரத்தினும் குமார சற்குருவாய்ச் சிவபிரானுக்கும், அகத் திய முனிவருக்கும் உபதேசித்தருளிய

ஆசார்யத் தலைமை உடையவர் என்பது புலப்படுத்தும்.

(5) 'குரு வேந்தன்' என்று கூறுமல் 'குரு ராயன்' என்று கூறியமை, திருஞான சம்பந்தர் தமிழ் நூல் வடநூல் என்னும் இரு வகை நூற்கும் உரியவர் என்பது காட்டும். குரு என்பதன்முதல் நிலை எழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாய் வந்தது; ராயன் என்பதன் முதல் நிலையெழுத்துத் தமிழியல் விதியன்றி ஆரிய வியல் விதிப்படி மொழிக்கு முதலாகி வந்தது. இங்ஙனம் இருவகை இயலும் அமைய, இச்சொல் வழங்கப் பெற்றமை, திருஞான சம்பந்தர் 'மறைப் புலவர்' 'தமிழ்க் குரிசில்' என்னும் கருத்தை வலியுறுத்தற்கேயாம்.

(6) 'ராஜன்' என்னும் சொல்லே பொருள் வேறு படாமல், 'ராயன்' என்று சிறிதே வடிவம் வேறுபட்டு நின்று குருராயன் என்னும் வடிவில் அமைந்தது; அதுபோலத் திருஞான சம்பந்தரும் தமது தெய்வத் தன்மை வேறுபடாமல் உத்தம புருட உருவம் கொண்டு திரு அவதாரம் செய்தருளித் தம்மை அன்பால் உள்ளுன்றி நோக்குபவருக்குக் குமார சற்குரு என்னும் பெயர் கொண்டு, அளவிறந்த சூரியர்களின் உதயம் போன்று ஒளி வீசும் தமது முன்னைய தெய்வத் திருவுருவை விளங்கக்காட்டி நின்றனர் என்பதனைத் தெளிவிக்கும்.

(7) 'குரு' என்பதன் ஈற்றுயிர் மெய்யோடு, 'ராயன்' என்பதன் முதலுயிர் மெய், புணராப் புணர்க்கையாய் நின்றது. அதுபோல சிவானந்த வடிவமாகிய திருஞான சம்பந்தரும், தாம் கொண்டருளிய மானிடத் திரு வுருவோடு புணராப் புணர்க்கையாய் ஒன்றி இருந்தனர்.

(8) 'கு' என்பது இருள். 'ரு' என்பது அருள். 'ராயன்' என்பது விளங்கச் செய்கின்றேன் என்னும் பொருளை உடையது. உயிர்களின் அறியாமை இருளைத் தம் அருளால் போக்கி அறிவு விளங்கச் செய்பவர் திருஞான சம்பந்தர் என்று உணர்க.

(9) 'குரு—ராயன்' என்பது, குறிலிணைக்கு எதிர் நெடில்குறில் எண்ணேடாக நிற்பவும், ஈற்றின் அவ் வெண்ணீடின்றி நிற்பவும் தொடர்ந்த மொழி; ஆகலின் திருஞான சம்பந்தரும் பக்குவர்க்கு மறைப் பொருளாகியும், அதி பக்குவர்க்கு அனுபவப் பொருளாயும் நிற்பவர் என்பது பெறப்படும்.

(10) 'வாது வென்ற சம்பந்தன்' என்பதில் இன்ன வாது வென்றவர் எனக் கிளந்து கூறுமல், பொதுவாக 'வாது வென்ற' என்றது, சமணர்கள் பால் சுரவாதம், அனல் வாதம், புனல் வாதம் என்பனவற்றினை நிகழ்த்திப் பெற்ற வெற்றிகளையும், போதி மங்கைப் புத்தநந்தி சாரிபுத்தன் என்பவர்களைத் தம் அடியார் ஒருவராலும், தமது திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பின் ஒரு சொல்லினல் ஆண் பனையை பெண் பனையாக்கிச் செய்த அற்புதத்தானும் பெற்ற பல வெற்றிகளையும், பொதுவாகத்தொகுத்துக் குறிப்பிடுதற்கு என்க.

(11) 'வாது' என்பதனை இலக்கணையாகக் கொண்டு திருப்பெருமண நல்லூரில் தமது திருமண விழாக்காண வந்த ம்க்கட்கெல்லாம் வீடு பேறு அளித்து அவர்களின் பிறவிப் பெருவாதுகளையும், திருப்பாச்சிலாச்சிரமத்தின்கண் மழவன் மகளார்க்கு அடுத்த முயலக வாதினையும், திரு மருகலின் கண் ஒரு வணிகனுக்கு அடுத்த விட வாதினையும் குறித்தற்கும் ஆம்.

(12) வெற்றி கொண்ட பொருட்டிறன் முதலியவற்றுள் ஒன்றேனும் தோன்றக் கூறுமல் பொதுவாக'வாது' வென்ற என்றது, பிறர்க்கு இங்ஙனம் வெல்லுதல் தம்மாலும் துணைமையானும் பற்பல நாள் பற்பல வகையின் முயற்சி செய்யினும் முற்றுதன, இவருக்குச் செந்தமிழ் பொழியும் திருவாக்கால் ஆண்டாண்டு அவ்வப்பொழுதே முற்றியது என்றற்கு.

(13) 'வாது' என்பது 'குரு ராயன்' என்பதனேடும், 'சம்பந்தன்' என்பத

னோடும் சாராமல் நடு நின்றமையின், அத்துவித நெறியினும்சேராமல், துவித நெறியினும் சாராமல் நின்ற பதித வாதிகளது பயனில் வாதம் குறித்தது எனினும் அமையும்.

(14) எதிரேற்கப்பட்ட எதிர்வினை கீழ்ப்பட மேற்கொள்ளுதல் ஆகிய வினையெழுச்சிப் பொருளில் வந்த 'வெல்' என்னும் பிறவினைப்பகுதியான் எடுத்த 'வென்ற' என்னும் பெயரெச்சம், 'சம்பந்தன்' என்னும் பெயர் கொண்டு முடிந்து, இங்ஙனம் சம்பந்தர் வெற்றி கொண்ட பருவம்அவர்க்கு மிக்க இளங்குமாரப் பருவம் என்பதனைச் சுட்டியது.

(15) 'சிவ ஞான சம்பந்தன்' என்னுது 'சம்பந்தன்' என்றேபொதுவாகக் கூறியமை, சிவ ஞானத்திற்கும்அன்றிச் சிவானந்தம் ஆனந்தாதீதம் என்பவற்றிற்கும் உரிமை பூண்ட இவர்தம் தலைமை நிலை யுணர்த்தும்.

(16) இரண்டாவது அடியில் 'வள்ளல்' என்பது, தாளுக்கே உரிய அடைமொழி. அதனைச் சம்பந்தருக்குக் காரணச் சிறப்புப் பெயராகக்கொண்டு சிலர் பொருள் கூறுதல் பொருந்தாது. அவயவச் சிறப்பான் அவயவிக் குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலும் இன்பம் ஆதலின்.

(17) திருஞான சம்பந்தரின் திருவடிகள் மெய்ஞ்ஞான விளக்கமாய், அருள் மணம் வீசி, பொன்னிறம் பொலிந்து, ஆனந்தம் பெருக்கி, மென்மையுற்று, தண் எனக் குளிர்ந்து, தரிசிப்போர் வியப்புறும் உருவாய்த் திகழ்தலின் 'மலர்த்தாள்' என்றார்.

(18) 'தாள்' என்பது திருவடிகளுக்கும், முயற்சிக்கும், காப்பிடும் கருவிக்கும் உரிய பல பொருள் ஒரு சொல்; ஆதலின் திருவடிகள் தம்மை அடைந்தோரை ஆனந்த நிலையில்சேர்த்தலும், அங்ஙனம் சேர்ந்தோரைக் காத்தலும், சிவத்துடன் சீவனை இடை நின்று கூட்டுவித்தலும் உணர்த்தும்.

(19) 'தலையில் வைத்து' என்னுமல் தலைமேல் வைத்து என்றமை, மறை முடியின் கண் வயங்காநின்ற அச் செல்வத் திருவடியின் சீர்மை தோன்றச் செய்தது.

(20) 'அன்பரெல்லாம் உண்ண' என்பதில், அன்பர் என்பது பொருள் புகழ் முதலியவற்றைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதும் என்று இடைவிடாது அதனையே விரும்பிப் பயில்வோரைக் குறிப்பது.

(21) 'எலாம்' என்பது சரியை முதலிய கன்ம மார்க்கங்களைக் கூறும் பிற நூல்கள் எல்லாம் பருவம் நோக்காமல், சாதி சமய ஆசார விகற்பங்களையே நோக்கிச் சிலரை நீக்கியும் சிலரை நிறுவியும் செல்லுதல் போலாது, உயர்ந்தோர், தாழ்ந்தோர் யாவராயினும் பக்குவமுடையராயின், இந்நூற்கு உரியவராவர் என்று உணர்த்திற்று.

(22) 'ஒழிவிலொடுக்க நூல்' என்பது, ஒழிவிலொடுக்கம் என்னும் நூல் —ஒழிவில் ஒடுக்கம் தரும் நூல் என இருவழிக்கும் பொதுவாகிய சந்தியாக வந்தமையின், தன்னை வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பொது என்று குறித்தது.

(23) 'ஒழிவிலொடுக்க நூலுரைத்தான்' என்பதில், வேற்றுமை சாரியை உருபு முதலிய ஒன்றும் விரியாது நிற்றலின், ஞானசாரம் அன்றிக்கருமாசாரம் ஒன்றும் விரியாத இந்நூலின் நின்மலத் தன்மை தோற்றிற்று.

(24) 'உரைத்தான்' என்பது, ஒருவர் மதி நுட்பத்தால் தாம் கண்டறிந்த மாற்றுயர்ந்தபொன்னின்தன்மையைப் பிறரும் அறிந்து பயன்கோடற்குக் கட்டளைக் கல்லின் உரைத்துக் காட்டல் போல், சுருதி குரு அநுபவத்தால் தாம் அனுபவித்து அறிந்த சிவானந்தப் பேற்றின் தன்மையைப் பக்குவர் அறிந்து பயன் கொள்ளுதற் பொருட்டு நூற்கண் உரைத்துக் காட்டினர் என்று குறிப்புறுத்திற்று.

(25) 'உரைத்தான்' என்னும் பயனிலை செயப்படு பொருளின் இறுதியின் இயையாமல், செயப்படு பொருட்கும் கருவிப் பொருட்கும் மேல், 'தாடலைமேல் வைத்து' என்பதன் இறுதியில் தொடர்ந்து நின்றது. என்னெனின், சிவஞான தீக்கை யுடையரராய் உரைத்தார் என்பதும் அன்றித் தமது ஆசாரியர் திருவடி சான்ருகத் தாம் கண்ட அநுபவத்தை விளங்க உரைத்தார் என்பது குறித்தற்கு.

(26) இச் செய்யுள்தான், கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பா என்னும் முப்பாவினும் சிறந்த வெண்பாவாகலின், இந்நூல் சரியைநூல் கிரியைநூல் யோகநூல் என்னும் முந்நூலினும் சிறந்த ஞான நூல்என்பது புலனும்.

(27) இச்செய்யுள் ஈரசையான் ஆசிட்டு இருவகைத் தளைதழீஇ ஒழுகிசைச் செப்பலோசையான் வந்ததாகலின், இந்நூல் ஆகம முடிவும் வேத முடிவும் கூறும் இருவகை நெறியும் ஒருவகை நெறியாய்த் தழீஇக் கொண்டு இருத்தலை உணர்த்தும்.

(28) இச்செய்யுள் ஒன்று அடுத்த 36 எழுத்துக்களைக் கொண்டு நிற்றலின், இந்நூல் பாசம் ஒன்று அடுத்த தத்துவம் 36 என்றும், அவற்றின் தன்மையிவை என்றும் உணர்த்துதல் குறித்தது.

(29) இச்செய்யுள், நான்கு அடுத்த 36 அசைகளை அசைத்து நிற்றலின், இந்நூல் அத்தத்துவம் முப்பத்தாறினையும், நியதிகளைதல் முறையை உணர்த்திற்று. முப்பத்தாறின் மேல் நான்கு அடுத்தது என்னெனின், ஆன்ம தத்துவத்தின் வன்மை தோன்றற்கு ஓர் அசையும், வித்தியா தத்துவத்தின் வலிமை தோன்றற்கு ஓர் அசையும், நாத தத்துவத்தின் பெருமை தோன்றற்கு ஈரசையும் அமைந்தன என்க.

(30) 15 சீர்கள் கொண்டதாய் இஃது அமைந்திருத்தலின், ஆசாரியத் தன்மை சீடத் முதன்மை முதலிய 15 பொருள்களை விளக்குதல் பெறப்படும்.

(31) எழுவகைத் தளைகளால் இச் செய்யுள் அமைந்திருத்தலின், இந்நூல் ஆன்ம தரிசனம் அருட்டரிசனம் பரை தரிசனம் முதலிய எழுவகை நிலைகளையும் அறிவிப்பதாதல் உணரலாம்.

(32) தனிச் சொல் பெற்று நான்கு அடியுடன் நடத்தலான், இந்நூல் கூறும் பொருளும் சுத்தசரியை சுத்த கிரியை சுத்தயோகம் சுத்தஞானம் என நான்கு பாதத்தோடு நடப்பது விளங்கும்.

(33) ஒரூஉத் தொடையோடு முத் தொடையான் இயன்றதாகலின், இந்நூல் சுருதி குரு அநுபவம் என்னும் மூன்றும் ஒத்து இயன்றது என்றறியலாம்.

(34) இச் செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானும் குறிப்பானும் விளங்க விரித்தலின். வாகைத் திணையுள் சால்பு முல்லைப் பொருளின்பாற் பட்டது ஆகும்.

இங்ஙனம் முற்றும் முறைநிலை கூறப் புகின் விரியுமாகலின், ஒருவாறு காட்டினம்; மற்றவையும் இவை கொண்டு உணர்க.''

முடிவுரை :

இராமலிங்க அடிகளார், ஒழிவிலொடுக்க நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளுக்கு 'வரைந்தருளிய சிறந்த விரிவுரையின் நுட்பங்களை, நாம் இது காறும் இயன்ற அளவு கண்டுணர்ந்தோம். அடிகளாரின் இனிய விரிவுரை எத்துணை நுண்ணியதாய்ச் சிந்தனைக்கு விருந்தாய்ச் சிறந்து திகழ்கின்றது! என்பதனைக் கலைத்திறம் காண்பார் அனைவரும் கருதி உணர்ந்து களிதுளும்புவர் என்பதில் ஐயமில்லை. அடிகளாரின் அரிய விரிவுரையால் அவர்தம் புலமை நலச் சிறப்பை மட்டுமே யன்றி, அவர்க்குத் திருஞானசம்பந்தர்பால் இருந்த அளவிலாப் பற்றும் பக்தியும் பிறவும் கூட, நமக்குத் தெள்ளிதிற் புலனுகின்றன. அவற்றை யெல்லாம் உணர்ந்து போற்றி, அவர்தம் திருவுள்ளக் குறிப்பின் வழி ஒழுகி, நாம் அனைவரும் ஈடேறி நலம் பெற முயலுவோமாக.

—ஆசிரியர்.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

ஸ்ரீ ஆண்டாள்—ஸ்ரீ ரங்கமன்னர்—ஸ்ரீ கருடாழ்வார்
ஸ்ரீ வில்லிபுத்தூர்.

By Courtesy :
'The Divya Kshetras in India Souvenir'.

தலப் பெயர்களில் கவிப் புனைவுகள்

முன்னுரை :

தமிழ் நாடு எண்ணிறந்த தலங்கள் நிறைந்தது. பழமையும் பெருமையும் வாய்ந்த எண்ணிறந்த தலங்கள், தமிழ் நாட்டிற் போல இத்துணை மிகுதியாக வேறு எங்கணும் இல்லை என்றே கூறலாம். தமிழ் மக்களின் சமய சமுதாயத் துறைகளிலும், கலையியல் பொருளியல் துறைகளிலும், தலங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. தலங்களை இறைவனின் திருவருள் விளங்கிப் பெருகும் ''ஆற்றல் ஊற்றகங்கள்'' என்றே கூறலாம். ஒவ்வொரு தலத்திற்கும் ஏதேனும் குறிப்பிட்ட தனிச் சிறப்பும் தெய்விகப் பெருமையும் அமைந்து திகழக் காண்கின்றோம். அதனால்தான் வாழையடி வாழையாகவும், பன்னூற்றுக் கணக்கான ஆண்டுகளாகவும், இறைவன் எழுந்தருளி விளங்கும் இத்திருத் தலங்கள் பலவும், மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து கொள்ளை கொண்டு, அவர்களின் மதிப்பிற்கும் வழிபாட்டிற்கும் உரியனவாகப் பெருமை யுற்றுத் தொன்று தொட்டுப் பிறங்கி வருகின்றன.

தலப் பெயர்கள் :

அக்காரணம் பற்றித்தான், தமிழ் மக்கள் அவ்வத் தலங்களிலுள்ள இறைவனின் பெயர்களை மட்டுமேயன்றி, அந்தந்தத் தலங்களின் பெயர்களையும் கூட மிகவும் புனிதமும் சிறப்புமுடையதாகப் போற்றி வருகின்றனர். மதுரை, பழநி, சிதம்பரம், அண்ணாமலை, திருவேங்கடம், திருமலை, விருத்தாசலம், தணிகாசலம் எனப் பல பல தலங்களின் பெயர்களைப் பெரியோர்கள், தம் மக்களுக்கு வைத்து வழங்கி வருதல் காணலாம். தலங்களின் பெயர்களையே மந்திரங்கள் என்றும், அப் பெயர்களை இடைவிடாமல் கூறிக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் இருத்தலே ஒரு சிறந்த வழிபாடு என்றும், நமது பண்டைப் பெரியோர்கள் கருதி வந்துள்ளனர்.

> படிக்கின்றிலை பழநித் திருநாமம்;
> படிப்பவர்தாள்
> முடிக்கின்றிலை...

எனவரும் கந்தரலங்காரப் பாடலில் அருணகிரிநாதர், பழநி என்னும் திருநாமத்தினை இடைவிடாமல் சொல்லிக் கொண்டிருத்தலும், அங்ஙனம் இடைவிடாமல் சொல்லிக் கொண்டிருப்பவர்களின் திருவடிகளைத் தலைமேல் ஏற்றுச் சூடிக் கொண்டு மகிழ்தலும், சிறந்த செயல்களாகப் புலப்படுத்தியுள்ளமை காணலாம்.

திருநாவுக்கரசர் :

இவ்வாறே திருநாவுக்கரசர் பெருமானும், பூந்துருத்தி, நெய்த்தானம், ஐயாறு, பழனம், சோற்றுத்துறை, வலஞ்சுழி, கண்டியூர், குடமூக்கு, வெண்காடு என்னும் தலங்களின் பெயர்களை நாம் இடை விடாமல் சொல்லிக் கொண்டிருந்தால், நம்முடைய தீவினைகள் எல்லாம் நீங்கி ஒழிதல் திண்ணம் எனக் குறிப்பிட்டருளுகின்றார்:

> பூந்துருத்தி பூந்துருத்தி என்பீ ராகில்
> பொல்லாப் புலால்துருத்தி போக்க
> லாமே. [1]
>
> நெய்த்தானம் நெய்த்தானம் என்பீ ராகில்
> நிலாவாப் புலால்தானம் நீக்க
> லாமே. [2]
>
> ஐயாறே ஐயாறே என்பீ ராகில்
> அல்லல்தீர்ந் தமருலகம் ஆள
> லாமே. [3]

பழனம் பழனமே என்பீ ராகில்
பயின்றெழுந்த பழவினைநோய் பாற்ற லாமே. [4]

சோற்றுத்துறை சோற்றுத்துறை என்பீ ராகில்
துயர்நீங்கித் தூ நெறிக்கட் சேர லாமே. [5]

கண்டியூர் கண்டியூர் என்பீ ராகிற்
கடுகநும் வல்வினையைக் கழற்ற லாமே. [6]

வலஞ்சுழியே வலஞ்சுழியே என்பீ ராகில்
வல்வினைகள் தீர்ந்துவா னாள லாமே. [7]

குடமூக்கே குடமூக்கே என்பீ ராகிற்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுக லாமே. [8]

வெண்காடே வெண்காடே என்பீ ராகில்
வீடாத வல்வினைநோய் வீட்ட லாமே. [9]

இங்ஙனம் திருநாவுக்கரசர் முதலிய செந்தமிழ்ச் சான்றோர்கள் பலரும், தலங்களின் பெயர்களைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்திருத்தல், அவற்றின் சிறப்பினை நமக்கு நன்கினிது விளக்கும்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை :

தலங்களின் பெயர்களை, அவற்றின் சிறப்புடைமையும் அருமையும் கருதி, புலவர் பெருமக்கள் பலர், தத்தம் கவிதை நூல்களில் இடம் பொருள் களுக்கு ஏற்ற பெற்றி போற்றிக் குறித்துப் பல அற்புதக் கருத்துக்களை அமைத்து அழகிய கவிதைகள் பாடி யுள்ளனர். அவர்களுள் திருவாவடு துறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும், சிறப் பாகக் குறிப்பிடத் தக்க ஒருவராவர்.

இறைவன்பால் தம்முடைய குறை களையும் குற்றங்களையும் முறையிட்டுக் கொண்டு, தம்மையும் அருள் செய்து காத்தருள்தல் வேண்டுமென விண்ணப் பித்துக் கொள்ளும் முறையில், மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள், பல தலங்களின் பெயர்களைச் சொற்பொருட் சுவை நலம் விளங்கப் பின்வருமாறு பாடியருள்கின்றார்.

[1] இறைவனே நீ எழுந்தருளி விளங்குகின்றகாஞ்சிஎன்னும்தலத்தை அடைந்து, உன்னை நான் பணிய மாட் டேன்; காஞ்சி என்னும் அணிகலன் விளங்குகின்ற மகளிரின் இடைப்பகுதி யினையே, பெரிதும் விரும்பி அடைய முயலுவேன்.

[2] மதுரை மாநகரமாகிய மாட்சிமை மிக்க கூடல் என்னும் தலத்தினை யான் விரும்புவதில்லை; பெண்களோடு சேரும் புணர்ச்சி ஆகிய கூடலையே பெரிதும் விரும்பி விழைவுறுவேன்.

[3] என்னுடைய மனமானது என் றும் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐயாற்றையே (ஐந்து வழி களையே) விரும்பிச் செல்லும்; உன் னுடைய ஒப்பற்ற திருவையாறு என் னும் தலத்தை அஃது ஒரு போதும் விரும்புவதில்லை. யான் உயர் தில்லை சென்று தரிசித்தது இல்லை.

[4] மறைவனம் என்னும் வேதா ரண்யம் ஆகிய தலமானது, கொடிய பாவியாகிய என் விழிகளுக்கு மறை கின்ற வனமாகவே விளங்குகின்றது.

[5] மாதங்க வனம் என்னும் திரு வானைக்கா ஆகிய தலத்தை, யான் சிறிதும் சிந்திக்க மாட்டேன். ஆனால் மாது—அங்க—வனம் (பெண்களுடைய உறுப்பின் அழகு) பற்றியே இடைவிடா மல் நினைத்துக் கொண்டிருப்பேன். (மாதங்கம்—யானை).

[6] திருக்கோலக்கா என்னும் தலத் திற்கு வந்து உன்னை வணங்க மாட் டேன்; வீணாக அழகிய சோலைகள் (கோலம்—கா) தோறும் சென்று சுற் றித் திரிந்து கொண்டிருப்பேன்.

[7] விருப்பங்கொண்டு திருநள்ளாறு என்னும் தலத்திற்குப் போக மாட்

டேன்; என்னை மயக்க விரும்பினள்ஆறு (காதலியின் சொல் வழியில்) நடப்ப தற்கே பெரிதும் அலைவேன்.

[8] திருவாஞ்சியம் என்னும் சிவ தலத்தை நாங்கள் ஒருபொழுதும் வாஞ்சியம் (விரும்ப மாட்டோம்).

[9] உடலின் பரம்—குன்ற (சுமை குறையும்படி) உன்னுடைய திருப்பரங் குன்றம் என்னும் தலத்திற்கு வந்து ஒரு பொழுதும் உன்னை வணங்கித் தொழ மாட்டேன்.

[10] திருக்கருவூர் என்னும் தலத் தின் மீது விடுதற்கரிய ஆசை கொண்டு வணங்குதற்குப் புறப்பட மாட்டேன்; ஆனால் கருவானது ஊர்ந்து செல்கின்ற விடர்க்கு (பிளவு இடத்திற்கு) ப்பெரி தும் ஆசை கொண்டு இருப்பேன்.

[11] வேய் வனமாகிய திருநெல் வேலி என்னும் தலத்தினை யான் வணங் குவதற்குச் சென்று அடையேன்; பெண் களின் தொடி யணிந்த தோள்களாகிய வேய் வனத்தினையே (மூங்கிற் காட் டையே) அடைவேன்.

[12] சான்றோர்கள் தியானிக்கின்ற திருவலஞ்சுழி என்னும் தலத்தினைத் தியானிக்க மாட்டேன்; பெண்களின் உந்தி (கொப்பூழ்) ஆகிய வலஞ்சுழி யினையே நினைத்துக் கொண்டிருந்து உழல்வேன்.

[13] பெண்களுடைய கூந்தலாகிய கருங்காடு ஒன்றையேபெரிதாக மதித்து நின்னுடைய சிறந்த தலங்களாகிய களைப்பசுங்காடு (திருநெல்வேலி), செங்காடு (திருச்செங்காட்டங்குடி), வெண்காடு (சுவேதாரண்யம்) முதலி யனவற்றை மனத்தில் மதிக்காமல் திரிந்து கொண்டிருப்பேன்.

[14] கயிலைக் குன்றம், கொடுங் குன்றம் (பிரான்மலை), கழுக்குன்றம் முதலிய தலங்களாகிய குன்றங்களை நினையாமல், மகளிர் முலைக் குன்றம் ஒன்றையே குறித்து நினைத்துக் கொண் டிருப்பேன்.

[15] பெண்களோடு சேர்ந்து கூடு கின்ற பஞ்சணைப்பள்ளி (பஞ்சு மெத் தைப் படுக்கை) ஒன்றையே விரும்பி, உன்னுடைய அகத்தியான் பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, அரப்பள்ளி, திருச்சிராப்பள்ளி முதலிய தலங்களை யான் விரும்புவதில்லை.

[16] என்னுடைய மனமானது பெரி தும் துடி துடித்து விரும்பிச் சோற்றுத் துறையிலேயே (சாப்பாட்டு வழியிலே யே) எப்போதும் செல்லும்; அதனை விட்டு உன்னுடைய திருச்சோற்றுத் துறை என்னும் தலத்தின் வழியே ஒரு போதும் சென்று உய்யாது.

நீஅமர் காஞ்சித் தலம்உறேன்; மகளிர்
நிலவுகாஞ் சித்தலம் உறுவேன். [1]

மேயசீர்க் கூடல் விழைதரேன்; அனையார்
விருப்புறு கூடலே விழைவேன். [2]

என்றும்ஐ யாற்றை மேவும்என் மனம்,நின்
இணையில் ஐயாற்றைமே வாது;
சென்றுயர் தில்லை, தரிசித்த தில்லை;
திருவருள் எங்ஙனம் கிடைக்கும். [3]

மறைவனம் கொடிய பாவியேன் விழிக்கு
மறைவனம் ஆயினது. [4]

மதித்தமா தங்க வனம்மனங் குறியேன்;
மாதங்க வனங்குறிப் பேன். [5]

குதித்தநீர்க் கோலக் காவுறேன்; வீணே
கோலக்காத் தோறும்உற் றுழல்வேன். [6]

விரும்பிந(ள்) ளாறு புகுதரேன்; மயக்க
விரும்பினள் ஆறுபோய்ப்புகுவேன். [7]

அரும்பிய மலர்நீர் வாஞ்சியம், ஒரு நாள்
ஆயினும் வாஞ்சியம். [8]

உடற்பரம் குன்ற, நின்பரங்குன்றம்
உற்றொரு கால்தொழேன்; [9]

விடற்கரும் ஆசை கொண்டெழேன்; கருவூர்
விடர்க்கு அரும்ஆசைமிக் குடையேன் [10]

வேய்வனம் அடையேன்; மங்கையர்தொடித்
தோள்
வேய்வனம் அடைகுவன். [11]

ஆய்வலஞ் சுழிஎண் ணேன்; உந்தி
ஆய்வலஞ் சுழிகுறித் துழல்வேன். [12]

மங்கையர் தங்கள் குழற்கருங் காடு
மதித்தலின், கழைப்பசுங் காடு
பொங்குசெங் காடு புகழ்செய் வெண்காடு
புந்தியின் மதித்திடாது உழல்வேன்.
[13]

கொழுமணி கொழிக்கும் அருவியங் கயிலைக்
குன்றம், நன் புகழ்க் கொடுங்குன்றம்,
எழுகழுக் குன்றம், குறித்திடேன்; மடவார்
இணைமுலைக் குன்றமே குறிப்பேன்.
[14]

நாரிய ரொடுசேர் பஞ்சணைப் பள்ளி
நயந்து, நின் அகத்தியான் பள்ளி,
சீரிய காட்டுப் பள்ளி, அறப் பள்ளி,
சிராப்பள்ளி
நயக்கிலேன். [15]

துடிதுடித் தடியேன் மனம்ஐயோ சோற்றுத்
துறையிலே செல்லும் அஃதொழிந்து,
நெடியநின் சோற்றுத் துறையிலே செலாது;
நிறையருள் எங்ஙனம் பெறுவேன்? [16]

இப்பாடற் பகுதிகளில், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமது சிறந்த புலமைத் திறனால், பொருள் நயம் பொலியத் தலப்பெயர்ச் சொற்றொடர்களைத் தகவறிந்து கையாண்டுள்ள சதுரப்பாடு, மிக வியந்து போற்றுதற் குரியதாக விளங்குகின்றது. மேலும் தல வழிபாடு புரிவதிலும், தலங்களின் சிறப்பை அறிந்து விளக்கிப் பாடுவதிலும், அவர்கள் கொண்டிருந்த எல்லையற்ற பக்தியும், ஈடுபாடும் கூட இனிது புலனாகின்றன.

முடிவுரை :

இங்ஙனம் சான்றோர்கள் பற்பலரும் போற்றிப் புகழ்ந்து துதிக்கும் வண்ணம் இணையற்ற மாபெருஞ் சிறப்புடையனவாக, எத்தனையோ பல சைவ வைணவத் தலங்கள், நம்முடைய தமிழகத்தில் செம்மையுற அமைந்து திகழ்ந்து வருகின்றன. அவைகளுக்கெல்லாம் சென்று தரிசித்து மகிழ்வது, நாம் நம் வாழ்க்கையில் இன்றியமையாது பெறுதற்குரிய பேறுகளுள் ஒன்றாகும். அப்பெறலரும் பேற்றினை, இயன்ற பொழுதெல்லாம் இயன்ற அளவெல்லாம் பெறுதற்கு முயன்று, நாம் நலங்கள் பலவும் எய்துவோமாக!

மனிதன் ஒருவன் எய்துதற்காம்
வாழ்வின் நலங்கள் பலவற்றுள்,
புனித நமது பாரதத்திற்
பொலியும் சைவ வைணவமாம்
இனிய தலங்கள், கண்டுதொழும்
இன்பிற் சிறந்த தொன்றில்லை!
நனிநன் றுயர்ந்த அப்பேற்றை
நலமே அடைய முயன்றுய்வோம்!

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

தேவகோட்டை : சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் ஸ்ரீ அகோர சிவாசாரியர் அருளிச் செய்த 'ஸ்ரீபரார்த்த நித்திய பூஜா விதி' என்னும் வடமொழி நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளது. விலை ரூபா 2.00. அஞ்சற் செலவு பிரதி ஒன்றுக்கு ரூபா 1.50. ஒவ்வொரு பிரதிக்கும் ரூபா 0.50 முன்பணம் அனுப்புதல் வேண்டும். இச்சங்கம் வெளியிட்டுள்ள மற்றும் பிற தமிழ் வடமொழி நூல்களின் விலைப்பட்டியலை 0.10 காசு அஞ்சல் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இதுதான் இந்து மதம்

(கவியோகி மகரிஷி ஶ்ரீ சுத்தானந்த பாரதியார், அடையாறு, சென்னை-20)

இந்து மதம், இந்து மதம் என்கிறீர்களே அது எந்த மதம், எப்படியிருக்கும்; அதை யார் கண்டது? அது இந்தியாவின் மதமா? அதை உலக மக்கள் பின்பற்றலாமா? இந்து மதம் கிறிஸ்து பௌத்த இஸ்லாமிய மதங்களுடன் ஒத்துப் போகுமா? இந்தியாவில் பலவேறு மதங்களும், வகுப்புகளும், சாத்திர கோத்திர சாதி வேறுபாடுகளும் புகுந்ததேன்? சமயச் சின்னங்கள் பற்றி எத்தனையோ பாகுபாடுகள்; கோயில்-மடங்களைச் சுற்றி எத்தனையோ வேறுபாடுகள்; கீதை உபநிஷத்து உரைகளைச் சுற்றி எத்தனையோ தத்துவ வித்தியாசங்கள்—இந்த வேற்றுமைக் காட்டில் எது இந்து மதம்? இவை தெளிவாக வேண்டும். வேதம், ஆகமம், இரண்டையும் கொண்டு இந்து மதக் கண்ணாடியை உங்கள் அகத்தின் முன் பிடிக்கிறோம். அவரவர்கள் அகத்தையும் முகத்தையும் இந்த அறிவுக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். உண்மையான இந்து மதத்திற்கும், உலகைப் பிரித்த சமயக் குழாங்களுக்கும் வேறுபாடு தெரியும். நீங்கள் எச்சாதி எச்சமயமானாலும் எல்லாரும் மனிதர் மரபு; எல்லருள்ளும் ஒரே உள்ளம், ஒரே உயிர் துடிக்கிறது; எல்லாரும் சேர்ந்து வந்து இந்தக் கண்ணாடியில் உங்கள் உண்மை யுருவைப் பாருங்கள்.

2. நாம் மானிடர்:

நாம் எந்த நாடு நிறம் வகுப்பானாலும், எல்லாரும் மானிடர் என்பதை இந்தக் கண்ணாடி முதலில் காட்டுகிறது, மானிடம் வந்ததேன்? எத்தனையோ பிறவிகளில் மனிதப் பிறவி உயர்ந்தது என்கிறார்களே ஏன்? நம்மைப் போலவே விலங்குகளும் உண்டு, உறங்கி, பெற்று, பெருகி, முதிர்ந்து, உதிர்ந்து போகின்றன. நமக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடென்ன? சில விலங்குகள் நம்மைவிடப் பலமுள்ளவை; அவற்றைக் கண்டு மனிதன் அஞ்சுகிறான். ஆனால் மனிதன் தன் அறிவுத் திறனால் எல்லா உயிர்களையும் அடக்கியாள முடியும். அறிவினால் மனிதன் உயர்ந்தவன். அந்தக்காரணங்களான மனம் சித்தம், அகங்காரம், புத்தி ஆகியவை அவனிடம் சிந்தனை வடிவாயமைந்தன. சிந்தனையை உள்ளாக்கித் தன்னை அறியலாம்; தனக்குள் தானாயிருக்கும் இறைவனை அறியலாம். நமக்குள்ளே நான் நான் என்று மார் தட்டிப் பேசுவது ஆன்மா. அதன் உணர்வாயிருப்பது பரமான்மா. பரமான்மா பரிசுத்தமானது; அதன் மாசற்ற சக்திதான் ஆன்மா. இந்த சுத்த சக்தியை அறிவதே அறிவு. அந்த அறிவினாலே தான் நாம் இன்புறலாம். உரிமையுடன், வாழ்வாங்கு வாழலாம். வாழ்வை அடைவதுதான் புருஷார்த்தம் எனப்படுவது. நாம் மனிதர் என்பதற்கு அடையாளம் புருஷார்த்தம் பெறுவது தான். நீங்கள் எந்த நாடு, எந்த நிறம், எந்த சாதி, எந்த சமயத்தவரானாலும், புருஷார்த்தம் அடைய வேண்டும்; அதற்குச் சாதனம் புரிய வேண்டும்.

3. புருஷார்த்தம்:

புருஷார்த்தங்கள் நான்காகும்—தர்மம், அர்த்தம், காமம், மோட்சம். இவற்றைத் தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என்போம். மானிட வாழ்வின் வேர் அறம், கிளை பொருள், தேன் மலர் இன்பம், கனி வீடு. இந்த நான்கையும் சாதனம்

செய்யவே சரியை. (ஒழுக்கம்) கிரியை (செயல்) யோகம் (உள்ளொருமை) ஞானம் (தெள்ளறிவு) ஆகிய நான்கு சாதனங்களும் ஏற்பட்டன.

தருமம் என்பது ஜீவாத்மாவைப் பரமாத்மாவின்பால் ஈர்த்து நிறுத்தும் சக்தியாகும். அறம் என்ருல் தீயதை அறுத்து நன்மை செய்யும் ஒழுக்கமாகும். அது தரும சாத்திரங்களிலிருந்து வரையறுக்கப் பெற்றதாகும். அறத்தால் வருவதே இன்பம். அன்பும் அறமும் வாழ்வின் பண்பும் பயனும் ஆகும். மனத்தில் மாசற்றுத் தூய்மை யுறுவதே அறமாகும். அன்பு அருள், அறிவு, அமைதி, அருட்பணி, அடக்கம், வாய்மை, தூய்மை, செம்மை, நன்மை ஆகிய பண்புகளெல்லாம் அறமே. உயிர்களெல்லாம் இறைவன் உருவெனக் கருதி அன்பு செய்வது சிறந்த அறமாகும். மன மொழி மெய்த் தூய்மை, அறமாகும் மனத் தூய்மை, நன்னினைவு, இறைவனிடம் ஈடுபட்டுருகும் ஆர்வம், உயிர்க்கருணை, தன்னைப் போலப் பிறரை மதித்தல், பெரியாரைப் பேணல், தாய் தந்தையரைப் போற்றல், ஆசிரியரைப் பணிந்து கல்வி கற்றல், விருந்தோம்புதல், நொந்தவருக்கு உதவுதல், அஞ்சாது கடமை காத்தல், பிழைப்பிற்கு உழைப்பு மேற்கொள்ளல், உழைப்பால்வந்ததை உறவு சுற்றத்துடன் பகுத்துண்ணல். இவை யெல்லாம் அறவினைகளாகும். உலகில் வழங்கும் சமய நூல்கள் யாவும் அறநூல்களே. அன்புவேள்வியாக அறத்தைப் பேணுதலே கீதையின் கருத்தாகும். இராமனும் கண்ணனும் தர்மாத்மாக்கள்; தர்மத்தைநாட்டவே வந்தவர். மனுநீதிச் சோழன் மகன் வீதிவிடங்கன் தேர் நடத்தும் போது, ஒரு பசுங்கன்று அதன் சக்கரத்திற் சிக்கி இறந்தது. சோழன் தன் மகனையே அவ்வாறு தேர்க்காலில் இட்டுப் பசுவிற்கு நீதி செய்தான். சிபிச் சக்கரவர்த்தி ஒரு புருவைக் காக்க, அதைத் தின்னவந்த பருந்திற்குத் தன் சதையைத் தந்தான்.

4. தருமம்:

தருமம் பொது, சிறப்பு என இருவகைப்படும். பொது அறம் என்றும் உள்ளது; அதைப் பண்டையஅறம் அல்லது சநாதன தருமம் என்பர். நாம் மேலே சொன்னதெல்லாம் இதுவே.

சிறப்பான தருமம் தன்னறம், சதருமம் அல்லது யுக தருமம் எனப்படும். அந்தந்தக் கால தேச வர்த்த மானங்களுக்குத் தக்கபடி இவை அமையும். கொலை செய்வது பாபம் என்பது பொது அறம். ஆனால் நமது வீட்டிற் புகுந்த பாம்பு புலிகளைக் கொல்ல வேண்டியிருக்கிறது; நாட்டிற் புகுந்த பகைவரைப் போர் செய்து ஒழிக்க வேண்டியிருக்கிறது; கட்டிலில் புகுந்து இரத்தத்தை உறிஞ்சும் முகட்டுப் பூச்சியை நசுக்குகிறோம். பொய் தீது; பாரதப் போரில் துரோணர் கடும் போர் புரிந்தார். பீமன் அசுவத்தாமா என்ற யானையைக் கொன்றான்; தருமபுத்திரரை விட்டு ''அசுவத்தாமா ஹதோ (குஞ்சர:)'' என்று கத்தச் சொன்னான். குஞ்சர: கேளாமல் பறையடிக்கச் செய்தான். ''அசுவத்தாமன் இறந்தான்'' என்பது மட்டும் கேட்டுத் துரோணர் போரை நிறுத்தி விட்டார். தமது மகன் அசுவத்தாமனிடம் அவருக்கு அவ்வளவு பிரியம்! காட்டை அழித்து நாட்டை எழுப்புகிறோம். அதனால் பலவுயிர்கள் வருந்துகின்றன. எத்தனையோ அணுவுயிர்கள் உணவுடனும், நீருடனும், காற்றுடனும் நம்முள் சென்று கலக்கின்றன. மனிதன் அறிந்தும் அறியாமலும் செய்யும் பாபங்கள் மிகப் பலவாகும். அவற்றிற்குப் பரிகாரமாக அவன் ஒவ்வொரு நாளும் இறைவனை மனமாரப் பிரார்த்தித்துவணங்கித் தன் பிழைகளுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டும். எவ்வளவு பெரிய வனானாலும் மனிதன் மனிதனே; தன்னினும் பெரிய கடவுளே அவன் புகல். ''மனிதன் இயன்ற மட்டும் அறவழி நின்று மேன் மேலும் தன் வாழ்க்கை தூய்மை—வாய்மையுறப்

பரம்பொருளை வழுத்த வேண்டும்; பொது நலப் பணிகளையும் புண்ணியங்களையும் புரிதல் வேண்டும்.

அன்பு, உண்மை, இன்சொல், அடக்கம், பொறுமை, அருள்—அறிவு வளர்ச்சி, இறை வணக்கம், அருட்பணி, ஆன்ம நேயம் ஆகிய பொது அறங்களைப் பின் பற்றிக் காலத்திற்கேற்ற கடமைகளைச் செய்தல், எல்லா மாந்தருக்கும் நலமாகும்.

இந்த அறத்தில் ஊன்றிக் கொண்டு மனிதன் தனது அறிவினுலும் தொழில் திறமையாலும் பொருள் செய்ய வேண்டும். அறவுணர்வுடன் இன்பம் நுகரவே பொருள் வேண்டும். ''ஈதல் அறம்; தீவினைவிட்டு ஈட்டல் பொருள்''. உலக வாழ்விற்கு இன்றியமையாத கல்வி, கேள்வி அரசியல், தொழில், வாணிகம், குடி செயல்வகை, பண்பாடு, எல்லாம் பொருளில் அடங்கும். அறவழியில் பொருளியல் அமைதல் வேண்டும். பொருளை நுகர்வது இன்பம்.

5. சிற்றின்பம்:

மனிதர் மிகவும் விரும்புவது மரபு வளர்ச்சி; இது ஆண் பெண் கூட்டுறவாலே நிகழும். பெண்ணின்றி ஆணுக்கு இன்பமில்லை; ஆணின்றிப் பெண்ணுக்கு வாழ்வில்லை. ஆண்மையும் பெண்மையும் ஜீவ மின்மீட்டியின் இருமுனைகள்; அந்த முனைகளை இணைப்பது காதல்; அதில் வளரும் அன்பு மின்சாரமே வாழ்வை இயக்குகிறது; அன்புதான் உயிர் நிலை. அன்புதான் இன்பமாக வளர்கிறது. அந்த இன்பமே மனைவி மக்கள், சுற்றம் உற்றூர் உறவினர், ஊரார் உலகோர் என விரிகிறது.

இன்பம், சிற்றின்பம் பேரின்பம் என்ற இருவகைத்தாம். உடலுயிர் மனத்தைச் சுற்றி வருவது சிற்றின்பம்; மனைவி மக்கள் சுற்றம், வீடு, செல்வம், பேர் புகழ், அலுவல், பட்டம் பதவிகளால் வருவன எல்லாம் சிற்றின்பம். அது ஆகி அழியும். இது ஐஹிகசுகம். இகசுகம் இவ்வுலகில் புலன்களால் நுகரும் இன்பம் என்பர்.

6. பேரின்பம்:

பேரின்பம் ஆன்மாவைச் சுற்றியது. இதை ஆமுஷ்மிக சுகம் என்பர். மனத்திற்கு அப்பாலாய் உள்ள ஆத்மாவுடன் கலந்து யோகத்தில் அனுபவிக்கும் உள்ளின்பமே நிலையானது. புலவின்பம் புல்லின்பம்; பொருளின்பம், இம்மை யின்பம்; இதற்கு மேலானது ஆமுஷ்மிக சுகம், மறுமை யின்பம்; மறுமை என்ருல் ஆகாசத்தைப் பார்க்க வேண்டியதில்லை. புலன் மனதைக் கடந்த உள்ளத்தில் துள்ளும் அருளின்பம் அல்லது ஆத்ம சுகமே மறுமையின்பமாகும். இதுவே பேரின்பம்; சிற்றின்பம் மலர்ந்து காய் வைத்துப் பேரின்பமாகக் கனியும். அப்படிக் கனிவதற்கு யோகமே வழி. இல்லற வாழ்வையே ஆண் பெண் யோகமாக்கலாம். செய்வதையெல்லாம் இறைவனுக்கே வழிபாடாக்கி, கர்ம பக்தி ஞான ராஜயோக சாதனமாக வாழ்வை நடத்திஞல், உலகின் குணதொந்த விகாரங்களைத் தாண்டி, ஆத்ம சாந்தி பெற்று, அடுத்த புருஷார்த்தமான மோட்ச நிலை பெறலாம்.

7. மோட்சம்:

மோட்சம் என்ருல் வீடு பேறு அல்லது விடுதலை, துக்க நீக்கம் என்பதாம். துக்கம் மூன்று வகை (1) ஆதியாத்மிகம். உடலுக்குரிய பசி, பிணி, மூப்பு போன்றது; (2) ஆதி பௌதிகம். திருடர், பகைவர், புலி, கரடி, பாம்பு முதலியவற்ருல் வரும் தீங்கு; (3) ஆதிதைவிகம் என்பது இடி மழை புயல் முதலிய இயற்கைக் கொடுமையால் வருவது. இத் துன்பங்களினின்று விடுபட்டு, ஆன்மா பரமான்மாவை மேவுதலே

மோட்சமாகும். காமம் கட்டின்பம்; சிற்றின்பம்; மற்றொரு உடலுடன் கூடி முயங்கும் கண இன்பம்; அளவுக்கு மிஞ்சினுல் நோய் தரும் பிணியின்பம். வரவர வெறுப்புத் தட்டும் வெற்றின் பம். மோட்சம் அல்லது வீடு, கட்டற்ற சுதந்தர இன்பம்; தானே தன்னுள் உவக்கும் தன்னின்பம், தளராது வளரின்பம், சலியாத நலியாதமுற்றின்பம். இது ஜீவாத்மாவைப் பரமாத்மாவுடன் ஒன்று படுத்தும்.

8. உயரின்பம் :

உயர் இன்பம், நல்லன்பர் உறவாலே சாலோக்கியம் (கடவுளுலகம்), கடவுளைப் போற்றி செய்வதால் சாமீப்யம் (கடவுளண்மை), கடவுளை ஆன்ம வடிவாக வழிபடுவதாலும் அருட்பணியாலும், நினைப்பதாலும் சாரூப்யம் (கடவுளுருவம்), கடவுள் யோகியர் மூலம் அருளிய அறநெறிகளைப் பின்பற்றுவதால் சாதர்மியம், கடவுளை யோகத்தால் கூடிக்கலப்பதால் சாயுஜ்யம் (கடவுட் கலப்பு) எய்தும். இந்த ஐந்தும் எய்தி ஜீவன் சிவமயமாகி மெய்யறிவின்பந் திளைப்பது தான் பூரண மோட்சம் அல்லது ஜீவன் முத்தியாகும் தன்னறிவும் தலைவனறிவும் எய்திய பின் கட்டில்லை கவலையில்லை. உலகின் குணதொந்த விகாரமில்லை. என்றும் இருக்கும் ஒன்றில், என்றும் ஒன்றியிருக்கும் சுத்த யோக சித்தி யெய்தும். அதற்குப் படிப்படியாக மனதைப் பக்குவப்படுத்தி ஜீவனை நடத்துவதுதான், மதம். அதில் தலை சிறந்தது இந்து மதம்.

தருமத்தால் வாழ்வு தூய்மையுற்று மோட்ச வழி திறக்கிறது. அதர்மத்தால் வாழ்வு கெட்டு வழியடைத்து வருந்துகிறது. அதர்மம் அழிக்கும், அழியும். தருமம் ஆகும், ஆக்கும். அர்த்தகாமம் (பொருளாசை) தர்மத்திற்கு அரண் செய்து மோட்சத்திற்கு உடன்பாடா யிருக்க வேண்டும். பொருளின்பம் அருளின்பத்தை நாட வேண்டும்.

'' 'ஜனகராஜன்' என்னிடம் பொருள் குவிந்து கிடக்கிறது. அதனிடம் நான் சிக்கவில்லை. இந்த மிதிலையே எரிந்தாலும் எனக்குச் சிறிதும் சேதமில்லை'' என்றார். அதுபோலவே உலகில் பாசப்பற்றில்லாது உள்ளுண்மையில் இணைந்து வாழ்வதே மனித தருமமாகும். உள்ளுண்மைதான் கடவுள். உள்ளுண்மையிற் கூடி உலகில் வாழ்வாங்கு வாழ்வது தான் இந்து மதம்; எந்த மதமும் இந்த உண்மையை ஒப்பும். இந்து மதம் என்பது, என்றும் இந்த உலகினர் அனைவரும் பொருந்தி வாழத்தக்க இயற்கை மதம். அது கடவுளுடன் தோன்றியது; கடவுளைப் போல என்றும் நின்று நிலவுவது. மனித சமுதாயம் என்பது ஆன்மத் தொகுதி. ஆன்மா என்பது நான் என்று உள்ளே எழும் சத்துப் பொருள். மெய்ப்பொருள்! அதில் வேரூன்றி வளர்வது தான் இந்து மதம், இதுவே உலகின் ஆதி மதம். இதுவே எல்லாருக்கும் நல்வழி காட்டும் சோதி மதம்.

—தொடரும்

செய்திச் சுருக்கம்

சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறையின் ஆதரவு ஒத்துழைப்புடன், இந்த சிவாகம பாடசாலை திறம்பட நன்கு நடைபெற்று வருகின்றது. இப்பாட சாலைக்கு டில்லி சட்ட மந்திரி கனம் திரு. ஸி.ஆர். பட்டாபிராமன் அவர்கள் வருகை தந்தார்கள். அதுபோது பாடசாலைப் பரீட்சைகளில் முதலாவதாகத் தேறிய க்ஷேத்திரபாலபுரம் வி. சேதுராமன் என்னும் மாணவனுக்குக் கல்கத்தா ஸ்ரீ பி.ராஜகோபாலன் அவர்கள் வழங்கிய ரூபா 101, பரிசாக வழங்கப்பட்டது. அல்லூர் மிராசுதார் ஸ்ரீ ஏ.வி.கணபதி ஐயர் அவர்கள் பாடசாலை நடக்க இடம் கொடுத்து உதவி உள்ளார்கள். அவர்கள் செய்து வரும் பிற பல உதவிகளும் குறிப்பிடத் தக்கவை.

கண்ணனுக்கும் உடையவர்க்கும் காணும் ஒற்றுமைகள்

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

முகுந்தமாலை யென்னும் ஸ்தோத்திரத்தில் ''ஹே ராமாநுஜ! ஹே ஜகத்த்ரய குரோ! ஹே புண்டரீகாக்ஷ மாம் ஹே கோபீஜநநாத! பாலய'' என்று ராமாநுஜ திருநாமத்தினாலே பல ராமாநுஜனை கண்ணபிரான் அழைக்கப்பட்டுள்ளான். ஆகவே கண்ணபிரானுடைய அந்தத் திருநாமமே ஸ்வாமி உடையவர்க்குச் சாத்தப் பட்டதென்று கொள்ளுகிற ஸம்பிரதாயமும் ஒன்றுண்டு. யதிராஜ ஸப்ததியில் ''சமிதோதய சங்கராதிகர்வ: ஸ்வபலாத் உத்த்ருதயாதவ ப்ரகாச:, அவரோபித வாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ்ஸ ஏஷ பூய:'' என்ற ச்லோகம் இதற்கு ஆதாரமாக அவதரித்ததாகும். கண்ணபிரானுக்கும் உடையவர்க்கும் பல படிகளாலும் ஸாம்யமுண்டு. கண்ணபிரானாகத் தோன்றின பகவான் செய்த செயல்களும் ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயல்களும் ஒத்திருக்கையாகிய ஒற்றுமைநயம் ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. மேலே யெடுத்துக் காட்டிய ''சமிதோதய சங்கராதிகர்வ:'' இத்யாதியான யதிராஜ ஸப்ததி ச்லோக ரத்னத்தில் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யம் சிலேடையினால் நிர்வஹிக்கப்பட்டுள்ளது; அது வடமொழிக் கடலில் ஆழ்ந்தவர்கட்கே ரஸிக்கக் கூடியது. இப்போது இங்கு நாம் நிரூபிக்கும் ஒற்றுமை நயங்கள் சரித்திரப் போக்கில் ஸம்பந்தப்பட்டதாகும். கேண்மின்:—

1. கண்ணபிரான் திருவவதாரஞ் செய்த இடம் சிறைக் கூடம் என்பது உலகமறிந்தது. ஸ்ரீராமாநுஜர் அவதரித்த இடமும் சிறைக் கூடமே. எப்படியெனில்; ''அமரரோடு உயர்விற் சென்று அறுவர்தம் பிறவி யஞ்சிறையே'' (திருவாய்மொழி 1-3-11) என்ற நம்மாழ்வார் திருவாக்கின்படி இந்த ஸம்ஸார மண்டலமே ஒரு சிறைக்கூடமன்றோ. இஃது 'இருள்தருமா ஞாலம்' ஆதலால் இருள் மலிந்த விடத்தே வந்து பிறந்தார் உடையவர். கண்ணனும் 'இருள் நாள் பிறந்த வம்மான்' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின்படியும், 'வேண்டித் தேவரிரக்க —வீங்கிருள்வாய் வந்து பிறந்ததும்' என்ற நம்மாழ்வார் பாசுரத்தின் படியும் இருள் மலிந்த போழ்தன்றோ வந்து பிறந்தது.

2. கண்ணபிரான் அவதரித்த போது 'ஜாதோஸி தேவதேவேச சங்க சக்ர கதாதர!' என்கிறபடியே சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனாகவே சுடர் விளக்கத்தோடு திருவவதரித்தான். ஸ்வாமி அவதரிக்கும்போதும் நம்போலியரைப்போலே அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ளச்சுடர் விளக்கத்தையே காட்டிக் கொண்டு அனைவரும் வியப்புறுமாறு அவதரித்தார்.

3. கண்ணபிரான் பிறந்த விடம் ஒன்று; இளமையில் வளர்ந்த விடம் வேறொன்று; பிறகு வளர்ந்தவிடம் மற்றொன்று. (அதாவது) வடமதுரையிலே பிறந்தது; திருவாய்ப்பாடியிலே இளமையில் வளர்ந்தது; பிறகு முதுமையில் த்வாரகை முதலான விடங்களில் வளர்ந்தது. நம் ஆசாரியரும் பிறந்தது, ஸ்ரீபெரும்பூதூரில்; இளமையில் வளர்ந்தது காஞ்சிபுரியில்; பிறகு வளர்ந்தது ஸ்ரீரங்கம் திருநாராயண புரம் முதலான இடங்களில்.

4. (மற்றொரு வகையுமுண்டு): ''திருமந்திரத்திலே பிறந்து த்வயத்

திலே வளர்ந்து'' என்கிற நம் முன்னோர்களின் முதுமொழியின் படியே திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்தினல் ஸ்வரூபவுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப் பெற்று, த்வயம் என்கிற மந்த்ர ரத்னத்தின் அநுஸந்தானத்தையும் அதன்படி அனுட்டானத்தையுமே செல்வ வாழ்ச்சியாகக் கொண்டிருப்பவரென்க. பிறக்குமிடம் திருமந்த்ரம்; வளருமிடம் த்வயம்—ஆக இதனலும் கண்ணனேடு ஒப்புமை.

5. கண்ணபிரான் பிறந்த வயிற்றில் இவனெருவனே பிறக்கவில்லை; 'மக்க ளறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கனவந்து பிறந்து நின்ருய்' (பெரியாழ்வார் திருமொழி 5-3-1) என்கிறபடியே மற்றும் பல மக்கள் பிறந்தாருண்டு; ஆனல் அந்தப் பிள்ளைகளினல் உலகுக்கு யாதொரு உதவியும் நேர்ந்ததில்லை: அவர்கள் பிறந்ததும் இறந்ததுமே தெரிய வருகின்றது. இதுபோல, எம்பெருமானர் திருவவதரித்த இவ்வுலகத்தில் மற்றும் பல பேர்களும் ஒக்கப் பிறக்கின்ருர்களெனினும் அவர்களால் உலகுக்கொரு நன்மையுமில்லையாயிற்று. அவர்களின் பிறப்பும் இறப்புமேதான் உலகுக்குத் தெரியும்.

6. கண்ணபிரான் வடமதுரையில் நின்றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும்போது 'வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ'' என்னும்படி பேராழமான பெருவெள்ளமும் முழந்தாளளவாக வற்றிப்போயிற்றென்று தெரியவருகிறது. அதுபோல, நம் ஆசாரியார் சிறிது ஸஞ்சரிக்கத் தொடங்கும்போதே 'பிறவியென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்' என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படியே ஸம்ஸாரமாகிய பெருங்கடலும் வற்றத் தொடங்கிற்றென்க.

7. பராத்பரனை பெருமான் தனது பெருமைகளை யெல்லாம் மறைத்து அடக்கிக் கொண்டு நீறு பூத்த நெருப்புப்போலேயாகி இடக்கை வலக்கை யறியாத ஆயர்களோடே கலந்து பழகினன்; அதுபோல எம்பெருமானரும் மிகுஞானச் சிறு குழவியாய்த் தமது ஞானசக்திப் பெருமைகளையெல்லாம் மறைத்துக் கொண்டு அறிவிலா மனிசரோடே கலந்து பழகியிருந்தனர். கண்ணன் இடையர்களோடு மாத்திரம் கலந்து பழகி யிருந்தானல்லன்; தன்னை வதைக்கவழிபார்த்திருந்த ஆஸுர ப்ரக்ருதிகளோடும் கலந்திருந்து காலங் கழித்தனன். எம்பெருமானரும் தம்மை மாய்க்கவெண்ணின யாதவ ப்ரகாசர் போல்வாரிடத்திலும் கலந்திருந்து காலங் கழித்ததுண்டே. கண்ணன் விரோதிகளை முடித்தனன்; இவர் வாழ்விப்பதும் செய்தனர்.

8. வளர்ந்தருளு மிடத்தில் தீய புந்திக் கஞ்சனல் ஏவப்பட்ட பூதனை தாய் வேஷம் பூண்டுவந்து நஞ்சு தீற்றி முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று தானே முடிந்து போனள். இந்தப் பூதனையின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகர் யாதவாப்யுதயத்தில் 'கம்ஸப்ரயுக்தா கில காபி மாயா' என்று மாயை என்கிற சொல்லால் கூறினர். மாயையென்று மூலப்ரக்ருதிக்குப் பெயர். அது உண்மையில் விஷம் போன்றதாயிருக்கச் செய்தேயும் தன்னிடத்தில் போக்யதா புத்தியை யுண்டுபண்ணிக் கொண்டு தன் பக்கலிலே யீடுபடுத்தி நம்போல்வாரை முடிக்கப் பார்க்கிறது. இப்படியே ஆசாரியரையும் முடிக்கப் பார்க்கையில் அவரை முடிக்க மாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினல் தானே முடிந்து நின்றது.

9. 'கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி' (திருப்பாவை-6) என்றபடி அஸுராவேசம் பெற்றவொரு சகடத்தைக் கண்ணன் திருவடி ஸ்பர்சத்தால் நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது ப்ரஸித்தம். எம்பெருமானரும் தமது திருவடி ஸ்பர்

சத்தினுல் கடபங்கஞ் செய்தவரே, (எப்படியெனில்) ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குக் கொண்டு போகும் ஸாதனம் கடமெனப்படுவது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பல வழிகளுண்டு; நரகம் சுவர்க்கம் முதலானவற்றின் வழிகளிற் கொண்டு செல்லுவது கள்ளச் சகடமாகும்; நம் ஆசாரியருடைய திருவடி ஸம்பந்தத்தினுல் அது தொலைந் தொழிந்ததேயாம். அர்ச்சிராதி மார்க்கமாகிய நல்வழியிற் செல்லும் ஸாதனமே மேம்பட்டுத் தீய வழிகளில் செல்லும் ஸாதனம் சிதைந் தொழிந்ததென்க.

10. கயிற்றினுல் கட்டி ஓருரலிலே பிணித்துவிடப் பெற்ற கண்ணன் அவ்வுரலையு மிழுத்துக் கொண்டு தவழ்ந்து இரட்டை மருத மரங்களின் நடுவே யெழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினுலே அந்த இரட்டை மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக யமளார்ஜுன பங்க விருத்தாந்தமுள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள்போல, இணை பிரியாது நின்று நம்மை நலியுமவை பலவுண்டு; பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் 'த்வந்த்வாதீதோ விமத்ஸர:' என்றும், ஏழாவது அத்யாயத்தில்'த்வந்த்வமோஹேநபாரத'என்றும், பதினைந்தாமத்யாயத்தில்'த்வந்த்வைர் விமுக்தாஸ் ஸுக துஃக ஸம்ஜ்ஞை:' என்றும் இப்படிப் பலவிடங்களில் த்வந்துவம் (இரட்டை) என்று பல சொல்லப்பட்டுள்ளன; இன்பு துன்பு, அஹங்கார மமகாரம், காமக்ரோதம், புண்ணிய பாபம்... என்னுமிவை யெல்லாம் இரட்டைகளாம். இவையெல்லாம் எம்பெருமானுர் திருவடி ஸம்பந்தம் பெற்றவளவிலே இற்றெழிந்தனவென்க. ''காமாதி தோஷ ஹரமாத்மபதாச்ரிதாநாம்.''

11. 'வையமேழுங் கண்டாள் பிள்ளைவாயுளே' என்றும் ''வாயுள்வையகங்கண்ட மட நல்லார்' என்றும்சொல்லுகிறபடியே கண்ணபிரான் தனது திருவாயில் ஏழுலகங்களையும் அன்பர்களுக்குக் காட்டினன். அதுபோல எம்பெருமானுரும் 1. ச்ருதிகள், 2. ஸ்மிருதிகள், 3. இதிஹாஸங்கள், 4. புராணங்கள், 5. பாஞ்சராத்ரங்கள், 6. ஆழ்வாரருளிச் செயல்கள், 7. ஆசார்ய திவ்ய ஸூக்திகள் ஆகிய ஏழையும் தமது திருவாக்கில் அன்பர்கட்குக் காட்டியருளினர்.

12. யமுனை யாற்றில் ஓர் மடுவில் இருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்னியினுல் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியனென்னுங் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினன். இவ்வரலாற்றை யாதவாப்யுதய காவியத்தில் தேசிகர் கூறுமிடத்து (4.125) ஸ்ரீ ராமாநுஜர் செய்தருளின செயலையே உவமையாகக் காட்டியருளினர். ஐந்தலை வாய் நாகமாகிய காளியன் யமுனை யாற்றைக் கலக்கிக் கெடுத்தது—விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் மனம் போனபடி யெல்லாம் கூறும் தவருன பொருள்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது—ஸ்வாமி தவருன பொருள்களை நீக்கி நல்ல பொருள்களை வெளியிட்டு வேதத்தை ஸத்துக்களுக்கு உபஜீவ்யமாக ஆக்கின படியாம். யமுனையின் ஸ்தானத்தில் வேதம்; காளியன் ஸ்தானத்தில் குதர்க்கவாதிகள்; கண்ணன் ஸ்தானத்தில் ஆசாரியர். 'தூயபெரு நீர் யமுனைத் துறைவனை' என்னும்படி யமுனையாறு இடையருத பகவத் ஸம்பந்தத்தை யுடையதாயிருந்தது போல, வேதமும் பகவத் ஸம்பந்தத்தை நியதமாக வுடைத்தாயிருக்குமிறே.

13. காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சை யுமிழ்ந்து நாசம் விளைவித்ததுபோல புறமதத்தவர்கள், ஐந்து விதமான துர்வாதங்களாலே

நாசத்தை விளைவிக்கின்றனர்: (எப்படியென்னில்) 1. ஈச்வரனே யில்லையென்னுதல், 2. ஈச்வரன் உண்டெனினும் அவன் அனுமானத்தால் ஸித்திப்பவனேயன்றிச் சாஸ்த்ரத்தால் ஸித்திப்பவனல்லன் என்னுதல்; 3. சாஸ்த்ரங்களைக் கொண்டு ஈச்வரனை யங்கீகரித்தும் அவனுக்குக் குணங்களும் விக்ரஹமும் இல்லை யென்னுதல்; 4. ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை, பல ஈச்வரர்கள் உண்டென்னுதல்; 5. பிரபஞ்சமேயில்லை—ஸர்வம் சூன்யம் என்னுதல். ஆக இப்படிப்பட்ட ஐவகையான அபார்த்தங்களினால் புறமதத்தவர்கள் வேதங்களைக் கெடுக்க, அந்தக் கெடுதல்களை எம்பெருமானார் போக்கியருளினர். காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாற்போலே 'நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே' (திருமாலை-1) என்ற கணக்கிலே யமபடர்களின் தலைமீதும் குத்ருஷ்டிகளின் தலைமீதும் கூத்தாடப் பெறுவோம்.

14. குதிரை வடிவங் கொண்டு மஹா பயங்கரனாக வந்த கேசியென்னும் அஸுரனைக்கண்ணபிரான் தொலைத்தருளினன்; அது போல நம் பேராசிரியர் 'இந்த்ரியாணி ஹயாநாஹு:' என்ற உபநிஷத்தின்படியே குதிரைகளாகச் சொல்லப்பட்ட இந்திரியங்களின் வலியை யடக்கி ஜிதேந்த்திரியராய் 'மதநகதநைர் ந க்லிச்யந்தே யதீச்வரஸம் ச்ரயா:' (யதிராஜ ஸப்ததி) என்று சொல்லும்படி வாழ்ந்தவர்.

15. கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓர் அசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல் விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்கவும், மற்றொரு அசுரன் கண்ணனை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு நிற்கவும், இவற்றையறிந்த கண்ணபிரான் 'விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே' 'கன்றுகொண்டுவிளங்கனியெறிந்து' என்கிறபடியே கன்றைச் சுழற்றி விளவின் மீதெறிந்துஇரண்டையும்ஒருசேரமுடித்தருளினன் என்றவரலாறு முள்ளைக் கொண்டே முள்ளைக் களைகிற படியைக் காட்டுகின்றது. இது போலவேஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் புறமதங்களைக் கண்டிக்குமிடத்து அவை பரஸ்பரவ்யாஹாதங்களாயிருக்கும்படியை நன்குநிரூபித்துக்காட்டி அவைகளைக் கொண்டே அவற்றை மறுத்தொழிப்பவர்.

16. இடையர்கள் வழக்கப்படி இந்திரனுக்குப் பூசை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும், தயிரும், நெய்யும், காய்கறிகளும் சேகரிப்பதைக் கண்டு கண்ணன் அப்பூசனை யனைத்தையும் கோவர்த்தன மலைக்கே இடும்படி கட்டளையிட்டுத் தானே ஒரு தேவதா ரூபங் கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருள, இந்திரன் பசிக் கோபத்தினால் மேகங்களை ஏவிக் கடூரமான கல் மழையை ஏழு நாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் யாதொரு தீங்கும் நேரிடாதபடி கண்ணன் அம்மலையையே குடையாக வெடுத்துப் பிடித்து நின்றனன் என்பது ப்ரஸித்தமான கதை: தேவதாந்தரத்திற்கு வழிபாடு செய்வதைப் பொறாத தன்மையும், அந்த வழிபாடுகளை யெல்லாம் தானே ஏற்றுக் கொள்ளும் தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்கு செய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாத பெருந்தகவும், தன்னை யடுத்தவர்களைத் தான் ரக்ஷித்துக் கொண்டு நிற்றலுமாகிய விஷயங்கள் இவ்விதிஹாஸத்தில் கிடைக்கின்றன. 'மறந்தும் புறந்தொழாமாந்தர்' என்றிருக்குமாசிரியர் தேவதாந்தர பஜனத்தைச் சிறிதும் ஸஹியார். ''திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு'' என்று துணிந்து உபதேசிப்பர். 'ஸாக்ஷாத்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத் தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா' என்றும் 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி

வந்து' என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானே ஆசார்யனுக வந்து பிறந்ததனுல் ஆராதனைகளெல்லாம் ஆசார்யனுக்கே சேரும். ''குற்றஞ் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்'' (ஸ்ரீ வசன பூஷணம் 305) என்றிருப்பவர் ஆசார்யராகையாலே தீங்கிழைப்பவர் திறத்திலும் ப்ரதியாகத் தீங்கிழைக்க நினையார். பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினது போல 'அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்ததது:க்கவர்ஷிணி—பவதுர்த்திநே' (ஸ்தோத்ரரத்னம் 49) என்னப் பட்ட பெருமழையில் நின்றும் (அதாவது, ஸம்ஸாரத் துயர்ப் பெருமழையினின்றும்) காத்தருளினர். கண்ணன் ஏழு நாள் காத்தனன். ஆசிரியர் காப்பது ஏழேழ் பிறவிக்கும்.

17. கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக, அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன். நம் பரமாசார்யர் 'எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம்போலே திருமந்த்ரம்' (முமு க்ஷுப்படி 113) என்கிறபடியே திருமந்த்ரமாகிய திருமங்கலியத்தைச் சேதநர்களுக்குக் கட்டி விவாஹம் நடத்துகைக்கு அங்கமாக, காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், அஸூயை என்கிற ஏழு விரோதிகளையும் தொலைத்தருளினர். கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்ததுபோல ஆசிரியர் 'நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து' என்கிறபடியே அஹங்கார மமகாரங்களை அடியறுத்தவர். கண்ணன் குவலயா பீடமென்கிற மதயானையைமுடித்தாற்போலே 'மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நிறீஇ' என்கிற பொய்கையார் பாசுரத்தின்படியே மத களிறுகிய இந்திரியத்தின் துஷ்டத் தன்மையைத் தொலைத்தவர். கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக் கெழுந்தருளி அவர் தந்த பூவைப் பெற்று உகந்ததுபோல நம் ஆசிரியர் 'அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:, ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ; ப்ரீதிகரம் பவேத்' என்னப்பட்ட எண்பகர் பூவையும் சிஷ்யர்கள் பக்கலிலே செழித்து வளரக் காணப் பெற்றுக் களித்தனர்.

18. கண்ணபிரான் கம்ஸ சிசுபால கௌரவ ப்ரக்ருதிகளை முடித்துப் பஞ்ச பாண்டவாதிகளை வாழ்வித்தது போல, நம் பரமாசார்யர் 'தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ் சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனரென்னும்படியாக' நாட்டிய நீசச் சமயங்களை மாள்வித்து அர்த்த பஞ்சகம் முதலிய விசேஷார்த்தங்களை எங்கும் விளங்கச் செய்தனர்.

செய்திச் சுருக்கம்

சிவாகம வேத பாடசாலை: திருச்சி மாவட்டம் அல்லூர் கிராமத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஆக்ஞையின்படி, காஞ்சி காம கோடி பீட வியாச பாரத கலாதி ஸதஸ் சமாஜத்தின் ஆதரவில், ஸ்ரீ விசுவநாத சிவாசாரியார் தலைமையில், 28-11-63 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. ஸ்ரீ யக்ஞேஸ்வர சாஸ்திரிகள், வேதம் சாஸ்திரம் முதலியன கற்பித்து வருகிறார்கள்.

"ஞான சித்தர்களும் சித்த மருந்தும்"

(திரு. வி. பலராமையா அவர்கள், பி. ஏ., பி. எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

தென்னுட்டில் சித்தர்கள் என்றுல், பதினெண் சித்தர்களென்றே அறிவர். சிலர் 21 சித்தர்களென்பர். சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஆயிரம் கால் மண்டபத்தில் 21 சித்தர்களின் தலங்களை அழகாகச் சித்தரித்துள்ளனர்.

சித்தர்கள் தென்னுட்டில் மாத்திரமன்றி, எல்லா நாடுகளிலும் உள்ளனர். நவநாத சித்தர்களென்றும், அந்த நவநாத சித்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கோடி சீடர்கள் உண்டென்றும், ஆக நவகோடி சித்தர்கள் உள்ளனரென்பதும் மரபு. சித்தர்கள் மரபில் சார்ந்தவர்கள் பலர் கடலினுள்ளும், மலைகளிலும், குகைகளிலும், பூமியினுள்ளும், காடுகளிலும், நாடுகளிலும் சஞ்சரித்து வருகின்றனர் என்பதும் மரபு. தண்ணீருக்குள்ளே யெப்படி மனிதன் வாழ முடியுமென்ற சங்கை நமக்குத் தோற்றலாம். அது சித்தர்களுக்கு முடியும். பஞ்ச பூதங்களைத் தன் வயப்படுத்தியவர்கள் சித்தர்கள். நெருப்பின் மத்தியிலும் இருப்பர். அவர்களை நெருப்பு சுடாது. அதே போல அவர்களுக்குக் காற்றும் அவசியமில்லை. தண்ணீர் சாப்பிடாமலும், காற்றைப் புசிக்காமலும் இருந்த ஒரு சாதுவை, என் வீட்டிலேயே 45 நாட்கள் வைத்திருந்தேன். இப்பொழுதும் அவர் கோயம்புத்தூர் ஜில்லா பொள்ளாச்சியின் அருகே உயிருடன் இருக்கிறுர். இம் மகான் சித்தர் மரபிற் சேர்ந்தவர். மக்கள் அறியப் பூமிக்குள் செல்வதைச் சீவ சமாதி என்பர்.

திருநெல்வேலி ஜில்லா, சங்கரன் கோவில் தாலுகாவில், பாம்பன் கோயில் சந்தா என்ற ஒரு கிராமமுண்டு. அக்கிராமத்திலிருந்து ஒரு மைலில் வெள்ளைப் பிள்ளையார் கோவில் ஒன்றுள்ளது. அக்கோயிலின் வடபாரிசத்தில் 15 அடிக்குள் ஒரு மகான் 1964-ஆம் ஆண்டில் சீவசமாதியடைந்தார். அச்சமயம் நான் மாவட்ட நீதிபதியாகத் திருநெல்வேலியில் பணியாற்றி வந்தேன். அக்கோயிலுக்குப் பூசை செய்து வருபவர், ஓர் தெலுங்குப் பிராமணர். ஒருநாள் மாலை அக்கோயிலினருகே கம்பீரமான உடல் பொருந்திய ஒரு சாது, அக்கோயிலுக்கு வந்து, அந்த பிராமண பூசாரியினிடம் சென்று, தான் அன்று மறுநாள் சமாதியடைய வேண்டுமென்றும், கோவில் பக்கம் ஆறடி பூமியில் ஒரு பள்ளம் தோண்டித்தர முடியுமா? என்றும் வினவினுர். அந்த பூசாரி இந்த சாதுவின் உடல் வன்மையைப் பார்த்து இவராவது, சமாதியாவதாவது, இது ஏதோ மோசம் என்று நினைத்துச் சிரித்தாராம். ஆனுல் சாது அவரை அதோடு விடவில்லை.

அப்பூசாரியை உட்கார வைத்து, அப்பூசாரியின் மூன்று பரம்பரையில்தோன்றியவர்களுடைய சீவிய சரித்திரத்தை ஆதியோடந்தமாய்ச் சொல்லி முடித்தார். அதைக்கேட்ட அப் பூசாரி, அம் மகானின் பாத கமலங்களுக்கு வணக்கம் செய்து உடனடியாகக் குழி வெட்டித் தயார் செய்து விட்டார்.

மறுநாள் காலை 8 மணி. யாரோ சாமியார் சமாதியடையப் போகிறுரென்ற வதந்தி சுற்று வட்டாரங்களில் பரவியது. ஏராளமான மக்கள்கூடினர். சாது குழியில் இறங்கிப் பத்மாசனமிட்டு அமர்ந்தார். 'ஓம்' என்ற ஒரு பெரிய நாதம் கிளம்பிற்று. அதனுடன் அக்கினிச் சுவாலை 30 அடி அளவுக்குச் சுற்றிலும் வீச ஆரம்பித்தது. யாரும் அருகே போக முடியவில்லை. 45 நிமிடங்கள் அப்படி கழிந்தன. நாதம்

அடங்கியது. சுவாலையும் குளிர்ந்தது. சாது உட்கார்ந்த நிலைமையிலேயே இருந்தார். அவர் முன்னுள் குறிப்பிட்டபடி குழியை மண்போட்டு மூடிவிட்டனர். இந்த சம்பவம் நடந்த 20-ஆம் நாள் நான் அங்கு சென்று நுணுக்கமாக விசாரித்து, நடந்த உண்மையைக் கேட்டு ஆனந்தமடைந்தேன். இப்பொழுது அவ்விடத்தில் ஓர் சிறிய சமாதிக் கட்டிடமும் கட்டியுள்ளனர்.

இன்றும் மக்கள் திரள் திரளாகச் சென்று அம் மகானின் அருளைப் பெற்று நலமடைகின்றனர். அந்தப் பிராந்தியத்தில், உலகமெலாம் வெள்ளம் புரண்டாலும் மழை பெய்யாது. அப்படிப்பட்ட இடம், இன்று தண்ணீர்ச் செழிப்புடன் விளங்குகிறது.

இங்கு இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுவதின் நோக்கம், சித்தர்கள் பூமியினுள்ளும் வாழ்கின்றனர். அது அவர்களால் முடியுமென்பதைக் காட்டுவதற்கே. பஞ்ச பூதங்களைத் தன் வயப்படுத்தியவர்கள் சித்தர்கள் என்பதை நிரூபிப்பதற்கே.

இப்படிப் பல இடங்களில் பஞ்ச பூதங்களை வென்ற மகான்கள் பலர் இருக்கின்றனர். கன்னியாகுமரி கோவிலின் பின், கடலின் ஓரமாய் ஓர் அம்மையார் இன்றும் உலாவிக் கொண்டுள்ளார். இரவும் பகலும் தனித்து வாழுகின்றூர். அவருக்குத் துணை 5-6 நாய்கள்தான். அவர்களின் பிரபுத்துவத்தை ஏட்டில் எழுத முடியாது. நேரில் அவர்களைத் தரிசித்துப் பயன் பெறுவதே சிலாக்கியம். அவ்வம்மையும் கடல் கொந்தளிப்பிலும் தரையில் நடந்து செல்வதுபோல் கடலில் இறங்கி நடந்து போவார். பஞ்ச பூதங்களைத் தன் வயப்படுத்தும் வல்லமை, சித்தர்களுக்கு உண்டு என்பதற்கு இது ஒரு சான்று.

இவ்விதப் பெரியோர்களின் தரிசனத்தால் அடையும் பயன், யாதென்பதை முன் ஓர் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். இந்தப் பஞ்ச பூதங்களை அவர்கள் எப்படி வென்றனரென்பது கேள்வி. இதற்குச் சுருக்கமாய்ப் பதில் சொல்லுமிடத்துப் பஞ்ச இந்திரியங்களைக் கட்டுப்படுத்தினுலொழிய வேறு வழியில்லை என்பதாம்.

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே.
—திருமூலர்

என்னும் செய்யுள், கவனிக்கற்பாலது.

இந்த இந்திரியங்களை நம் பிரயத்தனத்தால் அடக்க முடியுமா? என்பது மற்ருெரு கேள்வி. அது முடியாததாம் என்ற பதிலே பெரியோர் அறை கூவுகின்றனர். அதற்கு வழி அருளை நாடி நிற்பதே.

காகமானது கோடிகூடி நின்ருலுமொரு
கல்லின்முன் எதிர் நிற்குமோ?
கர்மமானது கோடி முன்னே செய்தாலும்
நின்
கருணைப்ரவாக அருளைத்
தாகமாய் நாடினரைப் பாதிக்க வல்லவோ?
தமிய னேற்கு அருட்டாகமோ
சற்றும் இலை.........

என்னும் தாயுமானவர் மெய்ம் மொழியைக் கருத்தில் அமையச் செய்தல் அவசியமாய்த்தோன்றுகிறது. அவனுடைய கருணைப் பிரவாகத்தை எதிர் நோக்கியிருப்பதே நல்வழி. இந்தக் கருணையை உண்மையுடன் எதிர் நோக்கி யிருப்பவனிடமிருந்து முன் சொன்ன 14 சித்த விருத்திகளும் ஒவ்வொன்ருய் உதிர்ந்து விடும். ஆனுல் நாம், சாதாரணமாய்ச் செய்யும் சாதனையையே பெருத்த சாதனை என்று திருப்தியடைந்து விடுகிருேம்.

—தொடரும்

தில்லையில் திருஞான சம்பந்தர்

(சித்தாந்த கலாநிதி. உரைவேந்தர். ஔவை துரைசாமிப் பிள்ளை, மதுரை)

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்பே, தில்லையம்பதி திருவருட் செல்வப் புகழ் கொண்டு திகழ்ந்தது. அங்கே சிவன் எழுந்தருளும் பெரும் பற்றப் புலியூரும், சிற்றம்பலமும் சான்றோர் பரவிப் பாடும் பண்பு பெற்று விளங்கின. அந்நாளிலேயே சிற்றம்பலம் பொன்னேடு வேயப் பெற்றுப் பிறங்கிற்று. சிவநெறி மேற்கொண்ட பெருமக்கள் 'மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன்களுள்' தில்லைக்குச்சென்று சிற்றம்பலத்தே நின்று உமையாள் காணத் திருநடம் புரியும் கூத்தப் பெருமானைக் கண்டு வழிபடுவது தலையாயது என்று கருதி வழி பட்டொழுகினர். அவ்வகையில் சைவச் சான்றோர் பலரும் தில்லைச் சிற்றம் பலத்துச் சிவபரம்பொருளைக் கண்ணாரக் கண்டு மனமாரச் சிந்தித்து வாயாரப் பாடி மகிழ்வது மரபாயிற்று.

அக்காலத்தே சைவத்தின் தவப் பயனாய்த் தோன்றித் தமிழகம் தமிழ் வாயிலாகச் சிவத்தின் அருள் விளக்கம் பெறுதற்குப் பெரும் பணி புரிந்தவர் திருஞானசம்பந்தர் முதலியோர் என்பது நாடறிந்தது. அவர்கள்தமது திருப்பணியை மேற்கொண்டு தமிழகம் முழுவதும் உலா வந்தபோது தில்லைப் பதியில் அவர்கள் பெற்ற அருளனுபவம் நாம் சிந்தித்தற்கு உரியதாகும். அதனைத் தீவிய இனிய செஞ்சொற்களால் சேக்கிழார் பெருமான் தாம் எழுதிய திருத்தொண்டர் புராணத்தில் தெரித்துரைக்கின்றார். அவர் காட்டிய நெறியைப் பின்பற்றித் திருஞான சம்பந்தர் தில்லைக்குச் சென்று திருச் சிற்றம்பலவனது திருவருட் காட்சி பெற்றதை இனி, நாம் காணலாம்.

சிவனது திருவருளால் ஞானப் பாலுண்டு திருஞான சம்பந்தராகிய பின், அவர், தம்மைப் பெற்ற நற்றாய் பிறந்த நனி பள்ளிக்குச் சென்று, பின்பு திருவலம்புரம், திருச் சாய்க்காடு, திருவெண்காடு என்ற பதிகளை வணங்கிக் கொண்டு சீர்காழி வந்து சேர்ந்தார். சம்பந்தரோடு திருநீலகண்ட யாழ்ப்பாணர் இருந்து அவர் பாடும் பாடற்கு யாழிசைக்கும் பணி மேற்கொண்டார். அதனால் அவரது பாட்டிசை, பாலும் தேனும் கலந்தது போலும் இனிமை மிகுந்து கேட்போர் செவிவாயாக உள்ளத்திற் புகுந்து சிவஞானப் பெரும் போகம் விளைத்தது.

சின்னாட்குப் பின் ஞானசம்பந்தர்க்குத் தில்லைப் பெருங் கூத்தன் திருநடம் கும்பிட வேண்டுமென்ற வேட்கை தோன்றி மீதூர்ந்தது. அதனை,

> தில்லைநடம் பயில்வாரைப்
> பணிந்தேத்த
> விரவியெழும் பெருங்காதல்
> வெள்ளம்

என்று சேக்கிழார் குறிக்கின்றார். சிவஞானச் செல்வராதலால், சிவனை நினைந்துபாடும் போதெல்லாம்அவனது அருட்கூத்து அவரது சிந்தைக் கண் தோன்றி இன்பம் செய்தமையால், அதனால் அரும்பிய அன்பு நாளடைவில் பெருகி, அவரது ஞானவுடம்பின் அணுத்தோறும் பாய்ந்து விரவி வேறே இடமின்மை கண்டு மேலெழுந்தமை புலப்பட, "விரவி எழும்பெருங்காதல்" என்றும், அக்காதல், தில்லைப் பெருமன்றில் நடம் பயிலும் பெருமானைக் காண்டலே கருத்தாய் உருக்கொண்டமை விளங்கத் ''தில்லை நடம் பயில் வாரைப் பணிந்து ஏத்த, எழும்பெருங்

காதல் வெள்ளம்'' என்றும் சேக்கிழார் தெரிவிக்கின்றார். மேலும், துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்துப் பெருந்தகையாதலால், சிவனது நடம் பயில் காட்சி பெறுதலில் ஞானசம்பந்தர்க்குப் பேரார்வம் தோன்றுவது இயல்புதானே?

இங்ஙனம், தமது உள்ளத்தெழுந்த பெருங்காதலை அவர் தமது தந்தையார்க்கு உரைக்க, மனம் மகிழ்ந்த அவரும் நீலகண்ட யாழ்ப்பாணரும் உடனே புறப்படுவதற்கு இசைந்தனர். ஞானசம்பந்தர், அவ்விருவரும் உடன் வரச் சீர்காழியிற் கோயில் கொண்டருளும் தோணியப்பரைவழிபட்டு விடை பெற்றுக் கொண்டார். பின்பு அவர்கள் கொள்ளிடம் கடந்து தில்லையின் எல்லையை நண்ணினர். ஞான சம்பந்தர் தில்லைக்குச் செல்வதை நமக்குரைப்பதில் சேக்கிழார்க்குப் பெருங் கிளர்ச்சியும் உவகையும் தோன்றுகின்றன. தில்லைப் பதியின் எல்லையில் நிலவும் இயற்கைச் சூழ்நிலை அவருடைய தெய்வப் புலமைக் கண்ணில் காட்சி தருகின்றது.

தில்லை எல்லையில் கால் வைத்ததும், ஞானசம்பந்தர் மண்ணில் வீழ்ந்து மார்புறப் பணிந்து வணங்கி நிற்கின்றார். அவரது உள்ளத்தே தாம் செல்கதிப் பயனைச் செம்மையாய்க் காண்பது போலும் களிப்பு மிகுகின்றது. அப்பொழுது இராப்பொழுது பைய விடிகிறது. புள்ளினம் எழுந்து அவரை வாழ்த்தி வரவேற்பது போல இசைக்கின்றன. நீர் நிலைகளில் முகைகள் கூம்ப, தாமரை மலர்கள் விரிந்து விளங்குகின்றன.

இருமருங்கு எங்கும்
தங்கு புள்ளொலி வாழ்த்துரை எடுத்து, முன்
தாமரை மதுவாசப்
பொங்கு செம்முகை கரம்குவித்து,
அலர்முகம்
காட்டின பொய்கை

என்று சேக்கிழார் செப்புகின்றார். அரும்பி நிமிர்ந்து நிற்கும் முகைகள், குவிந்து உயர்ந்து தோன்றும் கைகளையும், மலர்ந்து விளங்கும் தாமரைகள், அன்புடைய மக்களின் முகங்களையும் நினைப்பிக்கவே, பொய்கைகள், சம்பந்தரைக் கண்டு முகம் மலர்ந்து கை குவித்து, வருக! என்பது போலும் காட்சி தருகின்றன என்பது நம் சிந்தைக்கு எத்துணை இன்பம் செய்கிறது, காண்மின்.

இங்ஙனம், ஞானசம்பந்தர் வருவதும், பொய்கைகள் அவரை வரவேற்பதும், கண்ட சேக்கிழாருடைய புலமைக் கண் அவற்றின் கரையில் நிற்கும் சோலைகளைக் காண்கிறது. அங்கே மயில்கள் களிப்புற்று அகவுகின்றன; மலர்களிடையே தவழ்ந்துவரும் குளிர்காற்று எதிரே வீசுகிறது. காற்று அசைதலால் பூக்களில் படிந்து தாதுண்ணும் சுரும்பினம் எழுந்து ஆரவாரிக்கின்றன. இளந் தளிர்கள், காலை இளவெயிலின் பொன்னொளியால் ஒளி திகழ, முற்றிய இலைகள் அழகுற அசைகின்றன. மலர்ந்த பூக்களைச் சுமந்த மென்கொடிகள் சாய்ந்து ஆடுகின்றன. இந்த இனிய காட்சி, சான்றோராகிய ஞான சம்பந்தரின் வருகையைச் சிறப்பித்தல் வேண்டி, ஆடல் மகளிர் முகம் மலர்ந்து மகிழ்ச்சியுடன் ஆடியும் பாடியும் வரவேற்பது போல்வது என்று எண்ணி,

கலவ மென்மயில் இனம்களித்து
அழைத்திடக் கடிமணக் குளிர்கால்வந்து
உலவி முன்பணிந்து எதிர்கொளக்
கிளர்ந்துடன் வரும் சுரும்பார்ப்ப
இலகு செந்தளிர்ஒளி நிறம்திகழ்தர
இரு குழை புடையாட
மலர்முகம் பொலிந்து அசையமென்
கொம்பர் நின்று ஆடுவமலர்ச்சோலை

என்று பாடுகின்றார் சேக்கிழார். மயிலினம் களித்து அழைத்திட, குளிர் கால் வந்து எதிர் கொள, உடன்வரும் சுரும்புகள் ஆர்ப்ப, செந்தளிர் நிறம் திகழ்தர, குழைபுடையாட, மலர்கள் பொலிந்து அசைய, மென் கொம்பர் நின்று ஆடுவ மலர்ச் சோலை என்ற சொற்கள், நம் கருத்தில், மேலே குறித்த ஆடல் மகளிர் முகம் மலர்ந்து

ஆடிப்பாடி வரவேற்கும் சிறப்பை இனிது தோற்றுவிக்கின்றதைக் காணலாம்.

சோலைகளைக் கடந்ததும், எதிரே நெல் விளைந்து கதிர் சாய்ந்து நிற்கும் வயல்கள் காணப்படுகின்றன. அவ்வழியே ஞானசம்பந்தர் வருகின்றார். அப்போது குளிர்ந்த மென்காற்று வீசவும், பூக்களின் தாதினைத் தூவி வயலில் விளைந்துள்ள நெற் பயிர்கள் தலை சாய்கின்றன. அதனை நோக்கும் சேக்கிழார் பெருமான், நெற்பயிரின் செயல், பூத் தூவி அடி வணங்கி வரவேற்கும் சான்றோர் போல்வதை நினைந்து,

மழைத்த மந்தமாருதத் தினல்நறுமலர்
வண்ண நுண்துகள் தூவித்
தழைத்த பொங்கெழில் முகம்செய்து
வணங்கின தடம்பணைவயற் சாலி

என்று புகழ்ந்துரைக்கின்றார்.

இனி வயற்புறத்தே கமுக மரங்கள் நிற்கின்றன; தென்றல் வீசுகிறது; அதனால் அம்மரங்கள் இருபுடையும் ஒன்றோடொன்று முன்னும் பின்னுமாய்ச் சாய்ந்து ஆடுகின்றன. அது, ஞான சம்பந்தரைக் கண்ணிற் காணவிரும்பி ஒன்றினொன்று முந்தியும் பிந்தியும் பக்கத்திற் சாய்ந்தும் மாறி முயல்வது போலும் தோற்றம் அளிக்கிறது. அக்காட்சியில் ஈடுபட்ட சேக்கிழார்,

ஞாலம் உய்ந்திட ஞானமுண்டவர்எழுந்
தருளும் அந்நலம் கண்டு
சேல்அலம்பு தண்புனல் தடம்படிந்து
அணைசீதமா ருதம் வீசச்
சாலவும்பல கண்பெறும் பயன்பெறும்
தன்மையில் களி கூர்வ
போல் அசைந்து இருபுடைமிடைந்து
ஆடின புறம்பணை நறும்பூகம்

என்று பாடுகின்றார். இப்பாட்டில், ஞான சம்பந்தர் ஞானப்பால் உண்டது தன்னலம் கருதியன்று; உலகவர் செந்தமிழால் சிவநெறி யுணர்ந்து உய்தற் பொருட்டு என்ற கருத்து விளங்க, ''ஞாலம் உய்ந்திட ஞானம் உண்டவர்'' என்று குறிக்கின்றார். தன்னை மறந்து உலகுய்யக் கருதி வாழும் சான்றோரை மன்னுயிர் யாவும் தொழுவது இயல்பாதலால், கமுகு முதலிய புல்லுயிர்களும் சம்பந்தப் பெருமானைக் கண்டு மகிழ்தற்கு முந்துகின்றன என்பது இதனுட் பொதிந்து கிடக்கும் உண்மை. இவ்வாறு ஞாலம் உய்ய வந்த ஞான சம்பந்தர் திருமேனியில் தோய்ந்து தண்மை செய்ய வந்த ''சீத மாருதம்'' அவர் மேனியின் தூய்மை நோக்கி முதற்கண் தானும் ''தண் புனல் தடம்படிந்து'' வருகிறதாம். பாக்கு மரத்தின் மடல் தோன்றிய இடம்கண்ணெனப்படுவதால், அம்மரத்திற்குக் கண்கள் பல; கண் பலபெற்ற தன் பயன் ஞானசம்பந்தரைக் காண்பதாகும் என்று கருதியது போல அவை அவர் வரும் வழியில் சாய்ந்துஅசைந்து ஆடுகின்றன என்பாராய், ''சாலவும் பல கண்பெறும்பயன் தன்மையில் களி கூர்வ போல் அசைந்து ஆடினநறும் பூகம்'' என்று புகழ்கின்றார்.

பாக்கு மரங்கள் காற்றால் அசையும் போது, அவற்றின் தலைஒன்றுக்கொன்று முன்னும் பின்னும் பக்கத்தும் சாய்ந்து அசைவது ஒன்றினொன்று சம்பந்தரைக் காண்பதற்கு முந்தியும், ஒருமுறை பார்த்து ஆராமல் பன்முறையும் பல்காலும் சாய்ந்தும் பார்க்க முயல்வது போலத் தோன்றுதலால், ''இருபுடை மிடைந்து ஆடின''என்பதும், அவரைக் காண்பது கண்பெற்ற பேறு என்று கருதின என்பதும், படிக்குந்தோறும் இன்பம் செய்கின்றன.

இக்கமுகந்தோட்டத்துக்கு அப்பால் வெள்ளிடை யொன்று காணப்படுகிறது. அங்கிருந்து தில்லை நகரை நோக்குவோர்க்கு அங்கு வாழும் வேதியர் மனைக்கண் நிகழும் வேள்வியில் எழும் புகை மேலே சென்று வானத்திற் பரந்து நீல நிறம் கொண்டு நிலவுவது தெரிகிறது. அதனைக் காணும் சேக்கிழார்க்கு ஞான சம்பந்தப் பிள்ளையாரின் வரு

கையைச் சிறப்பித்து நகரவர், நீலநிற ஆடையால் விதானமிட்டது போலத் தோன்றுகிறது. ''மறையவர் பயில் வேள்விச் சிவம்தரும் பயனுடை ஆகுதி களின் செழும் புகைப்பரப்பாலே...... பிள்ளையார் தாம் அணைவுற முன்னே, நிவந்த நீலநுண் துகில் விதானித்தது போன்றது நெடுவானம்'' என்று உரைக்கின்றார்.

வெள்ளிடையில் பிள்ளையார் வருவது கண்டதும், தில்லை வாழ் அந்தணர்கள் சுற்றமும் அன்பரும் சூழ இருந்து நகரத்தை அணி செய்து போந்து அவரை வரவேற்கின்றனர். மங்கல முழக்கமும் மறை மழக்கமும், பொங்கிழை நிறைகுடம் தீபங்கள் நிறைந்து வர, ஞானசம்பந்தர், நகரவாயில் நடந்து, தெற்கு வாயில் வழியாகத் திருவீதி அடைகின்றார். அங்கே எழுநிலைக் கோபுரம் எழில் கொண்டு நிற்பது கண்டு அதனைப் பணிந்தெழுந்து தில்லைப் பெருமானை நினைந்து பலபடப் போற்றிப் பரவுகின்றார்.

பின்பு உள்ளே சென்று, முற்றத்தில் நின்று வணங்கிப் பொன்னம்பலத்தை வலம் வந்தவர், பக்கத்தில் உள்ள பேரம்பலத்தை வழிபட்டு ஆடும் பெருமான் திருமுன்புள்ள மணி வாயிலில் நிற்கின்றார். அவரது சிந்தையில் ஆர்வம் பெருக, அவருடைய சிறிய மெல்லிய கைகள் குவிந்து தலைமேல் ஏறுகின்றன. களி கூர்தலால், அன்பு நீர் பெருகிக் கண்களில் வழிகிறது. ஒருபால் அவரையும், ஒருபால் கூத்தப் பெருமானையும், சேக்கிழார் தமது கண்ணில் காண்கின்றார். சம்பந்தரின் ஞானச் சிறப்பும், அம்பலத்தின் அருமையும், பெருமானது ஆடல் அழகு சுரக்கும் இன்பமும், சேக்கிழார் தெரியப் புலனுகின்றன. அக்காட்சியில் ஈடுபட்ட சேக்கிழார் பெருமான், அம்பலவாணனை நோக்கிய ஞானசம்பந்தர்க்கு, அம்பலம் அவர் பெற்ற ஞானமாகவும், ஆடலரசின் அருமைக் கூத்து நல்கும் இன்பம், அந்த ஞானத்தின் பயனுகிய ஆனந்தமாகவும், இலங்குவதுகாண்கின்றார். அதனை,

அண்ணலார் தமக்கு அளித்தமெய்ஞ்
ஞானமே யான அம்பலமும், தம்
உள்நிறைந்த ஞானத்துஎழும் ஆனந்த
ஒருபெருந் தனிக் கூத்தும்
கண்ணின் முன்புறக்கண்டு கும்பிட்டு
எழும் களிப்பொடும் கடற்காழிப்
புண்ணியக் கொழுந்தனையவர் போற்றுவார்
புனிதர் ஆடிய பொற்பு

என்று உரைக்கின்றார்.

சிவஞான இன்ப அமுதத்தை ''உண் அடிசில்'' என ஊட்டியவர் அம்மையே யாயினும், அதனை ஊட்டுமாறு பணித்தவர் அண்ணலாகிய சிவபெருமானுதலால், அவரையே விதந்து, ''அண்ணலார்'' என்றும், அளிக்கப் பெற்ற அடிசில் எண்ணரிய சிவ ஞானத்தின்னமுதம் குழைத்து அருளப் பெற்றதாகையால், அதனையுண்டதன் பயனாய் விளங்கிய மெய்ம்மை ஞானத்தை, ''அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ்ஞானம்'' என்றும், அது தானும், தாமல்லது பிறர் யாரும் எவ்விடத்தும் எக்காலத்தும் பெற்றதின்மையின் ''தமக்கு அளித்த மெய்ஞ்ஞானம்'' என்றும், அருவமாகிய அந்த ஞானம் உருவமாய் அம்பலமாய்க் காட்சி தருவது தோன்ற, ''மெய்ஞ்ஞானமேயான அம்பலம்'' என்றும் பரிந்து கூறுகின்றார். ஞானத்திரளாய் நின்ற பெருமான் எழுந்தருள்வது ஞான வெளியிலாதலால், அந்த உண்மை தோன்ற ''மெய்ஞ் ஞானமேயான அம்பலம்'' என்றார் என்று கொள்ளினும் அமையும்.

(தொடரும்)

கண்ணுதலான் காதல்

(பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார், தத்புருஷ தேசிகர், தேவகோட்டை)

உலகத்திலுள்ள சித்தும் சடமுமாகிய எல்லாப் பொருள்களிலும் நிகழும் இயக்கங்களுக்குச் சிவ பெருமான் அவற்றுடன் ஒன்ருகியும் உடனுகியும் தொடர்பு கொண்டிருப்பதே காரணமாகும். சடப் பொருள்களின் இயக்கம், சித்துப் பொருள்களினுலேயே ஆவதென்பதைக் காட்சியளவையாகிய பிரத்தியட்சப் பிரமாணம் ஒன்றே காட்டி விடும். ஆனுல் சூக்கும சித்தாகிய உயிரின் இயக்கம், அதிசூக்கும சித்தாகிய இறைவனுலேயே நிகழ்ந்து வருகின்றதென்பதைக் கருதலளவை உரையளவைகளாகிய அநுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணங்கள் கொண்டே அறிய வேண்டியதாயிருக்கின்றது.

இங்ஙனம் இறைவன் எல்லாப் பொருள்களுடனும் ஒன்ருயும் உடனுயும் இருந்து உதவி புரிந்து வருவது, அவன் உயிர்களிடத்தில் வைத்த ஒப்பற்ற பெருங் கருணையினுலேயேயாம். அறியாப் பருவத்தை யுடைய குழந்தையின் நற்பேற்றில் கவனம் வைக்கின்ற அன்னையினது விருப்பமும், ஆன்மாக்களாகிய நமது நற்கதியில் கருணை கொள்ளுகின்ற ஆண்டவனது விருப்பமும், ஏறக்குறைய ஒத்த தகுதியை யுடையன. வேண்டுதல் வேண்டாமையில்லாத அவனுக்கு விருப்ப வல்லமையாகிய ''இச்சா சத்தி''யும் உண்டென்று அருள் நூல்கள் கூறுகின்றன. உயிர்களுக்குப் போல இறைவனுக்கும் இச்சை யுண்டென்பது உண்மையேயாயினும், இறைவனது இச்சை உயிர்களது இச்சையைப் போன்று தன் பயன் குறித்து நிகழுவதன்ரும்.

ஆன்மாக்களாகிய நம்முடைய இச்சை, நம் பயன் குறித்ததாக எழுந்து, நமது ஞானக் கிரியைகளை வசப்படுத்தி நின்று, ஏவல் கொள்ளும். இறைவனது இச்சையோ, அங்ஙனமின்றி அவனுக்கு ஏதும் பயன் தராததாய், ஆன்மாக்களாகிய நமக்கே பயன் தருவதாய், அவனது ஞான சத்திக் கடங்கியதாய், அந்த ஞான சத்தியின் ஏவலைக் கிரியா சத்தியைக் கொண்டு நிறைவேற்றுவதாயிருக்கும். அவ் விச்சா சத்திக்கு ''எல்லா ஆன்மாக்களும் ஈடேறி உய்தி பெறுதல் வேண்டும்'' என்ற ஒன்று மட்டுமே குறிக்கோளாயிருப்பதாதலின் எந்தக் காலத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் இறைவன்பால் அதுஏற்றத் தாழ்வுகள் உடையதாய் நிகழுவதில்லை.

சிவசத்தியினது சொரூபம் கூற வந்த சிவஞான சித்தியார் ''சத்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்'' என்று அருள் செய்தது. ''உயிர்கட்கு அநுக்கிரக மாத்திரங் குறித்துப் பொதுவகையான் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானமொன்றே சிவசத்தியின் சொரூபம்'' என்று இதற்கு உரை கண்டனர் சிவஞான சுவாமிகள். மேலும் சிவபெருமானது ஞானத்தின் வழிப்பட்டே அவரது இச்சை கிரியைகள் நிகழ்வன என்பதைச் சிவஞான சித்தியார் ''எத்திறம் ஞானம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி'' என்று உணர்த்தியருளுகிறது.

சிவசத்தி, பராசத்தி, தடையிலா ஞானம் என்பன வாகியவற்ருல் குறிக்கப் பெறும் அருட்சத்தி ஒன்றே, தொழில் வேறுபாடுகளால் இச்சா சத்தி ஞான சத்தி கிரியா சத்தி என மூன்ருகியும், இன்னும் பல திறப்பட்டும் நிற்கும். அவ் விச்சா ஞானக்கிரியை

கள் உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தலில் வைக்கும் கருணையும், அதற்குச் செய்யக் கடவதான உபாயங்களை எல்லாம் அறியும் அறிவும், அவற்றை அவ்வாறே செய்யும் சங்கற்பமுமாக நிகழ்வனவாம். இதனை ''ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை யென்றொரு மூன்றாகி, நின்றிடும் சத்தி இச்சை உயிர்க்கருள் நேசம் ஆகும்'' என்ற சிவஞான சித்தியார் வாயிலாக உணரலாம்.

இங்ஙனம் பல வழிப்படாமலும், ஏற்றத் தாழ்வுகளை அடையாமலும், ஓரே படித்தாயிருக்கின்ற இறைவனது இச்சா சத்தி, உயிர்களுக்கு அருள் புரியும் நேசமாகின்ற ஒன்றேயாக அமைந்திருப்பதாலும், அவனது ஞானக்கிரியா சத்திகளும் அவ்விச்சா சத்தியின் வழி நின்று அருள் நேச அடிப்படையிலேயே தொழிற்படுவதாலும் இறைவனுக்குரிய எண் குணங்களுள் பேரருளுடைமை என்ற ஒன்று இடம் பெற்றுள்ளது.

அறிவிச்சை செயல்களைத் தம் பயன் கருதாது பிறர் பயன் கருதியே செலுத்துகின்ற பேரருள், இறைவன் ஒருவனுக்கே தனிச் சிறப்பாய் அமைந்ததாகும். உயிர் வர்க்கத்தினராகிய மற்றைத் தேவர்கள் பாலும் மானிடர் பாலும் மற்றவர் பாலும் இந்தச் சிறப்பு எப்போதும் அமைவது கிடையாது. இது கொண்டு இறைவனாகிய சிவ பெருமான் ஒருவனே எல்லோருக்கும் தலைவன் என்பதை எளிதில் தெரிந்து கொள்ள முடியும் என்றாலும், எத்துணைபேர் இதனை அறிந்திருக்கின்றனர்? இது பற்றி இரங்கிப் பேசுகின்றது, திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்தின் பன்னிரண்டாவது செய்யுள்! அது,

கண்ணுத லானொரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனைப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவனென் றறியகி லார்களே

என்பதாகும்.

சிவபெருமானது உருவத் திருமேனியில் அவனது பரத்துவ உண்மையைப் புலப்படுத்துவன நெற்றிக் கண்ணும், நீலகண்டமுமாம். நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்து இச்சை வழிப்படும் இயல்பு தனக்கில்லை என்பதைத் திருமால் பிரமனாகிய தேவரும் ஏனையோரும் உணரும்படி சிவபெருமான் செய்த வரலாறு புராணங்களில் கேட்கப் பெறுகின்றது. உயிர்கள் உய்தி பெற வேண்டுமென்னும் இச்சை இறைவன் பாலுள்ளதெனவே அதுபோல் மற்ற இச்சைகளும் அவன்பால் உள்ளனவோ என மயங்காதிருத்தற் பொருட்டு ஆசிரியர் திருமூலதேவ நாயனார் 'கண்ணுதலான்' என்ற பெயரால் இத்திருப்பாடலில் இறைவனைக் குறித்தருளினார்.

இச்சை அன்புடன் கூடுகிறபொழுது காதல் என்று அதனைச் சொல்லுகின்றோம். இறைவன் அருள் வயத்தாற் கொள்ளுகின்ற இச்சையாகிய காதல் ஒன்றேயாக உள்ள தென்பதை ''ஒரு காதலின்'' என்பதனாலும், அவ்விச்சையை நிறைவேற்றியன்றி ஓய்வு பெற விரும்பாதவனாய் இடையீடில்லாமல் அவன் ஐந்தொழில்களை ஆற்றி வருகின்றான் என்பதை ''நிற்கவும்'' என்பதனாலும் ஆசிரியர் உணர வைத்தார்.

பிறப்பு, இறப்பை யுடையவர்கள் பசுக்கள். யாருக்கு அவை இல்லையோ அவர் பதி என்பது வேதாகம முடிபு. பதியாகிய பரமசிவனது திருவருளினாற் கிடைத்த பதவிகளைப் பெற்று எண்ணில்லாத தேவர்கள், ஆட்சி பீடத்தில் இருந்து வருகிறார்கள். என்றாலும் அவர்கள் அப்பதவியில் நிலையாக நிற்கக் கூடியவர்கள் அல்லர். தேவரனைவரும் அவரவர் பதவிகளை விட்டு நீங்கியதும், பதவிகள் அவர்களை விட்டு நீங்கியதுமான வரலாறுகள் பலவற்றை நாம் கேட்டிருக்கின்றோம். இறப்பினாற் பதவி நீங்குவது மட்டு

மன்றி இடைக் காலத்திலும் அது நீங்கி விடுவது எங்கும் காணப்பெறுகின்ற தல்லவா? அதனாலேயே 'எண்ணிலி தேவர் இறந்தார்' என ஆசிரியர் அருளிச் செய்தார்.

உயிர்த் தொகைகள் எண்ணற்றன. அவைகள் வாழும் இடங்களில் சிறப்புடையவை மண்ணகமும், வானகமுமாகிய இரண்டுமேயாம். மண்ணகம், மனம் வாக்கு காயங்களால் சிவபெருமானுக்குப் பணி செய்து பிறவா நெறி பெறுவதற்கு வாய்த்த இடம். வானகம், பசு புண்ணியத்தால் கிடைக்கும் போக போக்கியங்களுக்குரிய இன்பத்தினை வழங்கும் இடம். மற்ற எல்லா இடங்களையும் நோக்கச் சிறந்தனவாக உள்ள இவ்விரண்டு உலகங்களிலும் வாழுகின்றவர்களே அறியாமையாற் பீடிக்கப்பட்டு உண்மை காணாது உழல்வார்களாயின் ஏனையோரின் நிலைபற்றி என்ன சொல்ல இருக்கிறது?

பாவ புண்ணியங்களைச் செய்து அதன் பயன்களாகிய இன்ப துன்பங்களை நுகருவதற்குப் பலர் மண்ணகத்தில் வந்து பிறக்கின்றார்கள். பசு புண்ணியங்களே மிக உயர்ந்தவைஎனக் கொண்டு அவற்றையே முழுவதும் செய்து பலர் வானகத்தை அடைகின்றார்கள். இவ்விரு தகுதியினரும் மீண்டும் மீண்டும் பிறந்திறந்துழலும் கீழ் நெறியில் நிற்பவரேயாவர். இறைவனது பொருள் சேர் புகழைப் புரிந்து இருள்சேர்இருவினையும் சேராது உய்தி பெறுவதே இவரது கடமையாயிருக்க, அதனை விடுத்து மண்ணுறுதலும் வானுறுதலுமாகிய இவற்றில் மாறி மாறி உழல்வது எவ்வளவு அறியாமை?

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாதவராய்த் தீவண்ணர் திறத்தை ஒரு காலேனும் பேசாதவராய் ஒரு பொழுதேனும் திருக்கோயிலுக்குச் செல்லாதவராய் உண்பதற்கு முன்னர் மலர் கொய்து சாத்திஉண்ணாதவராய், அரிய நோய்கள் நீங்கும்படி திருவெண்ணீற்றை அணியாதவராய் யாரேனும் இருப்பார்களாயின் அவர்களது இறப்பு மீண்டும் பிறப்பதற்குக் காரணமாய் அமையும் என்று அப்பரடிகள் அருளுகிறார்கள். இங்ஙனம் பிறப்பிறப்பிற் கிடந்துழலும் உயிர்களின் அறியாமை நீங்க வேண்டுவதும், அது நீங்குதற்குரிய உபாயத்தை அறிந்து கடைப்பிடிக்க வேண்டுவதும் மிக மிக இன்றியமையாதனவாகும். தெய்வப் புலவராகிய திருவள்ளுவ தேவ நாயனார் 'பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருளானாம் மாணாப் பிறப்பு'' என்றும், ''நில்லா தவற்றை நிலையின என்றுணரும், புல்லறி வாண்மை கடை'' என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

நிலையில்லாதவர்களை நிலையானவர்களாகவும், பொருளற்றவர்களைப் பொருள்ளாளர்களாகவும் கொள்ளுதல் அறிவுடைமையாகாதது மட்டுமல்ல; பிறப்பிறப்பிற்கும் காரணமாவது என்பது அறிய வேண்டுவதாகும். பிறப்பை நீக்கிக் கொள்ளுதற்குரிய உபாயம், நிலையான தலைமைப் பொருள் சிவபெருமானேயென உணர்ந்து அவருக்குச் செய்யக் கடவனவாகிய வழிபாடுகளை விதிப்படி செய்வதே யாகும். இதனை அறிந்து கடைப் பிடித்தற்குரிய காதலும் மதுகையும் உடையவர் மிகச் சிலராகவன்றோ உள்ளனர்? எனவேதான் அவரல்லாத பெரும்பாலானவரைக் கண்டு ''அண்ணல் இவனென்று அறிய கிலார்களே'' என்று ஆசிரியர் இரங்கியருளுகின்றார்.

ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

(திரு. கே. பட்சிராஜன், பி.ஏ., பி.எல்., திருநெல்வேலி)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இப்படி உடையவர் எழுந்தருளியிருக்கும் காலத்தே கூரத் தாழ்வான் எம்பெருமானுரிடம் யாதும் விண்ணப்பஞ் செய்யாதே தனியே நம்பெருமாள் சன்னிதிக்கு ஒரு நாள் எழுந்தருளிப் பெருமாளை ஏகாந்தத்திலே சேவித்து நின்றூர். பெருமானும் அவரை நோக்கி ''ஆழ்வான்! நம்மிடம் ஏதோ ஒன்று சொல்ல வேண்டுமென்று உமது உள்ளத்திலே ஓடுவதாகத் தெரிகின்றதே'' என்று வினவியருள ஆழ்வானும் பெருமாளை ஒரு பாட்டாலே பரவி அவனது கிருபையைப் பரக்க உபந்யசித்து நின்றூர். பெருமாள் திருவுள்ளம் மிகவும் உகந்து அவ்வுகப்பின் மிகுதியாலே ஆழ்வானை நோக்கி ''ஆழ்வானே! போரவுகந்தோம். நீர் வேண்டினதெல்லாம் தருகிறேம். வேண்டிக் கொள்ளும்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். ஆழ்வானும் ''நாயன்தே! தேவரீர் பண்டே அனைத்தும்தந்தருளினீரன்றே?''என்ன, பெருமாளும், ''அப்படியன்று காணும். இப்போதும் உமது விருப்பம் எதுவோ ,அதனை வேண்டிக் கொள்ளும் நம்திருவாணை! நம்மிராமாநுசன் ஆணை! நீர் வேண்டியது தருகிறேம்'' என்று ஆழ்வானை ஒன்று வேண்டிக் கொள்ள நிர்ப்பந்திப்பது போன்று திருவுள்ளமாக, ஆழ்வான் நம்பெருமாளே!

வரத! உண்டிடக் கண்உடல்; நாவும்
செவியும் மாற்றுச் சுவைஉறும்; நாசி
பரபுலன் நுகர் வெண்ணும் இப்பான்மை
பாரில் யான்எவன் பெறுவது நின்பால்!

தேவரீரை அநுபவிப்பதற்கு விரோதியாக உள்ள இந்த சரீர சம்பந்தத்தை விடுத்து எப்போதும் உம்மையே அநுபவிக்கும்படி தந்தருள வேணும்'' என்று பிரார்த்தித்து நின்றூர். பெருமாளும் ''ஓகோ! நாம் அவசரப்பட்டு விட்டோமே என எண்ணி ஆழ்வானை நோக்கி 'அத்தை ஒழியச் சொல்லும்' என்ன ஆழ்வானும் ''ராமோ த்விர்நாபி பாஷதே'' என்றும் 'ஒன்றே உரைப்பான்' என்றுமல்லவா தேவரீருடைய ப்ரஸித்தி. ''பாவியேன் தோன்றிப் பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல் நாவுமிரண்டுளவாயிற்று நாணிலியேனுக்கே'' என்று கோதை புலம்பியபடி என்னளவில் உமது ஆணையிட்டுரைத்த வாக்கும் பலியாதது போலும். ஸ்வாமீ 'தாம் வேண்டும் காமமே காட்டும் கடிது' என்று உம்மைக் கூறுவர். அடியேனுடைய விருப்பத்தைவிண்ணப்பித்தேன்.வேறு ஒன்றும் வேண்டலன். அதனுல் அதனையே அருள வேண்டும் என்று விநயமாக விண்ணப்பித்தார். கேட்ட நம்பெருமாள் ஆழ்வான் விருப்பத்தின்ஊற்றத்தை வியந்தவராய் ''ஆழ்வான்! உமக்கு மட்டுமில்லை காணும். உம்முடைய சம்பந்தமுடையாருக்கும் பரமபதம் தந்தோம். கவலையுருதேயும் என்று அருளிச் செய்து திருப்பரியட்டமும் தளிகைப் பிரசாதமும் பூந்தண் மாலைத் தண்டுழாய்த் தலைமாலையும் திருக்கைச் சிறப்பும் பிரசாதித்தருளி விடைகொடுத்தனுப்பினர். ஆழ்வான் அவையனைத்தையும் பணிவுடனும் மகிழ்வுடனும் ஏற்றுக் கொண்டு பெருமாளின் தலை மாலையையும்அபய அஸ்தத்தையும் தம் சிரமீது ஏந்தியவராய்க் கோயிலினின்றும் புறப்பட்டனர். நேரே தம் திருமாளிகை நோக்கிச் செல்லாது ஆழ்வார் திருமாளிகையின் புறத்திலே தங்கினுர். இதனை முதலிகள் உடையவருக்கு அறிவிக்க உடையவர் வியந்து முகக் குறியராய் தாம் அரையில் சாத்திய காஷாயத் ''தூசு நீக்கி மேலெறிந்து ஆர்த்து'' அதனை மீண்டும் ஏந்தி நிற்க முதலிகள் ஒன்றும் தெரியாது ''ஜீயரே!இதுஎன்ன!'' என்று பதறி வினவினர். உடையவரும் ''நமக்கும் ஆழ்வான் சம்பந்தம் உண்டே. ஆகையால் நாமும் பரமபதம் பெறலாமன்றே'' எனக் கூறி நம்பெருமாள் திருமுன்பே நடந்தவற்றை எல்லாம் நேரிலே கண்டது போன்று முதலிகளுக்குத் தெரிவித்தார். முதலிலே உள்ளம் களித்ததே யாயினும் ஆழ்வானைப் பிரிந்து விடுவோமோ என்ற கவலை வாட்டத் தொடங்கியது. உடனேஸ்ரீ பாதத்து முதலிகள் அனைவரும் பின் தொடர உடையவர் ஆழ்வான் இருந்த இடத்து எழுந்தருளி அவரை

நோக்கி 'ஆழ்வானே நீர் இப்படிச் செய்யலாமோ?' என்று ஏக்கத்தோடு வினவ ஆழ்வானும் ஒன்றும் பேசாமலே இருந்தார். உடையவர் அவர் மௌனத்தின் காரணம் புரியாதே ''ஆழ்வான்! முற்படப் பரமபதம் செல்லவேண்டுமென்ற விருப்புக்கு என்ன காரணம். ஏன் ஒன்றும் பேசாதிருக்கின்றீர்?'' என்று வினவ ஆழ்வானும் ''ஸ்வாமீ! பரம பதத்தில் அடைவுகேடு நேரும் என்றஞ்சியே அடியேன் இவ்வண்ணம் வேண்டியது'' என்று விண்ணப்பித்தார். உடையவரும் ''என்ன அடைவுகேடு நேர்ந்துவிடும் என்று அஞ்சினீர் காணும்'' என்று கேட்க ஆழ்வான் நிதானமாகப் பதிலிறுத்தார். ''ஸ்வாமீ! தேவரீர் ஸம்பந்தமுடைய அடியேனுக்குப் பரமபத ப்ராப்தியில் ஐயமில்லை. ஆனால் தேவரீர் முதலில், அங்கே எழுந்தருளிப் பின் அடியேன் வருவேனாயின் அடைவு கேடு நேருமே ஸ்வாமீ! 'முடியுடை வானவர் முறைமுறை எதிர்கொள்ள' என்று ஆழ்வார் ஸாதித்தபடி அங்கு செல்லும்முக்தனை அங்குள்ள நித்ய சூரிகள் அனைவரும் எதிர்கொள்வரன்றோ? தேவரீர் முன்னே சென்றால் தேவரீரும் அக் கோஷ்டியுடன் அடியேனை எதிர் கொள்ள நேரிடுமன்றோ? என்றென்றும் அடியேனுடைய ஆசார்யனான தேவரீர் அடியேனை எதிர் கொள்வதென்பது எங்காகிலும் அடைவு கேடுதானே என எண்ணினேன் ஸ்வாமீ! வேறொன்றும் விகல்பமில்லை'' என்றார். ஆழ்வானது ஆசார்ய சேஷத்வ நிஷ்டையின் பராகாஷ்டை அவரை உலுக்கியது. ஆழ்வானை நோக்கி 'ஆழ்வான்! அவனது அந் நித்ய விபூதியிலே அடைவு தேடினீரே நீர்! 'நசாஸ்த்ரம் நைவசக்ரம:' அங்கு உலகில்நடையாடும் சாத்திரங்களுக்கும் விதிகளுக்கும் இடம் கிடையா தென்பது நீர் அறிந்ததன்றோ? உம்முடைய ஆசார்ய பக்தி விசேஷம் இது!' என்று சொல்லித் தம் திருக்கண்கள் முத்துதிர்க்க, சரி! ஆழ்வான் உள்ளத்தின் ஓட்டம் இது என்பதைத் தேர்ந்து தமது திருப்பவள வாயால் ஆழ்வான் வலச் செவியிலே மந்த்ர ரத்னமான த்வயத்தை ஓதியருளினார். பார்த்த முதலிகள் உடையவரை நோக்கி ''ஸ்வாமீ! இப்போது இதற்கு என்ன அவசியம்'' என்று வினவினர். உடையவரும் ''இன்னும் நீங்கள் அறியவில்லையா. ராஜ புத்ரனுக்கு கர்ப்பூர நிகரமில்லாத போதுநாக்கு வறளுமா போலே இவருக்கு த்வயமில்லாத போது நாக்கு வறளும்'' என்று பதிலிறுத்து ஆழ்வானைத் தமது தடக்கைகளால் அணைத்துக் கொண்டார். எவ்வளவோ முயன்றும் தாங்காது விம்மல் பொருமல் பொங்கின. உள்ளம் மிகவும் வருந்தியவராய் ஆழ்வானை நோக்கி ''ஆழ்வான்! எனக்கு உயிர் நிலை போன்றிருந்த உம்மை இழந்து நான் எப்படி தரிப்பேன். எம்மையும் உடன் கொண்டு செல்லத் திருவுள்ளம் பெற்றீரில்லை. நம்மை விட்டுப் போவதும் உமக்கு உகப்பாய் விட்டதா? பரமபத நாதனோடு சேர்க்கை, இங்கே ''கண்டவர் தம் மனம் வழங்கும்'' என்றும், 'அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்றும் ஆடவர் பெண்மையவாவும் தோளனாய் இங்கே எழுந்தருளியிருக்கும் நம் பெருமாளோடுள்ள சேர்க்கையை அறுத்து உம்மை முன்னமே ஓடச் செய்வதே! பரமபத நாதனும் நித்த முக்தரும் என்ன பாக்யம் பண்ணினரோ? இங்கு நம் பெருமாளும் நாங்களும் என்ன பாபம் பண்ணினோமோ? இப்படி எங்களை மறைத்து நீர் இவ் வேண்டுகோள் செய்யும்படி!'' என்று பல படியாக வாய்விட்டுப் புலம்பினார். கடைசியில் தெளிந்த மனத்தராய் ''ம்: ம்: உமது திருவுள்ளம் கலங்கும்படி சோகிப்பதில் என்ன பயன்? உமக்குக் கிடைக்க விருக்கும் பேற்றுக்கு நாங்கள் விலக்கடியாகலாமோ. கூடவே கூடாது'' என்று தமக்குள்ளே கூறித் தம்மைத் தேற்றிக் கொண்டவராய் ஆழ்வானை முதுகைத் தடவிக் கொண்டே ''ஆழ்வான்! நீர் சுகமே நித்ய விபூதியேற எழுந்தருளீர்!'' என்று விடை கொடுத்தருளினார்.

ஆழ்வானும் உடையவர் தமக்கு விடை கொடுத்தருளின கிருபையை உன்னி உள்ளம் பொங்கியவராய் உடையவர் திருவடிகளிலே வேரற்ற மரம் போல் வீழ்ந்து அவர் உபய பத மலர்களையும் பற்றிக் கொண்டே கிடந்தார். உடையவர் குனிந்து தம் இரு தாழ் தடக்கைகளாலும் அவரை வாரி யெடுக்க ஆழ்வானும் எழுந்து உடையவர் திருவடிகளைத் தம் கண்களிலும் மார்பிலும் ஒற்றி ஒற்றிப் பின்னர், அத் திருவடிகளிரண்டையும் தம் தலைக் கணியாய்த் தாங்கியவராய் உடையவரிடம் தீர்த்தம் கொள்ள உன்னியவராய் உடையவரை நோக்கித் தம் வலக்கரம் குழித்து நீட்டினார். எம்பெருமானாரும் தமது திருக்கரத்தாலே தீர்த்தம் ப்ரஸாதித்தருளினார்.

—தொடரும்.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

ஸ்ரீ வீரராகவப் பெருமாள், திருவள்ளூர்.

By Courtesy :
'The Divya Kshetras in India Souvenir'.

ஆற்றிலே எதிரேறிய அருட்கவிதை

முன்னுரை :

''தமிழ் என்னும் செல்வக் குழந்தையானது, பொதிய மலையிலே பிறந்தது; பாண்டிய மன்னனுடைய புகழில் பள்ளி கொண்டது; புலவர்களின் சங்கத்தில் அமர்ந்திருந்தது; வைகை யாற்றில் தவழ்ந்து சென்றது; இங்ஙனம் பேதைப் பருவ மடைந்த தமிழ் என்னும் செல்வி நெருப்பிலே நின்ருள்; கற்ருேர் நினைவிலே நடந்தாள்; வராக மூர்த்தியின் மருப்பிலே பயின்ருள்; இவ்வாற்ருல் அழகோவியப் பாவையெனும்படி விளங்கப் பெற்ற அவள், உலகம் எங்கணும் பரவி வளர்ந்து வருகின்ருள்'' என்னும் கருத்தமைய,

பொருப்பிலே பிறந்து, தென்னன்
புகழிலே கிடந்து, சங்கத்து
இருப்பிலே இருந்து, வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று, கற்ருேர்
நினைவிலே நடந்து, ஓர் என
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்ருள்.

எனத் தமிழ் மொழியின் சிறப்பினை, வித்தகப் பெருங் கவிஞர் வேந்தர் எனத் தக்க வில்லிபுத்தூராரின் புதல்வராகிய வரந்தருவார் என்பவர், புகழ்ந்துபோற்றிப் பாராட்டியுள்ளார்.

இப்பாடலில் அவர், தமிழ்த்தாயை 'வைகை ஏட்டிலே தவழ்ந்தாள்' என்று குறிப்பிடுவதற்குக் காரணம், திருஞான சம்பந்தர் மதுரையில் சமணர்களின் விருப்பப்படி நிகழ்த்திய புனல் வாதத்தில், அவர் அருளிச் செய்த திருப்பதிகம் எழுதப் பெற்ற ஏடுகள், வைகை யாற்றில் இடப்பெற்று, அவ்வாற்றிலே எதிரேறிச் சென்றன என்று பெரிய புராணம் கூறும் வரலாற்று நிகழ்ச்சியினை நினைவு கூர்ந்ததேயாகும்.

திருப்பாசுரம் :

திருஞான சம்பந்தர் வைகை யாற்றில் இடப் பெறுவதற்காகப் பாடியருளிய திருப்பதிகம், 'திருப்பாசுரம்' எனப் பெயர் பெறும். 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் திருப்பாடலை முதலாகக் கொண்டது இத் திருப்பதிகம். ''பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்'' என்று, திருஞான சம்பந்தர் தாமே அருளிச் செய்தபடி, ஏனைய எல்லாத் திருப்பதிகங்களையும் விட, மிக்க சிறப்பும் பெருமையும் வாய்ந்ததாகப் பெரியோர்கள் அனைவராலும் பெரிதும் போற்றி மதிக்கப் பெற்று, இஃதொன்றே 'திருப்பாசுரம்' என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப் பெற்று வருகின்றது.

இத் திருப்பதிகம் எழுதப் பெற்ற ஓலை ஏடுகள், வைகை யாற்று நதியின் வெள்ளத்தில் எதிரேறிச் சென்று, இறையருளின் சிறப்பினை நிலை நாட்டின. பிறவி என்னும் ஆற்று வெள்ளத்தில் மயங்கி அமிழாமல், மாதவர்களின் சிறந்த மனமானது, அதனை எதிரேறி நீந்திச் சென்று, முத்தியாகிய கரையை அடைவதைப் போல, திருப்பாசுரம் என்னும் இத்திருப்பதிகம் எழுதப் பெற்ற ஏடுகளும், உண்மைப் பொருள் இது என்று உலக மக்களுக்கு உணர்த்தி, வைகை யாற்று வெள்ளத்தினை எதிர்த்தேறிச் சென்றன.

திருவுடைப் பிள்ளை யார்தம்
திருக்கையால் இட்ட ஏடு
மருவுறும் பிறவி யாற்றின்
மாதவர் மனம்சென் ருற்போல்,
பொருபுனல் வைகை யாற்றில்
எதிர்த்துநீர் கிழித்துப் போகும்;
இருநிலத் தோர்கட் கெல்லாம்
இதுபொருள் என்ற காட்டி!

என இந் நிகழ்ச்சியைக் குறித்துப் பெரிய புராணம் விளக்கி யிருத்தல் காணலாம்.

இங்ஙனம் இப்பதிகம் எழுதிய ஏடுகள் வைகை யாற்று வெள்ளத்தை எதிரேறிச் சென்று சேர்ந்த இடமே, திருவேடகம் என்னும் தலமாகப் பெயர் பெற்றுத் திகழ்கின்றது. ''வைகை நீர் ஏடுசென்று அணைதரும் ஏடகம்'' என்று, ''வன்னியும் மத்தமும்'' எனத் தொடங்கும் பதிகத்தின் இறுதிப் பாடலாகிய திருக்கடைக் காப்பில் வந்திருத்தல், இவ்வுண்மைக்குச் சான்றுபகரும். மேலும்,

தெற்றென்று தெய்வம் தெளியார்
கரைக்கு ஓலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வின்னூரவும்
பண்பு நோக்கில்......

என இப்பதிகத்தின் பதினொன்றும் பாடலில் வரும் குறிப்பும், ஈண்டு எண்ணி இன்புறுதற்குரியது.

மெய்ஞ்ஞானம்:

இத் திருப்பதிகம் ஏனைய எல்லாப் பதிகங்களினும் மிக்க சிறப்பும் பெருமையும் உடையதாதல் கருதியே, ஆசிரியர் சேக்கிழார் அடிகள், இதனை 'மெய்ப்பாசுரம்' (2743) என்று வியந்து போற்றி அருளிச் செய்தார். அன்றியும் இதற்கு மிக விரிவான முறையில், தமது பெரிய புராணத்தின் கண் இருபத்திரண்டு செய்யுட்களால், சிறந்த இனிய உரை விளக்கங்களையும் செய்தருளியுள்ளார். சைவசித்தாந்தச் சான்றோராகிய ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள், தாம் எழிலுற இயற்றியருளிய 'இருபா இருபஃது' என்னும் சித்தாந்த சாத்திர நூலில், இப்பதிகத்தினை 'மெய்ஞ்ஞானம்' எனச் சிறப்பித்துப் பாராட்டி உரைத்திருக்கின்றார். இத்தகைய சிறப்புக்கள் மிக்கதாக விளங்கும் இந்தத்திருப்பதிகத்துப் பாடல்களின் பொருளை, ஈண்டுஇயன்ற அளவு சுருக்கமாகக் காண்போம்.

வாழ்க அந்தணர், வானவர், ஆன்இனம்!
வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயது! எல் லாம்அரன் நாமமே
சூழ்க! வையக மும்துயர் தீர்கவே!

பொருள்: அந்தணர்கள் வாழ்க! தேவர்கள் வாழ்க! பசுக் கூட்டங்கள் வாழ்க! குளிர்ந்த நீர் ஆகிய மழை பொழிக! அரசனும் உயர்ச்சி யுறுக! தீயதுஆகியஅயல் நெறிகளின் தொகுதி, வலிமையற்று அடங்குக! மக்கள் எல்லாரும் சிவபிரானின் திருப்பெயர் ஆகிய திருவைந்தெழுத்தை ஓதி வழிபடுக! உலகமும் துயரங்கள் தீர்ந்து, நலம் பெறுக! (1)

அரிய காட்சிய ராய்த்தமது அங்கைசேர்
எரியர்; ஏறுகந் தேறுவர்; கண்டமுங்
கரியர்; காடுறை வாழ்க்கையர்; ஆயினும்
பெரியர்; ஆர்அறி வார்அவர் பெற்றியே?

பொருள்: சிவபிரான், உயிர்களின் பாசஞான பசுஞானங்களுக்கு உணர்வரிய தன்மையுடையவர். இஃது அவர்தம் சொரூப இலக்கணம் (சிறப்பியல்பு) எனினும், பக்குவம் மிக்க அடியவர்களுக்குத் தடத்த இலக்கண (பொதுவியல்பு) நிலையில், அவர் தம் அழகிய கையிற் பொருந்திய நெருப்பினையுடையவராயும், காளை மாட்டினை விரும்பி ஏறுபவராயும், கருமை நிறம் பொருந்திய கண்டம் உடையவராயும், சுடுகாட்டில் தங்கி வாழும் வாழ்க்கையுடையவராயும், எளிமைத் தன்மையுடையவராக விளங்குவார். இங்ஙனம் எளிவந்தருளும் பல சிறந்த அடையாள நிலைகளையுடையவராயினும், அவர் இவற்றில் எல்லாம் அடங்கி நிற்பவர் அல்லர். விண்முதலாகப் பரந்த ஐம்பூதங்களும் பல உயிர்களும் பல அண்டங்களும் ஆகிய யாவையும், இவர்தம் பெருவடிவில் 'இல்நுழை கதிரின் துன்னணுப் புரைய' அடங்கிக் கிடக்கும். அத்துணைப் பெரிய அவர் தம் பெற்றிமைகளை ஆராய்ந்துணர வல்லார் யாவர்? (2)

வெந்த சாம்பல் விரை எனப் பூசியே
தந்தை யாரொடு தாய்இலர்; தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்;
எந்தை யார்அவர் எவ்வகை யார்கொலோ?

பொருள்: ஊழி முடிவில் எல்லாப் பொருள்களும் அழிந்து வெந்து நீருகி

ஒழிய, அவற்றின் சாம்பரைச் சந்தன மாகிய நறுமணப் பொருள்போலத் தமது திருமேனியிற் பூசிக் கொண்டு, தாமே எல்லா உயிர்களுக்கும் தந்தை யும் தாயுமாக விளங்கித், தமக்கொரு தந்தையும் தாயும் இல்லாதவராக விளங்குபவர் சிவபெருமான். வைகறை யில் தம்மையே சிந்தித்துத் துயிலெழு பவர்களுடைய இருவினைப் பொய்ம்மை வல்வினைகளை, அவர் போக்கி யருள் புரிவார். அத்தகைய எம்முடைய தந்தையார் ஆகிய சிவபிரான், இவ் வுலகப் பொருள்களை வகைப் படுத்திக் கூறுமாறு போல, நம்மால் இவ்வகை யினர் என்று கூறப்படும் நிலையினர் அல்லர். (3)

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும்,
ஆதி மாண்பும்,
கேட்பான் புகில் அளவில்லை;
கிளக்க வேண்டா!
கோட்பா லனவும், வினையும்
குறுகாமை, எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று
இவைகேட்க! தக்கார்.

பொருள்: ஆளாகும் பான்மையையு டைய அடியவர்களுக்குச் சிவபிரான் அருள் புரிகின்ற திறங்களையும், அவர் தம் அளவற்ற மாட்சிமைகளையும் பற்றி, வினவவும் விடையிறுக்கவும் தலைப்பட்டால், அதற்கு ஓர் எல்லை இல்லையாய் முடியும். ஆதலின் நீவிர் அவைபற்றித் தன்முனைப்பு உணர் வோடு ஆராய்ச்சி செய்யப் புகுதல் வேண்டா. அநாதியே செம்பிற் களிம்பு போலச் சகசமாய் உயிர்களைப் பற்றிக் கொண்டு நிற்கும் மூல ஆணவ மலமும், பண்டைப் பழவினையாகிய மூலகன்மமும் குறுகி நலியா திருத்தற் பொருட்டு, எந்தையாகிய, சிவபிரா னின் திருவடிகளை அடைந்து பணிந்து, தகுதியுடைய அன்பர்கள் ஞான நிட்டை கைகூடி யுணரப் பெற்று உய் வார்களாக! (4)

ஏதுக்க ளாலும், எடுத்த
மொழியாலும், மிக்குச்
சோதிக்க வேண்டா! சுடர்விட்
டுளன் எங்கள் சோதி!
மாதுக்கம் நீங்கல் உறுவீர்,
மனம்பற்றி வாழ்மின்,
சாதுக்கள் மிக்கீர்! இறையே
வந்து சார்மின்களே!

பொருள்: காரணங்களாலும் உதா ரணங்களாலும் மிகுதியாக ஆராயத் தலைப்படுதல் வேண்டா. எங்கள் சிவபிரான் நெருப்பின் புறத்தே தோன் றும் ஒளியாயும், அன்பின் உறைப்பினால் அதனுள் அழுந்திக் காண உள்ளே எழு கின்ற சோதியாயும், ஒளி வீசித் திகழு கின்றான். அவனை மனத்திற் பற்றித் தியா னித்து வாழ முற்படுங்கள்! அதனாற் பிறவியாகிய துன்ப நெறியினின்று நீங்கி விடுபடுதலைப் பெறுவீர்கள்! சாதுக்கள் ஆகிய பெரியோர்களே! விரைவில் வந்து சார்வீர்களாக! (5)

ஆடும் எனவும், அருங்கூற்றம்
உதைத்து வேதம்
பாடும் எனவும், புகழ் அல்லது
பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும்எனக்
கேட்டிர் ஆகில்,
நாடுந் திறத்தார்க் கருளல்லது
நாட்டல் ஆமே?

பொருள்: சிவபிரான் ஐந்தொழிற் கூத்து ஆடுவான் என்றும், ஆற்றல் மிக்க கூற்றுவனை உதைத்தான் என்றும், வேத சிவாகமங்களை அருளிச் செய்து பாடுவான் என்று மெல்லாம் கூறப் பெறும் செயல்கள், அவன் தனக்குப் புகழ் பெருகும்படி செய்தனவோ? அன்றி உயிர்களின் இறப்பும் பிறப்பும் ஆகிய துன்பங்களை நீக்குதற் பொருட் டுச் செய்தனவோ? என்று பிறவிக்கு அஞ்சி, வீடுபேறு காதலித்து நீவிர் ஆராய்வீர்களானால், இங்ஙனம் ஆரா யும் தகுதி பெற்ற அன்பர்களுக்கு, இவைகளெல்லாம் உயிர்களின் துன்பம் நீக்குதலாகிய அருள் காரணமாக நிகழ் வன என்று கூறுவதே யன்றி, வேறு பிறிதொரு காரணத்தைக் கூறி நாட் டுதல் இயலுமோ?

இறைவனின் செயல்கள் யாவும் உயிர்களின் நலங்கருதி, அருள் காரண மாகவே நிகழ்வன என்பது, இப்பாட லின் கருத்து. (6)

கடிசேர்ந்த போது மலரான
கைக் கொண்டு, நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங்கு ஆட்டிடத்
தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட,
முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார்
சொலக் கேட்டும் அன்றே!

பொருள்: மணம் பொருந்திய அன் றலர்ந்த மலர்களைக் கொண்டும், பசுக் கள் தாமே நல்ல முறையில் அன்பு பெருகிச் சொரிந்த பாலைக் கொண்டும், விசாரசருமர் தாம் மண்ணியாற்றின் மணலால் அமைத்த சிவலிங்கத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டி வழிபாடு செய்ய, அதுகண்டு பொறாது இலிங்கத் திரு வுருவினைச் சிதைக்க முற்பட்ட தந்தை யாகிய எச்சதத்தன் கால்களை யறும்படி வெட்டி வீழ்த்த, அஃது ஒரு பாதகச் செயலாக இருந்தும், அதனைச் செய்த விசாரசருமர் முக்கண் மூர்த்தியாகிய சிவபெருமான் திருவடிகளைச் சேர்ந்து, முற்காலத்தில் சண்டேசுவரப் பதம் பெற்றார் எனும் வரலாற்றினை, அறி வுடைய பெரியோர்கள் சொல்லுதலை, நாம் கேட்டு உணர்கின்றோம் அன்றோ? (7)

வேத முதல்வன் முதலாக
விளங்கி, வையம்
ஏதப் படாமை உலகத்தவர்
ஏத்தல் செய்யப்,
பூத முதல்வன் முதலே
முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே,
கலிக்கோவை சொல்லே

பொருள்: வேதங்களாற் குறிக்கப் படும் முதல்வன் ஆகிய சிவபெருமான், முழுமுதற் பரம்பொருளாகத் திகழ்ந்து உலகுயிர்கள் துன்பப் படாதிருத்தற் பொருட்டும், உலக மக்கள் படித் துணர்ந்து போற்றி ஏத்துதல் செய்து உய்தற் பொருட்டும், அருளிச் செய் தவை புராணங்கள்! உயிர் முதல்வன் எனத் திகழும் சிவபிரான் ஆகிய முதல்வனையே முழுமுதற் பொருள் என்று தெளிவுற விளக்குவன, சூத முனிவர் அறிவுறுத்திய நூல் வரிசை யாகிய புராணங்கள் என்று தெளிந்து கொண்டு, அவற்றை நீவிர் முறையே ஓதி யுய்க!

இத் திருப்பாடல், புராணங்களின் இயல்பும் சிறப்பும் இனையனவென விளக்குகின்றது. (8)

பாராழி வட்டம் பகையால்
நலிந்தாட்ட வாடிப்
பேராழி யானது இடர்கண்டு
அருள்செய்தல் பேணி,
நீராழி விட்டேறி நெஞ்சு
இடம்கொண் டவர்க்குப்
போராழி ஈந்த புகழும்
புகழ்உற்ற தன்றே

பொருள்: வட்டமாகிய கடல் சூழ்ந்த உலகமானது அசுரர் ஆகிய பகைவரால் நலிவுறுத்தி அலைக்கப்பட வாட்டமுற்று, பெரிய திருப்பாற்கட லிற் பள்ளி கொண்டுள்ள திருமால் படும் துயரத்தைப் பார்த்து, அவருக் குத் தாம் அருள் செய்தலை விரும்பி, அவர் திருப்பாற் கடலை விட்டுத் திரு வாரூர்க்கு வந்து, தம்மை உள்ளத்தின் கண் அமைத்து வழிபாடு நிகழ்த்த, அவ்வழிபாட்டிற்கு மகிழ்ச்சியுற்றுச் சிவ பிரான் அவருக்குப் போர்புரிதற்குரிய சுதரிசனம் என்னும் சக்கரத்தினைக் கொடுத்து அருள் புரிந்த புகழும், சிவபிரானின் ஏனைய புகழ்ச் செயல் களுடன் ஒன்றாக வைத்துப் புராணங் களிற் சிறப்புறப் புகழப் பெற்றிருக்கின் றது அன்றோ? (9)

மாலா யவனும் மறைவல்ல
நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்
அமுதூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு
அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டுஅங்கு அமரர்க்கு
அருள்செய்த தாமே,

பொருள்: திருமாலும் வேதங்களில் வல்ல பிரமதேவனும், அவர்களின் பக்கலில் சேர்ந்த தேவர்களும் அமுதம் உண்ணுதலை விரும்பி, காற்றினுல்அலைக்கப்படும் திருப்பாற் கடலைக் கடையமுற்பட, அங்ஙனம் கடையுங்கால் தம்மால் தாங்குவதற்கு அரியதாகவெளிப்பட்ட ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினைச் சிவபிரான் தாமே உட்கொண்டு, அங்கே அத் தேவர்களை இறவாமற் காத்து இரக்கம் காட்டி அருள் புரிந்த சிறந்த செயலுக்கு, இணையாக வேறொரு பிற செயலும்சொல்லப்புகில் உளதாமோ? இல்லை. (10)

அற்றன்றி அந்தண் மதுரைத்
தொகை ஆக்கி னும்,
தெற்றென்று தெய்வந் தெளியார்
கரைக்கு ஓலை, தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வின் ஊரவும்,
பண்பு நோக்கில்,
பெற்றொன்று உயர்த்த பெருமான்
பெருமானும் அன்றே

பொருள்: அத்தகையதே அல்லாமல், அழகிய குளிர்ந்த மதுரை மாநகரின் கண் தமிழ்ச் சங்கம் அமைத்துவளர்த்த பாண்டியர்குல மன்னன் (நின்ற சீர் நெடுமாறர்), தெற்றென்று தெய்வம் தெளிந்து கொள்ளவும், தாம் மட்டும் அங்ஙனம் தெளிந்து கொள்ள விரும்பாதவர்களாகிய சமணர்கள், தம்முடைய வாதத்திற்கு எல்லையாக வகுத்து உடன்பட்டுக் கொண்டபடியே 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் பதிகம் எழுதப் பெற்ற இவ்வோலையானது, தெளிந்த வைகையாற்றின் நீரில் பற்றுக் கோடு யாதும் இன்றி முறைப்படி அதனை எதிர்த்து மேல் நோக்கிச் செல்லும் திருவருட் செயலை ஆராய்ந்து தெளிந்தால், எருதினைக் கொடியாக உயர்த்தியுள்ள சிவபெருமான் ஒருவன் மட்டுமே பெருமான் (தலைவன்) ஆவான்! ஏனையர் அல்லர் என்பது புலனாகும்.

ஆதலின் அத்தகைய ஒப்புயர்வற்ற சிவபெருமானின் சிறப்பியல்புகளை அறிந்துகொண்டு, அப்பெருமானை வழிபடும் அன்பைப் பெறுதலே சிறந்த ஞானம் ஆகும் என்பது கருத்து. (11)

நல்லார்கள் சேர்புகலி ஞான
சம்பந்தன், நல்ல
எல்லார்களும்பரவும் ஈசனை
ஏத்து பாடல்,
பல்லார்களும்மதிக்கப் பாசுரம்
சொன்ன பத்தும்,
வல்லார்கள் வானோர் உலகாளவும்
வல்லர் அன்றே.

பொருள்: கற்றும் கேட்டும் சிந்தித்தும் தெளிந்த மெய்யன்பர்கள் வாழ்கின்ற திருப்புகலி எனப்படும் சீர்காழியில் தோன்றிய திருஞான சம்பந்தன் (ஆகிய யான்), நல்லவர்கள் ஆக உள்ள எல்லோரும் புகழ்ந்து பணிகின்ற சிவபிரானைத் துதிக்கின்ற முறையிற்பாடல் வடிவில், பலவகைப் பட்டவர்களும் மதித்து வியக்கும்படி பல நுண் பொருள்களை அமைத்துக் கூறிய பாசுரங்கள் பத்தையும் கற்றுணர்ந்து பாட வல்லவர்கள், இம் மண்ணுலகை மட்டுமே யன்றி, அவ் விண்ணுலகையும் கூட ஒருசேர ஆளவல்ல சிறப்பினை யடைவார்கள்.

இது திருஞான சம்பந்தர் தமக்குரிய வழக்கம் போலத் திருக்கடைக்காப்பாகப் பாடி யருளியது. இப்பதிகம் பன்னிரண்டு பாடல்களைக் கொண்டதாக இருப்பினும் பொதுமை முறை பற்றிப் 'பத்து' என்றே குறிப்பிட்டருளினர். (12)

முடிவுரை :

இச் சிறந்த இனிய அருட் கவிதையினை, நாம் அனைவரும் நயந்தினிது ஓதி நலம் பெறுவோமாக!

—ஆசிரியர்.

விடை தெரியுமா ?

1. விநாயக புராணத்தின் லீலா காண்டம் குறிப்பிடும் விநாயகரின் பெயர் களைக் குறிப்பிடுக.

2. சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர்கள், தம்முடைய திருப்பாடல் களால் நிகழ்த்திய அற்புதங்கள் எவை ?

3. முப்பத்திரண்டு அறங்கள் எனப்படுவன யாவை?

4. 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' என வரும் பெரியபுராணப் பாடலில் அமைந்துள்ள நுட்பங்களைச் சுட்டுக.

5. 'சோமாஸ்கந்த மூர்த்தம்' என்பது யாது? அதனை வழிபடுவதன் நுட்பம் என்ன ? விளக்குக.

6. இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும், பன்னிரண்டு இராசிகளுக்கும் உரிய தமிழ்ப் பெயர்கள் யாவை?

7. புஷ்ப மண்டபம், போக மண்டபம், தியாக மண்டபம் என்று வைஷ்ணவப் பெருமக்களால் குறிப்பிடப்படுவன யாவை?

8. வைஷ்ணவர்களின் வழக்கில் 'பத்து' என்பது யாது? திருவாய்மொழி யின் பத்துக்களில் முறையே விளக்கப்படும் பொருள்கள் என்னென்ன ?

9. பிராட்டிக்கே தனிச்சிறப்பாக உரிய சிறந்த ஆறு குணங்கள் யாவை?

10. 'நாராயண பதம்' உணர்த்தும் இறைவனின் இயல்புகள் என்னென்ன? விவரிக்க.

(விடை மறுபுறம் காண்க)

விடை, விளக்கம்

1. விநாயக புராணத்தின் லீலா காண்டம் என்னும் பகுதியில், பின்வருமாறு விநாயகரின் பெயர்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன:

[1] ஆதியில் பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மூவரையும் படைத்து முத்தொழிலுக்கும் தலைவராக்கியவர், வக்கிரதுண்டர்.

[2] கபில முனிவருடைய சிந்தாமணியைக் கவர்ந்த கணராசனை வென்று, அதனை மீட்டுக் கபிலர்க்கு அளித்தவர், சிந்தாமணி விநாயகர்.

[3] காலரூபன் என்ற விக்கினனை அழித்து உலகங்களைக் காத்தருளியவர், விக்கின ராசர்.

[4] கமலாசுரனைச் சங்கரித்து வேதாகமங்களைத் தேவர்களுக்கு அளித்தவர், மயூரேசர்.

[5] சிந்தாசுரனைக் கொன்று தேவர்களைச் சிறை மீட்டவர், உபமயூரேசர்.

[6] தவராசனுக்கும் அவன் மனைவி சமுதைக்கும் தீங்கு செய்த தூம ராசனைக் கொன்று, அவ்விருவரையும் பாதுகாத்தவர், பாலச்சந்திரர்.

[7] திரிபுராதிகளை வெல்லச் சிவபிரானுக்கு அருள் புரிந்தவர், கணேச விநாயகர்.

[8] நராந்தகனையும் தேவாந்தகனையும் சங்கரித்துக் காசி ராஜனுக்கு முத்தி அளித்தவர், மகோற்கடர்.

[9] விசுவநாதருக்குக் காசி நகரை யளித்தவர், துண்டி விநாயகர்.

[10] மரீசி முனிவரின் புத்திரியாகிய வல்லபையையும், திருமாலின் புதல்வியர் பன்னிருவரையும் மணந்து, திருமாலுக்கு யோக ஞான தத்துவப் பொருள்களை உபதேசித்தவர் வல்லபை கணேசர்.

2. சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர்கள் தம்முடைய திருப்பாடல்களின் மூலம் பல பெரும் அற்புதச் செயல்களை நிகழ்த்தி அருளினர். அத்திருப் பாடல்கள் நிகழ்த்திய அற்புதச் செயல்களை முறையே பின்வரும் பழம் பாடல்கள் தொகுத்துக் கூறுகின்றன:—

1. பெருகும் வையை தன்னை அழைப்பிக்குமே
   பிரம்ப டிக்குப் பொன்மேனி கன்றுமே
   நரி எலாம்பரி யாக நடத்துமே
   நாடி மூகை தனைப்பேசு விக்குமே
   பரிவில் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
   பரமன் ஏடெழுதக் கோவை பாடுமே
   வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
   வாத வூரர் வண்தமிழ்ப் பாடலே.

2. புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
   புத்த னூர்தலை தத்தெனத் தத்துமே
   கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
   கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே

பனையில் ஆண்பனை பெண்பனை ஆகுமே
பழைய என்புபொற் பாவையது ஆகுமே
சினைஅரா விடம் தீர்எனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

3. தலைகொள் நஞ்சுஅமு தாக விளையுமே
தணலின் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கூர்அரா விடம் தீர்எனத் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே.

4. வெங்கரா உண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரணம் மீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கம தாகுமே
திகழும் ஆற்றிட்ட செம்பொன் அளிக்குமே
துங்க வான்பரி சேரர்க்கு நல்குமே
துலங்கு சுந்தரர் செந்தமிழ்ப் பாடலே.

3. முப்பத்திரண்டு அறங்களாவன, வருமாறு:

1.	ஆதுலர்க்குச் சாலை	17.	கண்ணாடி வழங்கல்
2.	ஓதுபவர்க்கு உணவு	18.	தலை மயிர் கழிப்பித்தல்
3.	அறுசமயத்தோர்க்கு உண்டி	19.	காதோலை தருதல்
4.	பசுவுக்குப் புல்	20.	கண் மருந்தளித்தல்
5.	சிறையிலுள்ளோர்க்குச் சோறு	21.	தலைக்கு எண்ணெய் தருதல்
6.	இரவலர்க்கு உதவி	22.	பெண் போகம்
7.	சிறுவர்க்குத் தின்பண்டம் நல்கல்	23.	பிறர் துயர் காத்தல்
8.	அறவை (அநாதைகளுக்கு)ச்சோறு	24.	தண்ணீர்ப் பந்தல் அமைத்தல்
9.	மகப் பெறுவித்தல்	25.	திருமடம் கட்டுதல்
10.	மகவு வளர்த்தல்	26.	தண்ணீர்த் தடம் வெட்டுதல்
11.	மகப் பால் வார்த்தல்	27.	சோலைகள் அமைத்தல்
12.	அறவைப் பிணம் சுடுதல்	28.	ஆவுரிஞ்சு தறி நடுதல்
13.	அறவைத் தூரியம்	29.	விலங்கிற்கு உணவிடுதல்
14.	சுண்ணம் தருதல்	30.	ஏறு விடுத்தல்
15.	நோய் மருந்தளித்தல்	31.	விலை கொடுத்து உயிர் காத்தல்
16.	துணி வெளுப்பித்தல்	32.	கன்னிகா தானம்

(4) உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணிய(ன்)
அலகில் சோதிய(ன்) அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

எனவரும் பெரிய புராணப் பாடலில், பல அரிய நுண்பொருட் குறிப்புக்கள் அழகுற அமைந்துள்ளன. இவ்வருட் பெரும் பாடலில்,

1. உலகு
2. எலாம்
3. அரியவன்
4. நிலவு
5. நீர்
6. வேணியன்
7. அலகு
8. சோதியன்
9. அம்பலம்
10. ஆடுவான்
11. மலர்
12. சிலம்பு
13. அடி

எனப் பதின்மூன்று சொற்கள் அமைந்துள்ளன. இக்குறிப்புப் பெரிய புராணம் என்னும் சிறந்த நூலானது திருமலைச் சருக்ககம், தில்லை வாழ் அந்தணர் சருக்கம், இலை மலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறு வரிவண்டுச் சருக்கம்,வார்கொண்டவனமுலையாள் சருக்கம்,பொய்யடிமை இல்லாச் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னிய சீர்ச் சருக்கம், வெள்ளானைச் சருக்கம் எனப் பதின்மூன்று சருக்கங்கள் கொண்டு அமைந்திருத்தலை உணர்த்தும்.

1. உலகு
2. உணர்ந்து
3. ஓதற்கு
4. நிலவு
5. உலாவு
6. அலகு
7. அம்பலத்து
8. சிலம்பு
9. எலாம்

எனக் குற்றுகர முற்றுகரங்கள் எட்டும், தொகுத்தல் விகாரம் பெற்ற ‘எலாம்’ என்னும் சொல்லும் இப்பாடலில் வந்துள்ளன. இது தொகையடியார்கள் ஒன் பதின்மரைக்குறிக்கும்.

இப்பாடலில் 4 வரிகளிலும் சேர்ந்து (16—13—16—18), 63 எழுத்துக் கள் அமைந்துள்ளன. அஃது இந்நூலில் கூறப்படும் நாயன்மார்கள் தொகை 63 என்பதனை உணர்த்துகின்றது. இப்பாடல் 4 சீர்களில் 4 வரிகளாக அமைந் திருப்பது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நான்குவகைச் சத்திநி பாத நிலைகளையும்; சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் 4 வகை நெறி களையும் உணர்த்துகின்றது எனக் கொள்ளலாம்.

சிவபெருமான், சொரூபம் தடத்தம் என இரண்டு நிலைகளில் விளங்குகின் றார். சொரூபமாவது அவருக்கே உரிய தனிச்சிறப்பு நிலை. தடத்த நிலை யென் பது உயிர்களின் பொருட்டு அவர் மேற்கொள்ளும் நிலை. அது இலயம், போகம், அதிகாரம் என மூன்று வகைப்படும். ஆக இந்நான்கு வகை நிலை களிலும் இறைவன் விளங்குகின்றான் என்பது நூல்களின் விளக்கம். இந்நான்கு வகை நிலைகளும் பின் வருமாறு இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளன. ‘உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்’ என்றதனால் சொரூப சிவ இயல்பும்; ‘அலகில் சோதி

யன்' என்றதனால் தடத்த இலய சிவ இயல்பும்; 'அம்பலத் தாடுவான்' என்றதனால் தடத்த அதிகார சிவ இயல்பும்; 'நிலவு உலலாவிய நீர் மலி வேணியன்' என்பதனால் தடத்த போக சிவ இயல்பும் கூறப்பட்டன. இவ்வாறன்றிச் சொரூபம், நிட்களம், நிட்கள சகளம், சகளம் என்னும் இறைவனின் நிலைகள் நான்கும் முறையே, இப்பாடலின் நான்கு அடிகளால் உணர்த்தப் பெற்றன எனலுமாம்.

ஒரு நூலின் தொடக்கப் பாடல், வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் என்னும் மூன்று பொருள்களையும் உணர்த்தல் வேண்டுமென்பது மரபு. இம் மூன்றும் இப்பாடலின் இறுதி அடியில் குறிக்கப் பெற்றுள்ளன. வணங்குவாம் என்பதனால் வணக்கமும், வாழ்த்தி என்பதனால் வாழ்த்தும், மலர் சிலம்படி என்பதனால் வரு பொருளுரைத்தலும் குறிக்கப் பெற்றுள்ளன.......

(5) சோமாஸ்கந்த மூர்த்தம் என்பது, சிவபெருமான் ஸ்கந்த மூர்த்தியாகிய முருகனைத் தமக்கும், உமா தேவியாருக்கும் நடுவே இருக்கச் செய்து, எழுந்தருளியிருக்கும் திருவுருவமாகும். ஸ-உமா-ஸ்கந்தர் என்னும் வட சொற்கள் மூன்றும் 'சோமாஸ்கந்தர்' என வரும். எல்லாச் சிவாலயங்களிலும் சோமாஸ்கந்த மூர்த்தம் சிறப்புற வைத்து வழிபடப் பெறும். சோமாஸ்கந்தரே பெரும்பாலான சிவாலயங்களில் உற்சவ மூர்த்தியாக விளங்குதல் காணலாம். பல்லவப் பேரரசர்கள் அமைத்த சிற்பங்களில், சோமாஸ்கந்தர் திருவுருவம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், திருமறைக்காடு, திருப்புள்ளிருக்குவேளூர் முதலிய பல இடங்களில் அமைந்துள்ள சிவாலயங்களில், சிவலிங்கத்திற்குப் பின்புறமுள்ள கருவறைச் சுவரில் சோமாஸ்கந்தர் திருவுருவம் அழகுற அமைக்கப் பட்டிருத்தல் காணலாம்.

சோமாஸ்கந்த மூர்த்தம் தமிழ் நாட்டுக்கே தனிப் பெரும் சிறப்பாக உரியது. இந்திய நாட்டின் வேறு பிற எந்தப் பகுதிகளிலும் காணப்படாமல், தமிழ் நாட்டில் மட்டுமே தனிப் பெரும் சிறப்பியல்பாகச் சோமாஸ்கந்தர் திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன.*

சமண பௌத்த சமயங்களின் விளைவாகத் துறவறமே சால்புடைத்தென்னும் கொள்கை பெரிதும் பரவி வந்த காலையில், மக்கட் சமுதாயம் வளர்ந்தோங்கி நிலைபெறுதற் பொருட்டுக் குடும்ப வாழ்வின் நலங்களையும், இல்லறமே நல்லறமாதலையும் வலியுறுத்தித் தெளிவுறுத்துதல், பக்தி இயக்கத்தைப் பரப்பி நாட்டு மக்கள்பால் மறுமலர்ச்சி யுணர்வு கிளர்ந்தெழச் செய்தருளிய, ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் அரும் பெருங் கடப்பாடு ஆயிற்று. அவ்வகையிற் குடும்ப வாழ்வின் அளப்பரு நலங்களையும், அரும் பெருஞ் சிறப்பினையும் விளக்குவதாகப் போற்றிப் பரப்பப் பெற்ற திருவுருவமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனலாம். மா பெரும் யோகியாக விளங்கும் சிவபெருமானே, மிகப் பெரிய போகி (குடும்பி) யாகவும் திகழ்வது, வியப்பிற் குரியதொன்றன்றோ?

---

*"The form of Siva in the SOMASKANDA type is, as far as I can see, confined only to Tamilnad... What I want to convey is that a scene of Supreme domestic felicity, with the husband Siva on one side and the wife Uma sitting or even standing a little to his left with the 'ever-boy' Kumara Skanda sitting or standing as a tiny child between them, is seen only or mostly in the sculptures of Tamilnad...........

Domestic felicity and repose have come to be concentrated, ironically enough, in Siva, the deity associated with cremation-ground and bizarre tastes, complete unworldliness and so on with all negations of positive bliss as humans of even highest morals understand it. May we not look upon this development as a supreme group-exercise in compensatory synthesis ?"

—*Prof. G.S. Ghurye,*
Gods and Men, (p. 47-49).

ஒரு சிறந்த தலைமகன், தனக்குரிய இனிய நல்ல வாழ்க்கைத் துணைவியுடனும், அறிவு ஆற்றல் பண்பு நலங்களிற் சிறந்த மக்கட் பேற்றுடனும், இல்லறம் என்னும் நல்லறம் நடாத்தி, 'வையத்து வாழ்வாங்கு வாழ்தல்' வேண்டும் என்னும் ஒப்பற்ற உயரிய கருத்தினையே, சோமாஸ்கந்த மூர்த்தம் துகளற உணர்த்துகின்றது.

சோமாஸ்கந்த மூர்த்தத்தை அன்புடன் வழிபடுவோர், கணவனும் மனைவியுமாய் இல்லற நெறிநின்று இணையிலா இன்பம் துய்த்து, நல்ல மகப் பேறும் சந்தான வளர்ச்சியும் பெற்று இம்மையிற் சிறந்து வாழ்வதுடன், மறுமையில் வீடு பேறும் அடைவார்கள்.

தொல்லை யுலகம் போற்றெடுக்கும்
சோமாஸ் கந்தர் தமைத்தாழின்,
நல்ல மகவும் சந்தானத்
தொடர்பும் இனிது நல்குவார்.

—பேரூர்ப் புராணம்.

(6) பண்டைக் காலத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் தமிழ்ச் சான்றோர்கள், வான நூற் புலமையிலும் சோதிடக் கலையிலும் சிறந்த ஆராய்ச்சி உடையவர்களாக விளங்கி யிருந்தனர்.

சோழன் நலங்கிள்ளி என்னும் அரசனை உறையூர் முதுகண்ணன் சாத்தனுர் என்னும் சங்க காலப் புலவர் பாடிய பாடல் ஒன்றில், பின்வரும் கருத்து அமைந்துள்ளது. ''செஞ்ஞாயிற்றினது வீதியும் (Orbit), அஞ்ஞாயிற்றினது இயக்கமும், (Rotation), அவ்வியக்கத்தால் சூழப்படும் பார் வட்டமும் (Gravitation), காற்று வீசும் திசையும், ஓர் ஆதாரமுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் ஆகிய இவற்றையெல்லாம், அங்கங்கே சென்று நேரில் அளந்தறிந்தவர்களைப் போல இத்துணை அளவையுடையன என்று நாடோறும் சொல்லும் கல்வி உடையோரும் உள்ளனர்'' என அப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

செஞ்ஞா யிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,
வளிதிரி தரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றிவை
சென்று அளந்து அறிந்தோர் போல இன்றும்
இனைத்தென் போரும் உளரே

—புறநானூறு. 30.

இது மட்டுமே யன்றி, கூடலூர் கிழார் என்னும் புலவர் ஒருவர், ஒருநாள் இராப் பொழுதில் வானத்திலிருந்து ஒரு விண்மீன் விழுதலைக் கண்டார்.

மேஷராசியில், கார்த்திகை நட்சத்திரத்தின் முதற் காலின் பாதியிரவில், அநுட நட்சத்திரத்தின் முதல் நட்சத்திரம் ஆகிய புனர்பூசத்துக் கடைப்பகுதியில், பங்குனி மாதத்துப் பூர்வ பட்சத்தில், உத்திரம் மூலம் மிருகசீரிஷம் என்னும் நட்சத்திரம் வெவ்வேறு நிலைகளில் நிற்க, வடகிழக்கே அவ்விண்மீன் விழுந்தது.

ஆடியல் அழற்குட்டத்து
ஆர்இருள் அரையிரவில்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயம்காயப்
பங்குனியுயர் அழுவத்துத்

தலைநாண்மீன் எதிர் ஏர்தரத்
தொல்நாண்மீன் துறைபடியப்
பாசிச் செல்லாது ஊசி முன்னது
அளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே —புறநானூறு.

அது விழுந்த தீய சகுனத்தின் குறிப்பைக் கண்ட அவர், அந்தோ இன்றைக்கு ஏழாம் நாளில் அரசன் இறந்து படுவான் என உணர்ந்து வருந்தினர். அதற்கேற்ப ஏழாம் நாளில், குறித்த நேரத்தில், யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் அரசன் இறந்து பட்டான். இத்தகைய செய்திகளால் நம் தமிழ் முன்னோர்களின் வானநூற் புலமை நன்கு புலனாகும்.

நட்சத்திரங்கள்			இராசிகள்		
1.	அசுவனி	புரவி	1.	மேஷம்	தகர்
2.	பரணி	அடுப்பு	2.	ரிஷபம்	குண்டை
3.	கார்த்திகை	ஆரல்	3.	மிதுனம்	இரட்டை
4.	உரோகிணி	சகடு	4.	கடகம்	அலவன்
5.	மிருகசிரிஷம்	மான்தலை	5.	சிம்மம்	ஆளி
6.	திருவாதிரை	ஆதிரை	6.	கன்னி	மடந்தை
7.	புனர்பூசம்	கழை	7.	துலாம்	தூக்கு
8.	பூசம்	கார்க்குளம்	8.	விருச்சிகம்	தேள்
9.	ஆயில்யம்	கட்செவி	9.	தனுசு	வில்
10.	மகம்	கொடுநுகம்	10.	மகரம்	சுறா
11.	பூரம்	கணை	11.	கும்பம்	குடம்
12.	உத்திரம்	உத்திரம்	12.	மீனம்	மீன்
13.	அஸ்தம்	கை			
14.	சித்திரை	அறுவை			
15.	சுவாதி	விளக்கு			
16.	விசாகம்	முறம்			
17.	அனுஷம்	பனை			
18.	கேட்டை	துளங்கொளி			
19.	மூலம்	குருகு			
20.	பூராடம்	உடைகுளம்			
21.	உத்திராடம்	கடைக்குளம்			
22.	திருவோணம்	முக்கோல்			
23.	அவிட்டம்	காக்கை			
24.	சதயம்	செக்கு			
25.	பூரட்டாதி	நாழி			
26.	உத்திரட்டாதி	முரசு			
27.	ரேவதி	தோணி.			

(7) வைஷ்ணவ சமயத்தில் பெருமாளுக்குப் புட்ப மண்டபமாக விளங்குவது திருவேங்கடம். போக மண்டபம் என்பது திருவரங்கம். தியாக மண்டபம் என்பது கச்சி அத்திகிரி (காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்). இம் மூன்று தலங்களிலும் முறையே குறும்பறுத்த நம்பி, திருப்பாணாழ்வார், திருக்கச்சி நம்பி என்னும் மூவரும் பெருமாளுக்குக் கைங்கர்யம் புரிந்தனர். இவர்கள் மூவரையும் முறையே தொண்டைமான் சக்கரவர்த்தி, லோக சாரங்க முனிவர், இராமானுஜர் என்னும் உடையவர் ஆகிய மூவரும் போற்றிப் பின்பற்றிச் சிறப்பித்தனர் என ஆசார்ய ஹ்ருதயம் என்னும் நூல் கூறுகின்றது.

(8) நூறு பாடல்கள் கொண்ட பகுதியைப் பத்து என்று கூறுவது வைணவ சமய மரபு. அம்முறையில் திருவாய் மொழி ஆயிரம் பாடல்களும் பத்துப் பகுதி களாக அமைந்துள்ளன. அப்பத்துப் பகுதிகளிலும் பின்வரும் பத்துப் பொருள்கள் நம்மாழ்வார் என்னும் சடகோபரால் விளக்கப் பெற்றிருக்கின்றன.

1. பரத்துவம்—எல்லாப் பொருள்களுக்கும் மேலானவனுதல்.
2. காரணத்துவம்—எல்லாப் பொருள்கட்கும் காரணனுதல்.
3. வியாபகத்துவம்—எல்லாப் பொருள்களினுள்ளும் பரந்து தங்குகிறவனுதல்
4. நியந்திருத்துவம்—எல்லாப் பொருள்களையும் நியமிக்கின்றவனுதல்
5. காருணிகத்துவம்—பேரருளாளனுதல்.
6. சரண்யத்துவம்—எல்லாப் பொருள்களுக்கும் புகலிடம் ஆதல்.
7. சக்தத்துவம்—அளவில்லா ஆற்றலை யுடையவனுதல்.
8. சத்தியகாமத்துவம்—அளவிலா ஆற்றலால் ஆக்கப் பெறும் தேவியர், நித்திய சூரிகள், மற்றும் பரிசனங்கள் முதலியன உடையவனுதல்.
9. ஆபத்சகத்துவம்—உயிர்களுக்கு நேரும் ஆபத்துகளிலே துணை செய்பவனுதல்.
10. ஆர்த்தி ஹரத்துவம்—அடியவர்களுக்குப் பிறவித் துன்பத்தை நீக்குபவனுதல்.

(9) வைணவ சமயத்தில் பெருமாளுக்குப் போலப் பிராட்டிக்கும் முதன்மையும் சிறப்பும் உண்டு. பிராட்டியில்லாமல் பெருமாளின் அருளை உயிர்கள் பெறுதல் இயலாது. உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்கும் பிராட்டியே, தன் பெருங் கருணையினுல் உயிர்களைப் பெருமாளின் திருவருளுக்கு இலக்காகும்படி, செய்தருளுகின்றுள். பிராட்டியே உயிர்களின் குற்றங்கண்டு, பெருமாள் சீற்றம் கொள்ளாதபடி பொறுத்தருளும்படி செய்தருள்கின்றுள் என்பது வைணவ சித்தாந்தம். பிராட்டியாகிய ஸ்ரீயோடு சேர்த்தே விஷ்ணுவை வழிபடுதலாகிய காரணம் பற்றி, வைஷ்ணவ சமயமானது ஸ்ரீ வைஷ்ணவம் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப் பெறுகின்றது. 'திருமால்' என்பதற்கும் திருவோடு கூடிய மால் என்பதே சிறந்த பொருள். இத்தகைய சிறப்பு வாய்ந்த பிராட்டிக்கே உரிய ஆறு குணங்களாவன, பின்வருமாறு:

1. நிருபகத்துவம்—இறைவனுக்குமட்டுமே தனிப்பெரும் சிறப்பாக உரிய நிலையில் பிரிவற்றிருத்தல்.
2. அநுரூபத்துவம்—இறைவனுக்கு ஒத்த வடிவழகுடன் விளங்குதல்.
3. அபிமதத்துவம்—இறைவனுல் விரும்பப்படும் நிலையில் இருத்தல்.
4. சேஷத்துவ சம்பந்த துவாரபாவம்—உயிர்கள் இறைவனுக்கு அடிமைப் படுவதற்குத் தான் வழியாக இருத்தல்.
5. புருஷகாரத்துவம்—இறைவனேடு உயிர்களைச் சேர்த்து வைக்கும் தன்மை பெற்றிருத்தல்.
6. பிராப்ய பூரகத்துவம்—உயிர்கள் புரியும் தொண்டினை இறைவன் திருவுள்ளத்தில் நிரம்பும்படி செய்தல்.

(10) 'நாராயண' என்பதற்குப் பற்பல பொருள்கள் உண்டு. அதற்கு ஆங்காங்கே இடத்திற்கு ஏற்றபடி பொருள் கொள்வது மரபு. நாராயண பதம்,

'புருஷகார பலத்தாலே சுவாதந்த்ர்யம் தலை சாய்ந்தால், தலை யெடுச்கும் குணங்களைச் சொல்லுகிறது' என்பது பிள்ளை லோகாசாரியர் அருளிய முமுக்ஷுப்படி வாக்கியம்.

அவையாவன: வாத்சல்யமும் சுவாமித்துவமும் சௌசீல்யமும் சௌலப்யமும் ஞானமும் சக்தியும் ஆகும்.

1. வாத்சல்யமாவது, கன்றினிடத்திலே பசுவுக்கு அமைந்துள்ள பரிவு. பசுவானது கன்றினுடைய உடம்பின் மேலுள்ள மாசுகளையும் விரும்பி நாவினால் நக்கி நுகரும்; அதற்குத் தன் பாலைக் கொடுத்து வளர்க்கும்; அதனை எதிரிட்டவர்களைக் கொம்பினாலும் குளம்பினாலும் தாக்கிப் பாதுகாக்கும். அங்ஙனமே, இறைவனும் அடியார்களின் குற்றங்களை, 'என்னடியார் அது செய்யார்; செய்தாரேல் நன்று செய்தார்' என்றபடி போக்யமாகக் கொண்டு விரும்புவர். ஆதலின் இறைவனின் வாத்சல்ய குணமானது, நாம் நம் குற்றங்களைக் கண்டு இறைவன்பால் சரண் அடைய அஞ்சாமல் இருப்பதற்குத் துணையாகும்.

2. சுவாமித்துவமாவது, உடைமையை உடையவனாயிருக்கும் இறைவனின் நிலை. இறைவனின் இப்பண்பானது, நாம் அவனது அருமை பெருமைகளை உணர்ந்து கொள்ளாமல் அவனைப் புறக்கணித்து, உலகியலில் மயங்கி உழன்றாலும், அவன் நம்மை விடாமல் பற்றிக்கொண்டு பாதுகாத்தருள் செய்வதற்கு ஏதுவான உரிமை உறவு ஆகும். இப்பண்பானது நமக்குத் துணை புரிவானோ புரிய மாட்டானோ என்று நாம் ஐயுறவு கொள்ளாமல், திண்ணமாக அவன் நமக்கு இன்னருள் புரிவான் என்று உறுதியாகத் தெளிந்து தேறி இருப்பதற்கு ஏதுவாகும்.

3. சௌசீல்யமாவது, எல்லோரோடும் ஒக்க மேல் விழுந்து புரையறக் கலந்து பழகும் தன்மை. உபய விபூதிக்கும் தலைவனாகிய இறைவனின் அருமை பெருமைகளை எண்ணி, நாம் நம்முடைய கீழ்மையும் தாழ்மையும் எண்ணி அகலாமல் அணுகி நின்று அடைக்கலம் புகுதற்கு ஏற்ற இயல்பாகும்.

4. சௌலப்யமாவது, எளியனாம் தன்மை. இறைவன் மாற்றம் மனங்களுக்கு எட்டாதவன், பொறிபுலன்களுக்கு அப்பாற்பட்டவன் என்றெல்லாம் நாம் கலங்க வேண்டாமல், நாம் நம் கண்களால் கண்ணாரக் கண்டு களித்தற்கு ஏதுவான இனிய பண்பு. தன்வடிவைக் கண்ணுக்கு இலக்காகச் செய்யும் சௌலப்யம் என்னும் எளிமைத் தன்மைக்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்.

5. ஞானம் என்பது இறைவனின் தூய பெரிய சிறந்த முற்றுணர்வுத் தன்மையாகும்.

6. சக்தியாவது இறைவனின் அளவிலா ஆற்றல் உடைமையாகும். ஞானம் சக்தி என்னும் இவ்விரு பண்புகளும் பேற்றுக்குத் தடையானவற்றைப் போக்கி, பேறாகிய தன்னை நமக்கு அளிப்பதற்கு ஏற்ற இனிய இயல்புகளாகும்.

இந்த ஆறுவகைக் குணங்களையும் நாராயண பதம் சொல்வதாகக் கொள்ளலாம். பெருமானின் திருவுருவ அமைப்பில் இந்த ஆறு குணங்களும் பொலிந்து விளங்கிப் புலனாகின்றன. திருக்கைகளில் தரித்துள்ள திருச்சங்கும் திருவாழியும் ஞான சக்திகளை உணர்த்தும். அஞ்சேல் என்னும் திருக்கை, வாத்சல்யத்தைக் குறிக்கும். திருமுடி சுவாமித்துவத்தைப் புலப்படுத்தும். திருமுகமும் புன்முறுவலும் சௌசீல்யத்தைத் தோற்றும். தாமரை மலர்ப் பீடத்தில் அழுந்தியுள்ள திருவடிகள், சௌலப்யத்தைப் புலப்படுத்தும். இந்த அருள் நிலையே நம்மைக் காப்பது.

—ஆசிரியர்.

திருவான்மியூர்த் தலவரலாறு

முன்னுரை :

திருவான்மியூர் என்னும் பாடல் பெற்ற சிவத்தலம், சென்னையில் திருமயிலாப்பூருக்குத் தெற்கே மூன்று கல் தொலைவில்; அடையாறு என்னும் இடத்திற்கு அருகே யுள்ளது. திருநாவுக்கரசர் அவதரித்ததும், திருவதிகைக்கு அருகே யுள்ளதுமான திருவாமூர் என்னும் தலமும்; திருநாவுக்கரசரின் பாடல் பெற்றதும், திருவாரூர்க்கு அருகில், திருக்கோளிலி முதலியவற்றிற்கு அடுத்துள்ளதும் ஆகிய திருவாய்மூர் என்னும் தலமும், இதனின் வேருனவை.

திருநாவுக்கரசர் :

திருநாவுக்கரசர் காஞ்சிபுரம் வந்து, திருக்கழுக் குன்றம் அணைந்து, அங்கிருந்து வடக்கே கடற்கரைக்கு அருகே யுள்ள திருவான்மியூர் என்னும் இத் தலத்திற்குப் போந்தார். இங்கே யுள்ள மருந்தீசரைப் பணிந்து திருப் பதிகம் பாடிய பிறகே, திருமயிலாப் பூர்க்கும் திருவொற்றியூர்க்கும் சென்று வழிபட்டார். (பெரிய புராணம், *21: 330-332*)

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்அடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூர் ஈசனே.

—அப்பர்.

சம்பந்தர் :

திருஞான சம்பந்தர் காஞ்சிபுரத்தினின்று சென்று திருக்காளத்தியை வணங்கிக் கொண்டு, திருவேற்காடு திருவலிதாயம் திருவொற்றியூர் ஆகிய தலங்களைத் தரிசித்து, திருமயிலாப் பூர்க்கு எழுந்தருளி அங்கம் பூம்பாவை யாக்கி அற்புதம் நிகழ்த்தியதன் பின்னர், திருவான்மியூர் என்னும் இத்தலத்திற்குப் போந்தார். பல பதிகங்கள் பாடியருளினுர். இங்கே சில நாட்கள் தங்கி யிருந்தார். இங்கிருந்து திருஇடைச்சுரம் திருக் கழுக்குன்றம் முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்டார். (பெரிய புராணம், *28: 1120-1124*).

விரையார் கொன்றையினய் விடம்உண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கை ஓர்பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மியூர் உறையும்
அரையா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே.

கரையுலாம் கடலிற்பொலி சங்கம் வெள்இப்பி,வன்
திரையுலாம் கழிமீன் உகளும் திருவான்மியூர்
உரையுலாம் பொருளாய் உலகுஆளுடையீர் சொலீர்
வரையுலாம் மடமாதுடன் ஆகிய மாண்பதே.

—சம்பந்தர்.

வான்மீகி முனிவர் :

மார்க்கண்டேய முனிவரால், சிவ பூசை செய்வதன் சிறப்பினையும் இன்றியமையாமையினையும் பற்றி அறிவுறுத்தப்பெற்ற வான்மீகி முனிவர், இத் தலத்திற்கு வந்து வழிபட்டுப்பேறு பெற்றுர். அதனுல் இத்தலத்திற்கு அவர்தம் பெயரினையே ஒட்டித் திருவான்மியூர் எனப் பெயர் அமைந்தது. அவர்தம் வேண்டுகோளின்படி, சிவ பிரான் தமது சடைமுடியின்கண் உள்ள கங்கையினின்றும் இந்தத் தலத்தில், கிழக்கே கன்மநாசனி என்றும், தெற்கே காமநாசனி என்றும், மேற்கே பாப நாசனி என்றும், வடக்கில் ஞானதா

யினி என்றும், நடுவே மோட்சதாயினி என்றும் ஐந்து தீர்த்தங்களை உண்டாக்கியருளினார். பங்குனி மாதத்துப் பௌர்ணமி நாளில் ஆண்டுதோறும் முறையாகத் தம்மைத் தரிசிப்பவர்களுக்கு வீடுபேறு வாய்ப்பது திண்ணம் என்றும் அருளிச் செய்தார் என்பது தலபுராணம்.

இரட்சசு :

மேலும் பிரமதேவனின் கொட்டாவியிற் குரங்கு வடிவமாய்த் தோன்றிய இரட்சசு என்பவன், இங்குள்ள சன்மநாசனியில் மூழ்கி வழிபட்டுத் தனக்குற்ற பெண் வடிவம் நீங்கி நலம் பெற்றான்.

பார்த்தசாரதி :

திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள், திருவான்மியூர்ப் பாவநாசத் தீர்த்தத்தில் படிந்து, மருந்தீசரைப் பணிந்து, பாரதப் போரில் நிகழ்த்திய சில செயல்களாலும், விவகார நிலையில் இவ்வுலகிற் செய்யப்படும் செப தபங்களும் சிவ பூசனையும் பாரமார்த்திக நிலையில் பயன்படமாட்டா என்று உபதேசித்ததனாலும், பிறவற்றாலும் நேர்ந்த குற்றங்கள் நீங்கிப் பேறு பெற்றார்.

சந்திரன் :

சந்திரன் தனது குருவாகிய பிருகற்பதி முனிவரின் மனைவி தாரை என்பவளைப் புணர்ந்த கொடிய பாவம் நீங்க, இத்தலத்திற்குப் போந்து இங்குள்ள காமநாசனி என்னும் தீர்த்தத்தில் மூழ்கி, இறைவனைப் பலகாலும் பணிந்து வணங்கி, பாவங்களினின்று உய்தி பெற்றான்.

சூரியன் :

மந்தேகம் என்னும் தீவில் வசித்து வந்த அறுபதினாயிரம் கோடி அரக்கர்களால் தனக்கு நாடோறும் உதய வேளையில் நேர்ந்து வந்த தொல்லைகள் நீங்கும் பொருட்டு, சூரியன் இத்தே வந்து, சூரிய தீர்த்தம் என ஒன்றையுண்டாக்கி இறைவனை வழிபட்டு, அவ்வரக்கர்களை வென்று கொன்றொழிக்கும் ஆற்றல் அருளப் பெற்றான். சூரியன் இரவிற் போந்து பூசித்த தலமாதல் பற்றியே, இங்கு இறைவன் மேற்கு முகமாக விளங்கி வருகின்றார்.

இந்திரன் :

பிருகு முனிவர் சாபத்தினால் இராக்கத வடிவம் அடைந்த இந்திரன், பிரமன் கூறியபடி திருவான்மியூருக்கு வந்து, சென்மநாசனித் தீர்த்தத்தில் மூழ்கித் தூயவனாகி, மருந்தீசரை வணங்கி அருள் பெற்று, முன்பு போல விண்ணுலக ஆட்சியை அடையப் பெற்றான்.

பிரமன் :

திருமாலின் உபதேசப்படி பிரமதேவன் இத்தலத்திற்கு வந்து, பிரம தீர்த்தம் என ஒன்றை உண்டாக்கி, இறைவனை வழிபட்டுப் பல காலம் இங்கு வசித்திருந்து, திருவிழாக்கள் முதலியன நடத்திச் சிறப்பை அடைந்தார். பிரமன் நடத்திய உற்சவம் ஆதல் பற்றியே, பிரமோற்சவம் என்னும் வழக்காறு ஏற்படுவதாயிற்று.

வேதங்கள் :

சோமுகன் என்னும் அசுரனால் கைப்பற்றப்பட்டதனால் தமக்கு நேர்ந்த மாசுகளைப் போக்கிக் கொள்ள, வேதங்கள் நான்கும் இங்கு இறைவனைப் பூசித்தன. அதனால் இத்தலத்திற்கு வேதபுரி என்றும் ஒரு பெயர் உண்டு.

காமதேனு :

வசிட்ட முனிவரால், சிவ பூசைக்குக் குறித்த நேரத்தில் வந்து உதவி செய்யாத குற்றத்திற்காகக் காட்டுப்பசுவாகும்படி சபிக்கப்பட்ட காமதேனு இங்கு வந்து, தனது மடியினின்றும் பால் சுரந்து இறைவன் திருமுடியில் சொரிந்து, நாடோறும் வழிபட்டு வந்

தது. சைதை என இந்நாளில் வழங்கும் ஊரை ஆண்டு வந்த சதயூ என்னும் அரசன் வேட்டையாடச் சென்ற போது, அப்பசுவைப் பிடிக்க எண்ணித் தன் அம்பை விடுத்தான். அது கண்ட காமதேனு துள்ளிக் குதித்துத் தன் குளம்பை இலிங்கத்தின்மேல் வைத்துத் தாண்டி வெளி வந்து, அரசனின்படைகளை அழித்தது. அரசன், இது தெய்விகப் பசு என்று தெளிந்து, பசு பூசித்ததனுல், பால் வண்ண நாதர் எனப் பெயர் பெற்ற திருவான்மியூர்ச் சிவ பிரானுக்குக் கோயில் எடுத்தான். மண்டபம் கோபுரம் முதலியன கட்டினுன். வீதிகள்வகுத்து நகரத்தை அமைத்தான். மக்கள் பலரைக் குடியேற்றி, நித்திய நைமித்திகங்கள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்தான். இங்குள்ள மோட்சதாயினி என்னும் தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டு வீடுபேறு அடைந்தான். காமதேனுவின் காற் குளம்புகள் பட்ட அடையாளங்கள், இன்றும் இலிங்கத்தில் அமைந்திருத்தல் காணலாம்.

இயமன் :

மார்க்கண்டேயராகிய சிவனடியார்க்கு வருத்தம் விளைவிக்க முற்பட்டதனுல் நேர்ந்த கொடிய பாவம் தீர, இயமன் இங்கு வந்து வழிபட்டான். இந்நாளில் வேளச்சேரி என விளங்கும் வேதசிரேணியில், தண்டீசுவரம் என்னும் பெயரால் ஒரு கோயிலையும்அவன் அமைத்து வழிபட்டான்.

இராமபிரான் திருவான்மியூர் ஈசனை வழிபட்டு, இராவணனை வெற்றிகொள்ளும் ஆற்றலும், சிறப்பும் அடையப் பெற்ருர்.

அகத்தியர் :

அகத்திய முனிவர், இத்தலத்திற்கு எழுந்தருளிச் சிவ பிரானை வழிபட்டு, எல்லாப் பொருள்களின் குணங்களையும் அறியவும், இன்ன நோய்க்கு இன்ன பொருள் மருந்தாகும் என உணரவும், இறைவனுல் உபதேசிக்கப் பெற்ருர். மருந்துகளை உபதேசித்தமையால், இவர் மருந்தீசர் எனப் பெயர் பெற்ருர். தம்மைத் தமிழால் துதித்த அகத்திய முனிவருக்கு, இறைவன் தமக்கும் பார்வதி அம்மைக்கும் நிகழ்ந்த திருமணக்கோலக் காட்சியைக் கண்டு மகிழும் பேற்றை வழங்கினுர். அதனுல், திருவான்மியூரில் பங்குனி உத்தர நாளில் இறைவனின்திருமண தரிசனம் காண்பது மிகவும் சிறப்பாகும்.

பிருங்கி முனிவர் :

சிவ பிரானைச் சத்தியி னின்றும் பிரித்து, தனியாக வழிபட முற்பட்ட பாவம் நீங்கப் பிருங்கி முனிவர், இத் தலத்திற்குப் போந்து, இங்குள்ள மருந்தீசரை வழிபட்டார். பிருங்கி முனிவர் வந்து, திருவான்மியூருக் கருகில் உள்ள மலையில் தங்கினுர். அதனுல், அம்மலை பிருங்கி மலை எனப் பெயர் பெற்றது. அம்மலையே இந்நாளில், பரங்கி மலை என வழங்கிவருகின்றது.

அட்டாவதானம் பூவை ஸ்ரீ கலியாண சுந்தரயதீந்திரர், திருவான்மியூர்க்குத் தல புராணம் பாடியுள்ளார். அந்நூல் எளிய இனிய நடையில், கவிதைக் கலைவளம் சிறந்து, சொற் பொருட் சுவை நலங்கள் முதிர்ந்து விளங்குகின்றது. அது 1895-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

முடிவுரை :

திருவான்மியூர்க் கோயில் பழமையும் பெருமையும் வாய்ந்தது. இராஜ இராஜே சோழன் (கி.பி. 985-1014), ராஜேந்திர சோழன், (கி.பி.1012-1046), முதலாம் இராசாதி ராசன் (கி.பி. 1163-1176) முதலிய சோழ அரசர்களின் காலத்துக் கல்வெட்டுக்கள், இக்கோயிலில்காணப்படுகின்றன. அவற்றில், ''ஜெயங் கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துக் கோட்டூர் நாட்டுத் திருவான்மியூர்'' என்று இத்தலம் குறிப்பிடப் பெற்றுள்ளது. இத்தகைய இப் பழம் பெரும் தலம், இந்நாளில் சென்னையின் தென்

பகுதியாய்ச் சிறப்புற வளர்ந்து செழிப்புற்று வருகின்றது. சென்னையின்வடக்கே திருவொற்றியூரில் பட்டினத்தடிகளின் சமாதி அமைந்து புகழ் பெற்று விளங்கி வருதல் போல, சென்னையின் தென் பகுதியாகிய இத் திருவான்மியூரில், சைவ சித்தாந்த ஞானபானு என ஒப்புயர்வற்றுத் திகழ்ந்திருந்த ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் சமாதிக் கோயில் அமைந்து, தெய்விகச் சிறப்புடன் திகழ்தல் பெரிதும் மகிழ்தற்குரியது. இத்தலத்தின் திருக்கோயிலில், 'திருப்பணி வேந்தர்' எனத் திகழும் திருவலம் தவத்திரு. சிவானந்த மௌன சுவாமிகள் அவர்களின் அருளாதரவு கொண்டு, திருப்பணி முயற்சிகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

எல்லாம் வல்ல திரிபுர சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ மருந்தீசுவரப் பெருமான் திருவருளால், இக்கோயிலின் திருப்பணிகள் மிக விரைவில் சிறப்புற நன்கினிது நிறைவேறவும், நம் நாடும், மக்களும், உலகமும் நலம் பெறவும், வேண்டுமெனத் திருவருளை வழுத்துவோமாக.

—ஆசிரியர்.

முருந்தீச விநயவிளர் நகைஉமையாம்
எப்பொருட்கும் முதல்வி கூந்தல்
இருந்தீசந் ததம்இசைக்கும் நயம்அனைத்தும்
செவியார இன்பங் கொண்டு
பெருந்தீச விதாமதிமுக் கணன்ஆகி
யாவரையும் பெட்பின் ஆளும்
மருந்தீசன் மலர்அடியை முடிபுனைந்து
கொடியவினை மாசு தீர்வாம்.

மால் வண்ண மால்அயன் ஆதியஅமரர்
முனிவர்கள் மயங்கி வேத
நூல்வண்ண மேயுணராது ஆகமத்தின்
வழியேத்தும் நோன்மைக் காகச்
சேல்வண்ண விழியுடையா ளோடமர்ந்து
நாள்நாளும் சீர்த்தி மல்கும்
பால்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ண
மேனியனைப் பரவு வாமால்.

அரிபுரமோ டயன்அரி ஆதியர்புரமும்
மதிக்கேம் என்று அரிய வெண்மைக்
கிரிபுரமே தருகஎன ஒருகணத்து
முன்நயந்து கிளக்க ஞானப்
பரிபுரஒண் சீரடியைப் பன்னுமவர்க்கு
அளித்தருளும் பண்பு வாய்ந்த
திரிபுரசுந் தரிதாளைத் தரித்தாள
எம்சிரம்தான் சிறக்கும் நன்றே.

மிக்கஆ கமமறையின் பொருளுணரும்
அடியர்மனம் மேவி என்றும்
தக்கவா றுடன்இருந்து மலம்ஒழியுங்
காறும்அருட் சத்தி யாக,
நக்கனுர் புடைமருவி ஐந்தொழிற்கும்
காரணமாய் நண்ணி வாழும்
சொக்கநா யகியம்மை செஞ்சரணம்
நெஞ்சாரத் துதித்து வாழ்வாம்!

—அஷ்டாவதானம்
பூவை. கலியாண சுந்தர யதீந்திரர்.



திருவான்மியூர்க் கோயிலின் தோற்றம்

திருமழிசைக் கல்வெட்டுக்கள்

(திரு. டாக்டர். மா. இராசமாணிக்கனார்)

திருமழிசை :

சென்னைக்கு மேற்கில் ஏறத்தாழ இருபது கல் தொலைவில் திருமழிசை என்னும்ஊர் உள்ளது. அவ்வூர், ஆழ்வார் பன்னிருவருள் ஒருவராகிய திருமழிசை ஆழ்வார் என்பவர் தோன்றிய சிறப்புடையது. திருமழிசை ஆழ்வார் காலம் கி.பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டு எனலாம். திருமழிசையிலுள்ள பெருமாள் கோவிலில் அந்த ஆழ்வாருக்கு ஒரு தனிக் கோயில் அமைந்துள்ளது. அப் பெருமாள் கோயிலுக்கு அண்மையில் சிவன் கோயில் ஒன்று காணப்படுகின்றது. அச் சிவன் கோவிலில் ஒத்தாண்டேசுவரர் என்னும் பெயர் கொண்ட தனிச் சிவலிங்கத்துக்குத் தனிக் கோவில் ஒன்று உள்ளது. இவ்வாறே பெருமாள் கோயிலில் சகந்நாதர் என்னும் பெருமாளுக்குத் தனிக் கோவில் ஒன்று உண்டாயிற்று. இங்ஙனம் உண்டான தனிச் சிறு கோயிலே இன்று பெருமாள் கோயிலாகக் காட்சியளிக்கிறது. அங்ஙனமே சிவன் கோயிலிலும் ஒத்தாண்டேசுவரர் கோயிலே இன்றுசிவன் கோயிலாகப் பெயர் பெற்றுள்ளது.

கரிகால் வளவன் யானையின் மீது அமர்ந்து பல கோயில்களை வழிபட்டு வரும்போது திருமழிசை வழியாக வந்தான். அப்பொழுது அவன் ஏறிவந்த யானையின் அடிகளில்ஊனுங்கொடி சிக்கியது. அரசன் தன் உடைவாளினால் அக் கொடியை வெட்டினான். அவ் வெட்டு, அக் கொடியால் மூடப்பட்டிருந்த சிவ லிங்கத்தின் மீது பட்டது. அதனைக் கண்ட சோழர் பெருமான் மிகவும் வருந்தி, வாள் ஓச்சிய தனது கையை வெட்டிக் கொண்டான். அவ் வளவில் இறைவன் உமையம்மையோடு காட்சிகொடுத்து,வெட்டுண்ட கையை வழங்கினான் என்பது இத்தலத்தில் வழங்கப்படும் கதையாகும். இவ்வாறு சோழனது மனதுக்கு ஒத்து அவனை ஆண்டருளிய சிவபெருமான் 'ஒத்தாண்டேசுவரர்' எனப் பெயர் பெற்றார் என்பது தல வரலாறு கூறும் செய்தியாகும். அம்மன் பெயர் குளிர்ந்த நாயகி என்பது.

கல்வெட்டுக்கள் :

சகந்நாதப் பெருமாள் கோவிலில் கி.பி. 12, 13, 14, 15 ஆகிய நான்கு நூற்றாண்டுகளைச் சார்ந்த பதினான்கு கல்வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன; ஒத்தாண்டேசுவரர் கோவிலில் கி.பி. 12, 13, 14, 15 ஆகிய நான்கு நூற்றாண்டுகளைச் சேர்ந்த பத்துக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

அரசர்கள் :

பெருமாள் கோயில் கல் வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ள அரசர்களின் பெயர்களும் அவர்தம் காலங்களும் கீழே காண்க.

அரசர்கள்	காலம்
சோழன் மூன்றாம் குலோத்துங்கன்	கி.பி. 1178—1218
கோப்பெருஞ்சிங்கன்	,, 1243—1261
விசயகண்ட கோபாலன்	,, 1250—1280
அரியண்ண உடையார் (அரிகரர் 2)	,, 1376—1404
விருபாட்சர்	,, 1465—1485

சிவன் கோயில் கல் வெட்டுக்கள் கீழ் வரும் அரசர்களை உணர்த்துகின்றன:

அரசர்கள்	காலம்
சோழன் முதற் குலோத்துங்கன்	கி.பி. 1070—1122
மூன்றும் குலோத்துங்கன்	,, 1178—1218
மூன்றும் இராசராசன்	,, 1216—1246
மூன்றும் இராசேந்திரன்	,, 1246—1279
அரியண்ண உடையார் (அரிகரர் 2)	,, 1376—1404
அச்சுதராயர்	,, 1530—1542
வேங்கடராயர் 2	,, 1585—1614

கல்வெட்டுச் செய்திகள்

பெருமாள் கோயில் :

1. மூன்றும் குலோத்துங்கள் 16-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1194) திருமழிசை, மேல்மாங்காடு நாட்டுப் புக்கதுறை, வல்ல சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் பெற்றது. அங்கு இருந்த திருமழிசை ஆழ்வார் கோயிலுக்குப் பிள்ளையார் (இளவரசன்) குலோத்துங்க சோழ கண்ணப்பன் நல்ல நாயினுர் பஞ்சநதிவாணன் நீலகங்கரையன் என்பவன் ஆயிரத்து அறுநூற்றம்பைது குழி நிலம் தானம் வழங்கினுன்.

2. சேந்தமங்கலத்தைத் தலைநகராய்க் கொண்டு சோழன் மூன்றும் இராச ராசனைச் சிறையிலிட்டுத் தொண்டை நாட்டை ஆண்ட சகல புவன சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கன் 19-ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1261) பெருமாள் கோயிலுக்கு நான்கு வீடுகள் தானமாக விடப்பட்டன.

3. சோழப் பேரரசு வலியிழந்து 13-ஆம் நூற்றுண்டின் இடையில் தெலுங்குச் சோழனுன விசயகண்ட கோபாலன் தொண்டை நாட்டை ஆண்டான். அவனுடைய சிற்றரசருள் பஞ்சநதிவாணன் அருணகிரிப் பெருமாள் நீலகங்கரையன் என்பவன் திருமழிசைப் பகுதியை ஆண்டுவந்தான் போலும்! அவன் இப்பெருமாள் கோயிலுக்குப் பல அறங்கள் செய்துள்ளான்.

(அ) நீலகங்கரையன் கட்டளைப்படி சகந்நாதர் கோயிலுக்கு கி.பி. 1255-இல் சில நிலங்களின் வரி கொடுக்கப்பட்டது.

(ஆ) அக்காலத்தில் சகந்நாதர் கோயில் உள்ள இடம் 'பஞ்சநதி வாணன் சதுர்வேதி மங்கலம்' எனப் பெயர் பெற்றிருந்தது. பெருமாள் கோயில், - திருமழிசை எம்பெருமான் கோயில்' எனப் பெயர் பெற்றது. அக் கோயிலில் சகந்நாதர் கோயில் தனியாக இடம் பெற்றது. நீலகங்கரையன் சகந்நாதர் கோயிலுக்கு நிலத்தை வழங்கி, அதனை ஏற்குமாறு எம்பெருமான் கோயில் தானத்தாருக்கு (ஆட்சிக் குழுவினர்க்கு) ஆணை பிறப்பித்தான்.

(இ) எம்பெருமான் கோயிலில் நீர்வண்ணப் பெருமாள் கோயில் ஒன்று தனியே இருந்தது. நீலகங்கரையன், எம்பெருமான் கோயிலுக்கும் நீர்வண்ணப் பெருமாள் கோயிலுக்கும் திருமழிசையின் கிழக்குப் பிடாகையான வளத்து வாழ்வித்த நல்லூரின் இருந்த சில நிலங்களை வழங்கினுன். (வளத்து வாழ்வித்த நல்லூர் என்பது இப்பொழுது 'வாயிலா நல்லூர்' என மருவி வழங்குகிறது; திருமழிசைக்கு வடகிழக்கில் இரண்டரைக் கல் தொலைவில் உள்ளது).

(ஈ) விசயகண்ட கோபாலனது 16-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1255) திருமழிசை எம்பெருமான் கோயிலுக்கு மூன்று விளக்குகள் எரிக்க வசதி செய்யப்பட்டது.

(உ) அவனது 24-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1273) திருமழிசைஆழ்வார் கோயிலுக்கு அரையப்பாக்கிழான் சேரியிலிருந்து வரும் பொன்வரியைத் தானமாகக் கொடுக்கும்படி நீலகங்கரையன் ஆணையிட்டான். (அரையப்பாக் கிழான் சேரி திருமழிசைக்கு வடகிழக்கில் இரண்டு கல் தொலைவிலிருந்தது. இப்பொழுது அவ்வூர் இல்லை. ஆயினும் அவ்வூரின் பெயர் 'அரியப்பன் சேரி' என மருவி வழங்குகிறது. அப்பக்கத்தில் பலருக்கு 'அரியப்பன்' என்னும் பெயர் வழக்கில் உள்ளது).

(ஊ) விசயகண்ட கோபாலனது 26-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1275) திருமழிசை எம்பெருமான் கோயில் உள்ள இடம் 'திருமழிசை அகரம்' எனப் பெயர் பெற்றது. அக் கோயிலுக்குப் பஞ்சநதிவாணன் திருவண்ணாமலைப் பெருமாள் இலங்கேசுவரதேவன் என்பவன் சில நிலங்களை வழங்கினான்.

(எ) அவனது 30-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1280) நீலகங்கரையன், எம்பெருமான் கோயிலுக்கு நிலதானம் செய்தான். அதே ஆண்டில் அவனது ஆணைப்படி அதே கோயிலுக்கு நிலம் வழங்கப்பட்டது.

(ஏ) அரியண்ண உடையார் காலத்தில் (கி.பி. 1390) எம்பெருமான் கோயில் 'திருமழிசை விண்ணகர்' எனப் பெயர் பெற்றது. அதனைச் சார்ந்த சகந்நாதர் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்டது. அதே ஆண்டில் திருமழிசைச் சபையார் சகந்நாதர் கோயிலுக்கு நில விற்பனை செய்தனர். அதே ஆண்டு திருக்கைக்கோன் வென்று மாலையிட்டான் என்பவன் நினைவாகக் கோயிலுக்குத் திருமழிசையைச் சேர்ந்த பொன்பரப்பினான் திருவீதியில் இருந்த இரண்டு வீடுகள் தானமாக விடப்பட்டன.

(ஐ) இரண்டாம் விருபாட்சர் காலத்தில் (கி.பி. 1472) பெருமாள் கோவிலுக்கு நிலதானம் செய்யப்பட்டது.

திருமழிசையில் பாலாற்று வென்றான் திருவீதி என்று ஒரு திருவீதியும் இருந்தது.

சிவன் கோயில் :

1. முதற் குலோத்துங்கன் நாற்பத்தைந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1114) சிவன் கோவில் இருந்த இடம், 'அகரம் சேரகுலவல்லி சதுர்வேதி மங்கலம்' எனப் பெயர் பெற்றது. சிவன் கோவில் அகத்தீசுவரம் எனப்பட்டது. மாங்காட்டு உய்யக் கொண்டான் சோழபுரத்து நகரத்தார் அக்கோவிலுக்குப் பத்தாயிரம் குழிநிலம் வழங்கினர்.

2. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1187) அதே கோவிலுள்ள இடம் திருமழிசைஅகரம்எனப்பட்டது. அகத்தீசுவரமுடைய நாயனார் கோவிலில் இரண்டு விளக்குகள் எரிக்க நான்கு பசுக்கள் விடப்பட்டன.

3. மூன்றும் இராசராசன் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1228) அதே கோவிலில் ஒரு விளக்கு எரிக்க மூன்று பசுக்கள் வழங்கப்பட்டன.

4. அதே அரசனது பதினைந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1230) அகரத்து அகத்தீசுவரமுடைய நாயனார் கோவிலில் ஒரு விளக்கு எரிக்கப் பணம் வழங்கப்பட்டது.

5. மூன்றும் இராசேந்திரன் ஆறும் ஆட்சியாண்டில் (கி.பி. 1251) ஒரு விளக்கு எரிக்க மூன்று பசுக்கள் வழங்கப்பட்டன.

6. அரியண்ண உடையார் காலத்தில் (அரிகரர்—கி.பி.1390) ஒத்தாண்டேசுவரர் கோவிலுக்கு நிலம் அளிக்கப்பட்டது. ஒத்தாண்டேசுவரர் கோவில் அகத்தீசுவரமுடைய மகாதேவர் கோவிலில் இருந்த தனிக் கோவிலாகும். அதே அரசன் காலத்தில் ஒத்தாண்டேசுவரர் கோவில் என்னும் பெயரும், அகரம் திருமழிசையில் நாற்பத்தெண்ணுயிரப் பெருந்தெருஎன்னும் தெருப்பெயரும், இடம்பெற்றுள்ளன.

7. அச்சுத தேவராயர் காலத்தில் (கி.பி. 1530—1542) திருமழிசையில் கைக்கோளர் இருந்ததாக ஒரு கல்வெட்டுக் குறிகின்றது. அது முற்றுப் பெருத கல்வெட்டு.

8. இரண்டாம் வேங்கடபதிராயர் காலத்தில் (கி.பி. 1595) அச்சுதப்ப நாயக்கரய்யன் என்னும் தலைவரது முதலியான தேனகரம் பிள்ளையவர்களின் பெயரும், திருமழிசை உடையார் கோவிலில் கோவில் கொண்டுள்ள ஒத்தாண்டீசுவரத் தம்பிரானுர் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டும் முற்றுப் பெருதது.

பொதுச் செய்திகள் :

இவ்விரண்டு கோவில் கல்வெட்டுக்களும் திருமழிசையின் பழைய பெயர்களைக் குறிக்கின்றன. முதலில் திருமழிசை என்றஊர் மட்டும் இருந்தது. அங்கு வைணவப் பிராமணர் குடியேறிய இடம் 'அகரம்' எனப் பெயர் பெற்றது; பின்பு 'புக்கதுறைவல்ல சதுர்வேதி மங்கலம்' எனப்பட்டது; பின்னர்ப் 'பஞ்ச நதிவாணன் சதுர்வேதி மங்கலம்' எனப் பெயர் பெற்றது. பெருமாள் கோவில் முதலில் 'எம்பெருமான் கோயில்' எனப்பட்டது. அந்த எம்பெருமான் கோவிலில் திருமழிசை ஆழ்வார் கோயில் இடம் பெற்றது; பின்பு சகந்நாதர் கோவில் இடம் பெற்றது; இன்று அக்கோவில் சகந்நாதர் கோவில் என்றே வழங்கப்படுகின்றது. எம்பெருமான் கோவில், நீர்வண்ணப் பெருமான் கோவில் ஆகிய இரண்டும் வழக்கில் இல்லை. இப்பொழுது உள்ள அழகிய சிங்கர் கோவில் பழைய நீர்வண்ணர் கோவிலாக இருந்திருக்கலாம்.

சிவன் கோவிலில் கங்காதரேசுவரர் கோவில் என்னும் சிறு கோவிலும், முருகன் கோவிலும், ஒத்தாண்டேசுவரர் கோவிலை அடுத்து இடம் பெற்றுள்ளன. அக் கங்காதரேசுவரர் கோயிலே அகத்தீசுவரமுடைய நாயனுர் கோயிலாக இருந்திருத்தல் கூடும். ஒத்தாண்டேசுவரர் கோவில் ஏற்பட்ட பின்பு அப்பழைய கோவில் சிறப்பிழந்தது போலும்!

சகந்நாதர் கோயில், திருமழிசை.

சகந்நாதர் கோயில் விமானம், திருமழிசை.

திருமழிசையில் இருந்த தெருக்களுள் பாலாற்று வென்ருன் திருவீதி, பொன்பரப்பினுன் திருவீதி, நாற்பத்தெண்ணுயிரப் பெருந்தெரு என்பவை மட்டும் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளன. பாலாற்று வென்ருன் என்பது ஒரு வீரனைக் குறிப்பதாகலாம். பொன்பரப்பினுன் என்பது சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்த மன்னருள் ஒருவனையோ, வேறு தலைவனையோ குறித்ததாகலாம். அக்காலத் தமிழகத்தில், தில்லை மதுரை போன்ற சைவத் திருப்பதிகளில் இருந்த மகேசுவரர், நாற்பத்தெண்ணுயிரவராவர். அவர்கள் சொற்படி கோவிலாட்சி நடைபெற்றது; அப்பெரு மக்களிடம் கொண்ட மதிப்பினுல் ஆடவரும் பெண்டிரும் 'நாற்பத்தெண்ணுயிரம்' என்ற எண்ணிக்கையைத் தம் பெயர்களுக்கு முன் இட்டு வழங்கினர். அவ்வாறே தெருவின் பெயரும்அமைந்தது. நாற்பத்தெண்ணுயிரபட்டன், நாற்பத்தெண்ணுயிர மாணிக்கம், நாற்பத்தெண்ணுயிரப் பெருந்தெரு என்பன கல்வெட்டுக்களில் காணப்பெறும் பெயர்களாகும்.



ஒத்தாண்டேசுரர் கோயில் விமானம், திருமழிசை.

கோயில் நிகழ்ச்சிகள்

1. ஸ்ரீ நீலமேகப் பெருமாள் தேவஸ்தானம், குளித்தலை.
2. திருக்குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி தேவஸ்தானம்.
3. ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், விளநகர், ஆறுபாதி அஞ்சல்.
4. ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாள் தேவஸ்தானம், வடரெங்கம், சீர்காழி வட்டம்.
5. தோப்புத்துறை ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் தேவஸ்தானம், வேதாரண்யம்.
6. ஸ்ரீ நாய்ச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீவில்லிப்புத்தூர்.
7. இராஜமன்னுர்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி தேவஸ்தானம்.
8. ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி தேவஸ்தானம், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி-6.
9. ஸ்ரீ அபயப்பிரதான ரங்கநாத சுவாமி தேவஸ்தானம், கரூர்.
10. ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி தேவஸ்தானம், திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஸ்ரீ சுந்தர விநாயகர், ஸ்ரீ செல்வ விநாயகர், ஸ்ரீ ஆஞ்சநேயர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4—திருப்பாவை உபந்யாஸம் (16-12-66 முதல் 14-1-67).

திருவான்மியூர் திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ மருந்தீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்—அஷ்டோத்ர சத சங்காபிஷேகம்.

ஸ்ரீ சப்தரிஷீஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருத்தவத்துறை (லால்குடி)—ஆருத்ரா தரிசன மகோத்ஸவம்.

ஸ்ரீ வெள்ளீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம், தெற்கு மாட வீதி, மயிலை, சென்னை-4—ஆருத்ரா தரிசன மகோத்ஸவம்.

சேலம் ஸ்ரீ சுகவனேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்—ஆருத்ரா தரிசன மகோத்ஸவம்.

ஸ்ரீ அரங்கநாதீஸ்வர ஸ்வாமி ஆலயம், மடவாளம், (திருப்பத்தூர் வ.ஆ.)—தனுர் மாத பூஜை—ஆருத்ரா தரிசன உத்ஸவம்.

ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி தேவஸ்தானம், மன்னுர்குடி—ஸ்ரீ ராஜகோபுரம் கும்பாபிஷேகம்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் தேவஸ்தானம், நாச்சியார்கோயில்—முக்கோடி உற்சவம்.

திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்குக் கோடி அர்ச்சனை (30-11-1966).

திருத்துழாயின் சிறப்பு

திரு. கே. இராமகிருஷ்ணன்
சித்த வைத்திய சாலை, வைத்தீசுவரன் கோயில்

திருத்துழாய் என வழங்கப் பெறும் துளசியைப் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் பயிரிட்டு அதிகமாக உபயோகிக்கின்றார்கள். தமிழ், தெலுங்கு, வடமொழி, ஹிந்தி ஆகிய மொழிகளில் துளசி என்றே வழங்கப் படுகிறது. லத்தீன் பாஷையில் ஓசிமம் Ocimum Sanctum, ocimum alban, என்றும், ஆங்கிலத்தில் Holy basil என்றும், வழங்கப் படுகிறது. வைணவர்கள் திருத்துழாய் என்றும் கூறுகின்றார்கள்.

துளசி இலைக்கு உஷ்ணாரி, சுவேதாரி, கபாரி ஆகிய குணங்கள் உண்டு. விதைக்கு சினித்தக்காரி குணம் உண்டு. இதன் சுவைக்கு கார்ப்பு, வீரியம், வெப்பம் உண்டு. துளசியில் பலவகை நம் நாட்டில் கிடைக்கின்றன. அவையாவன, கரிய மால் துளசி, கருந்துளசி, கற்பூரத் துளசி, செந்துளசி, காட்டுத்துளசி, சிவதுளசி, நாய்த்துளசி, நிலத்துளசி, பெருந் துளசி, கல்துளசி, முள்துளசி என்பனவாம்.

நித்தியப்படி நம் உணவில் ஏற்படக் கூடிய விஷத் தன்மையை நீக்கும் குணமும், தேகத்தை நோய் அணுகாதிருக்கும்படி செய்யக்கூடிய குணமுமுள்ள மூலிகையாகும். இதன் தத்துவத்தை அறிந்துதான் நம் முன்னோர்கள் இதை ஒரு சமய சஞ்சீவியாகப் போற்றி வந்திருக்கிறார்கள்.

பொதுவாகத் துளசியைக் கபம், வயிற்றுளைச்சல், அஸ்திசுரம், தாகம், கப மாந்தம், அரோசகம், பிரமேகம் முதலிய நோய்களுக்கு உபயோகிக்கின்றார்கள். இருமல், இரைப்பு சேர்வதால் உண்டாகும் கொறு கொறு என்ற சப்தம், மார்புச் சளி, சன்னி பாத சுரம் இவைகளை நீக்கி வெப்பத்தைத் தரும்.

கபத்தையும் வாதத்தையும் குறைத்துப் பித்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

கீழ்க்கண்ட முறை சரபேந்திர வைத்திய முறைகளில் காணப்படுகின்றது. அதாவது பொரித்த பெருங்காயம் ஐந்து விராகனிடை, துளசி சமூலம், இடித்த தூள் ஐந்து விராகனிடை, இவ்விரண்டையும் கலந்து வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு ஒன்றேகால் விராகனிடை வீதம் தினம் இரு வேளையும் வெந்நீருடன் சாப்பிட வேண்டும். துவரை மிளகு ரசம் சாப்பிட வேண்டும். பிறகு பத்து நாட்களுக்குத் தினம் ஒருவேளை மட்டும் சாப்பிட்டால் போதும். எட்டு வித குன்மங்களுக்கும் நன்மையத் தரும்.

இதன் விதையைக் குளிர்ந்த தண்ணீரில் ஊறவைத்து அரைத்துப் பிரசவித்த பிறகு காணுகிற வேதனைக்கு வயிற்றில் பற்றுப்போடலாம். வயிற்றினுள் காற்று புகாமல் கருப்பப்பை, சீக்கிரம் சுருங்கும்; கெட்ட இரத்தத்தை வெளிப்படுத்தும்.

குழந்தை வாந்தி எடுத்தால் துளசிச் சாற்றில் சுத்தமான தேனைக் கலந்து வைத்துக் கொண்டு அரைத் தேக்கரண்டிவீதம் மணிக்கு ஒருகரண்டி கொடுத்து வந்தால் வாந்தி நிற்கும்.

வாந்தியுடன் பேதியுமானால், குழந்தைக்கு மாந்தம் வந்துவிட்டது என்பார்கள். இதற்குக் கடையில் கிடைக்கக் கூடிய துளசி விதையை வாங்கி நன்றாக அறைத்துப் பசும் பால் அல்லது தாய்ப் பாலில் கலந்து ஒரு சங்கு வீதம் கொடுக்க உடனே வாந்தியும் பேதியும் நிற்கும்.

முற்றின துளசி இலை, நொச்சி இலை, நுணா இலை, பொடுதலை இலை, உத்தா

மணி இலை, சங்க இலை, வேப்பிலைக் கொழுந்து ஆகியவைகளைச் சமமாக எடுத்துக் கசக்கிய சாற்றை மூன்று நாட்கள் காலை மாலை, ஒருதேக்கரண்டி வீதம் கொடுத்தால் கணை மாந்தம், மூக்கு மாந்தம், அள்ளு மாந்தம், ஆகிய மாந்தங்கள் எட்டும் நிச்சயம் குணமாகும். மேற்படிமூலிகைகளுடன் சிறிது உரித்த பூண்டும், வறுத்த மிளகும், சுட்ட வசம்பும் சேர்த்து நன்றாக அரைத்துச் சிறு சிறு உருண்டைகளாகக் காய வைத்தும் வேண்டும்போது உபயோகிக்கலாம்.

பலமான மார்புச் சளி பிடித்துக் கொண்டு மூச்சுவிட முடியாமல் தவிக்கும் குழந்தைகளுக்குத் துளசி இலைச் சாறும் குப்பை மேனிச் சாறும் எட்டுத் துளிகள் வீதம் தேனுடன் கலந்து கொடுத்தால் ஐந்து நிமிடங்களில் சளி வெளிப்பட்டுக் குழந்தை சுகமாகத் தூங்கும். பெரியவர்கட்கும் வரக்கூடிய டிப்தீரியா (Diptheria) என்ற சளி அடைப்பான் வியாதிக்கும் மேற் சொன்ன முறையில் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால் நல்ல பலனைக் கொடுக்கும்.

தாய்ப்பால் சரிவரக் குடிக்காத குழந்தைகளுக்குத் துளசி அதிமதுரம் இரண்டையும் வெந்நீரில் சந்தனம் போல் நன்றாக அரைத்து முலைக்காம்பில் தடவிப் பால் குடிக்கச் செய்தால், கல் ஈரல் நன்றாக வேலை செய்யும். குழந்தைகளுக்கு நல்ல பசி உண்டாகும்.

இரண்டு அவுன்ஸ் துளசிச் சாற்றில் தேன் கலந்து காலையில் சாப்பிட்டு வந்தால் சீதள சுரம், (Influenza) மலைச் சுரம் முதலிய தொற்று நோய்கள் நீங்கும். மேலும் நடுத்தர வயதுடையவர்கள், காலை, மாலை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வந்தால் அரிப்பு போன்ற சர்ம ரோகத்திற்குச் சிறந்த மருந்தாகும்.

பாம்பு விஷத்திற்கும் கிராமங்களில் துளசிச் சாற்றைக் கொடுக்கும் பழக்கம் இன்றும் இருந்து வருகிறது. தொடர்ந்து பத்து நிமிஷத்திற்கு ஒரு தரம்கொடுத்து வந்தால் விஷம் முறியும்.

பயம், அதிர்ச்சியினால் திடீரென்று மயங்கிவிழுந்து பிரக்ஞையற்றுக் கிடப்பவருக்கு ஒரு அவுன்ஸ் துளசிச் சாற்றைக் கொடுத்தால் உடனே மயக்கம் தெளியும்.

இதனால்தான் ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் துளசி மடம் வைத்துத் தெய்வீக மூலிகையாகக் கொண்டாடுகின்றார்கள்.

பெண்களுக்குப் பெரும்பாலும் மாதவிலக்குச் சரிவர இல்லை யென்றால் அதனால் ஏற்படக்கூடிய தலைவலி, முதுகுவலி, இடுப்பு வலி, துடை வலி, மார்பு வலி இவைகளுக்குத் துளசியுடன் கால் பலம் வாய் விளங்கம், சுக்கு, கருஞ்சீரகம், கண்டைத் திப்பிலி, பறங்கிப் பட்டை இவைகளைச் சேர்த்துக் கஷாயமாகவோ சூரணமாகவோ சாப்பிட்டு வந்தால் மேற்சொன்ன வியாதிகள் நீங்கும். உடலுக்கு நல்ல ஆரோக்யம் தரும்.

துளசி சமூலம் நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து சம அளவு மிளகுபொடி சேர்த்து ஒரு தேக்கரண்டி வீதம் நெய்யில் சாப்பிடலாம். அல்லது கொஞ்சம் சீரகம் துவரம் பருப்பு இவைகளை வறுத்த பொடியுடன் உப்பும் கலந்து முன் சூரணத்துடன் சேர்த்துச் சாதத்துடனும் சாப்பிடலாம். நல்ல பசியை உண்டாக்கும். வாய்வு ரோகங்கள் நீங்கும்.

துளசி காபி:—கப சம்பந்தமான ரோக முடையவர்கள், இதை உபயோகிக்கலாம். அமுக்கிறான் கிழங்கு, பறங்கிப் பட்டை, சுக்கு, ஆவாரம் பூ, ஏலரிசி, சித்தரத்தை, அதிமதுரம் இவைகளில், ஏலரிசி சித்தரத்தை மாத்திரம் லேசாக வறுத்து எல்லாவற்றையும் தனித்தனியே இடித்து வஸ்திரகாயம்

செய்த சூரணம், வகைக்குப் பலம் ஒன்று, துளசி இலைச் சூரணம் பலம் ஐந்து, இவை யாவையும் கலந்து வைத்துக்கொண்டு, ஒரு ஆழாக்குத் தண்ணீரில் இரண்டு கரண்டியளவு தூள் போட்டுக் கொதிக்கவைத்து வடிகட்டிப் பால் சர்க்கரை சேர்த்துச்சாப்பிடலாம். இரத்தம் சுத்தியாகும். கபம் அறவே நீங்கி விடும். நுரை ஈரல் பலப்படும்.

கண்ணெரிச்சல், அதிக உஷ்ணம் இவைகளுக்கு :— நல்லெண்ணை பதினைந்து பங்கு, துளசிச் சாறு, ஆறுபங்கு, எலுமிச்சம் பழச் சாறு இருபது பங்கு இவைகளை ஒருமிக்கக் கலந்து, அரைப் பலம் சித்தரத்தை, மிளகு, அதிமதுரம், இவைகளை இடித்த சூரணங்களைக் கலந்து காய்ச்சி வடித்து வாரம் ஒரு முறை ஸ்நானம் செய்ய உஷ்ணத்தினல் ஏற்பட்ட, நீடித்த கண் எரிச்சல், கண் சிவப்பு நீங்கி குளிர்ச்சி பெறும்.

சர்பத் :— துளசி இலைச் சாறு ஒரு பங்கு எலுமிச்சம் பழச் சாறு ஒரு பங்கு, சீனிக் கற்கண்டு ஒரு பங்கு, தேன் ஒரு பங்கு இவைகளை சர்பத் பாகப்படி— காய்ச்சி வேளை ஒன்றுக்கு ஒரு தேக் கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால், இருதயத்திற்கும் இரைப்பைக்கும் பலத்தைக் கொடுக்கும். இருமல், இரைப்பு, சுரம், முதலியவைகள் நீங்கும்.

மதிப்புரைகள்

1. வெள்ளிவிழா மலர் : தென்னாற்காடு மாவட்டம், கண்டாச்சிபுரம், சற்சங்கம், வெளியிட்டிருப்பது. இதன்கண் இராமலிங்க அடிகளார் பற்றியும், அவர்கள் அருளிச் செய்த திருவருட்பா பற்றியும், சிறந்த அறிஞர் பெருமக்கள் பலர் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். படித்துச் சுவைத்துப் பயன்கொள்ளத் தக்க சிறந்த வெளியீடு. சன்மார்க்க அன்பர்களுக்கும், திருவருட்பா ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயன்படும். சிறந்த முறையில், உயரியதாளில், மிக்க கவர்ச்சியுடன், திருத்தமாகப் பதிக்கப் பெற்றுள்ளது. விலை ரூபா 2-50. இதன் விற்பனைத் தொகை சங்கத்தையே சாரும். கிடைக்குமிடம் : திரு. அ. முத்தையன், செயலாளர், சற்சங்கம், கண்டாச்சிபுரம் அஞ்சல், தென்னாற்காடு மாவட்டம்.

2. அப்பரின் அற்புதம் : கவியோகி மகரிஷி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் இயற்றியது; நடித்தது. எளிய இனிய நடையில், உணர்ச்சியைத் தூண்டிப் பக்தியைப் பெருக்கும் முறையில், நன்கினிது எழுதப் பெற்றுள்ளது. இடையிடையே சேர்க்கப் பெற்றுள்ள தேவாரத் திருப்பாடல்கள் நூலின் சிறப்புக்கும், தெய்விக அமைப்புக்கும் பெரிதும் காரணமாக விளங்குகின்றன. கோயில்களிலும், பள்ளிக்கூடங்களிலும் நடிக்கத் தக்க சிறப்பு வாய்ந்தது. நல்ல கலைநலஞ் செறிந்த, இக்காலத்திற்குத் தேவையான, பயன்மிக்க நல்ல நூல். விலை ரூபா 1-25. கிடைக்குமிடம் : ''சுத்தானந்த நூலகம், யோக சமாஜம், அடையாறு, சென்னை-20''

—ஆசிரியர்.

ஆலயத் திருப்பணிகள்

(1) அழகர் கோயில் ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த தல்லாகுளம் ஸ்ரீ பிரசன்ன வேங்கடாசலபதி பெருமாள் கோயிலில் 23—1—67-ஆம் தேதியன்று விமான ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிடேகம் நடைபெற உள்ளது. திருப்பணி வேலைகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

(2) திருவதிகை திரு வீரட்டானேசுவரர் கோயிலில், ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில், திருப்பணித் துவக்க விழா நடைபெற்றது. நிர்வாக அறங்காவலர் வரவேற்புரை நிகழ்த்தினர். ஆலய அறங் காவலர்களும், பொது மக்களும் ரூபா 57,000 நன்கொடை வழங்கக் கையொப்பம் அளித்தனர். அப்பர் இல்லச் செயலாளர் திரு. கே. சுப்பராயலு அவர்கள் நன்றியுரை கூறினர்கள்.

சமணமும் தமிழும்

(முதுபெரும் புலவர் மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி, சென்னை)

வாழ்க்கையை நல்வழிப் படுத்தி ஆன்மாவை உயர் நிலையடையச் செய்வதற்கு மதங்கள் உதவி செய்துள்ளன. மேலும், மதங்கள், அந்தந்த மக்கள் பேசுகிற மொழிகளையும் வளப்படுத்தி அம்மொழிகளில் சிறந்த இலக்கியங்களையும் அளித்திருக்கின்றன. சைவம் வைணவம் சமணம் பௌத்தம் கிருஸ்துவம் இஸ்லாம் ஆகிய மதங்கள் தமிழ் மொழியை வளப்படுத்தி அதில் சிறந்த இலக்கியங்களைக் கொடுத்திருக்கின்றன.

மனித இனம் முழுவதும் ஒரே மொழியைப் பேசாமல், வெவ்வேறு மக்கள் வெவ்வேறு மொழிகளால் மக்களிடையே பிரசாரஞ் செய்த மதப் பிரசாரகர்கள், அந்தந்த மக்கள் பேசிய அந்தந்த மொழிகளிலேயே, நூல்களை எழுதினார்கள். ஆனால், சமண சமயத்தாரும், பௌத்த மதத்தாரும் இந்த விஷயத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். சமண சமயத்தைப் போதித்த வர்த்தமான மகாவீரரும், பௌத்த மதத்தைப் போதித்த கௌதம புத்தரும், அந்தந்த மக்கள் பேசுகிற மொழிகளிலேயே போதிக்க வேண்டும் என்றும், மக்கள் தெரிந்து கொள்ள முடியாத வேறு மொழிகளில் போதிக்கக் கூடாது என்றும், தங்கள் சீடர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளை யிட்டு இருந்தார்கள்.

கி.மு. முதல் நூற்றாண்டில், விருத்த வாதி முனிவர் என்னும் பெயருள்ள சமண முனிவர் ஒருவர் இருந்தார். அவருடைய சீடர் சித்தசேன திவாகரர். சம்ஸ்கிருத மொழியைக் கற்றவராகிய சித்தசேன திவாகரர், சமண சமய சித்தாந்தங்களைச் சம்ஸ்கிருத மொழியில் எழுத வேண்டும் என்று கருதி, இக் கருத்தைத் தம்முடைய குருவான விருத்தவாதி முனிவரிடங் கூறினார். அதுகேட்ட அவர், சமண சமய போதனைகளை மக்கள் பேசியும் கற்றும்வருகிற தாய்மொழியிலேயே எழுதி வைக்க வேண்டும் என்றும், பொது மக்கள் அறியாத சம்ஸ்கிருத மொழியில் எழுதி வைப்பது பெரும் பாவம் என்றும்கூறித் தம்முடைய சீடரைக் கண்டித்தார். இது கேட்ட சித்தசேன திவாகரர், தாம் செய்ய நினைத்த குற்றத்துக்குக் கழுவாயாகப் பன்னிரண்டு ஆண்டுகள் வாய் பேசாமல் ஊமைபோல் இருந்தார் என்று, சமண சமய வரலாறு கூறுகிறது. இதிலிருந்து சமண சமயத்தார் தங்கள் மதக் கொள்கைகளை விளக்க, அந்தந்த மக்கள் பேசுகிற அந்தந்த மொழியிலேயே, தங்கள் மத நூல்களை எழுதினார்கள் என்பதுதெரிகிறதன்றோ?

இனி, சமணர் தமிழ் நாட்டிலே தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியங்களையும் எவ்வாறு வளர்த்தார்கள் என்பதைக் கூறுவோம். மற்றைச் சமயத்தார் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டுகளைவிட அதிகமான தொண்டுகளைச் சமண சமயத்தார் செய்திருக்கிறார்கள். அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டுகளைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே பொன் எழுத்தினால் பொறித்து வைக்க வேண்டும்.

மொழி வளர்ச்சிக்கான இலக்கணம் நிகண்டு என்னும் கருவி நூல்களை, முதன் முதலாகச் சமண சமயத்தார் செய்திருப்பதோடு, அவர்கள் தமிழிலே காவியம் சாத்திரம் தோத்திரம் முதலிய இலக்கிய நூல்களையும் இயற்றியிருக்கிறார்கள்.

நன்னூல், சின்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இலக்கண நூல்களையும்; சேந்தன் திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டு நூல்களையும், எழுதினவர் சமண சமயத்தவரே.

பண்டைக் காலத்தில் தமிழ் மொழியிலே, அகவற்பா வஞ்சிப்பா வெண்பா கலிப்பா என்று நான்கு வகைப் பாக்களே இருந்தன. சமணரும் பௌத்தரும், விருத்தப்பா என்னும் புது வகையான பாக்களைத் தமிழில் அமைத்தார்கள். விருத்தப் பாக்களைத் தமிழில் முதல் முதலாக வளர்த்தவர்கள், சமண சமயத்தாரே.

தமிழ் மொழியிலே முதன் முதலாகக் காவிய நூல்களை இயற்றினவர்களும், சமண சமயப் பெருமக்களே யாவர். தமிழின் ஆதி காவியமாகிய சிலப்பதிகாரத்தை இளங்கோ அடிகள் என்னும் சமண சமயப் பெரியார் இயற்றினார். அதற்கு அடுத்தபடியாகத் தமிழில் போற்றப்படுவது, சீவக சிந்தாமணி என்னும் காவியம். இக்காவியத்தை இயற்றியவர் புகழ்பெற்ற திருத்தக்க தேவர் என்னும் சமணப் பெரியார். இந்தக் காவியம் சீவகசாமி என்னும் அரசனுடைய வாழ்க்கையைக் கூறுகிறது. அழகான காவியம். இந்தக் காவியத்திலிருந்து பல கருத்துக்களைக் கம்பர் எடுத்துக் கொண்டு, தாம் இயற்றிய கம்பராமாயணத்தில் பெய்திருக்கின்றார்.

கொங்குவேள் என்னும் புலவர் பெருமான் இயற்றியது பெருங்கதை. பெருங்கதைக்கு உதயண காவியம் என்னும் பெயரும் உண்டு. ஆசிரியப் பாவினால் அமைந்த இந்தக் காவியம் உதயணன் என்னும் அரசனுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது.

சூளாமணி காவியத்தைப் பாடியவர் தோலாமொழித்தேவர். இது விருத்தப் பாக்களினால் அமைந்த இனிய அழகான நூல். செய்யுளின் ஓசையமைப்பும் சொல்லழகும் பொருட்செறிவும் உள்ள காவியம் இது.

மேருமந்தர புராணம் என்பது மேரு, மந்தரன் என்பவர்களின் வரலாற்றைக் கூறுகிற சிறந்த நூல். யசோதர காவியம் என்னும் நூலும் சமண சமய நூலே.

வளையாபதி, சாந்திபுராணம், நாரத சரிதை, ஜைன ராமாயணம் என்னும் இலக்கிய நூல்கள் சமணப் பெரியோர் இயற்றிய நூல்களே. இந்த நூல்களிலிருந்து சில சில செய்யுட்கள் மட்டுங் கிடைத்திருக்கின்றன. இந்நூல்கள் முழுமையுங் கிடைக்கவில்லை.

சமண சமய நூல்கள் சூரசேனி என்னும் பிராகிருத பாஷையில் எழுதப் பட்டிருப்பதனால், தமிழில் சமண சமய இலக்கியங்களை எழுதிய சமணப் பெரியோர்கள் சிற்சில பிராகிருத மொழிச் சொற்களைத் தமிழில் கலந்தனர். ஆனால், அச்சொற்கள் தமிழ் மொழிக்கு இயைந்தபடி வழங்கப் பட்டிருக்கின்றன. இவை பிராகிருத மொழிச் சொற்கள் என்பதை யறியாத சிலர், இச் சொற்களைச் சம்ஸ்கிருதச்சொற்களின் சிதைவு என்று கூறுவர். உண்மையில் அவை பிராகிருதச் சொற்களே யாகும்.

சமண சமயத் தத்துவங்களைத் தர்க்க முறையில் விவாதித்து நிறுவுகிற நீலகேசி, அஞ்சனகேசி, பிங்கல கேசி முதலிய நூல்களைச் சமணர் இயற்றினார்கள். இந் நூல்களில் நீலகேசி கிடைத்திருக்கிறது. அஞ்சனகேசியும் பிங்கல கேசியும் கிடைக்கவில்லை.

மிக உயர்ந்த நீதி நூலாகிய திருக்குறள் என்னும் நூலும், சமண சமயத்தார் இயற்றியதே. திருக்குறளை ஒவ்வொரு சமயத்தாரும் தம்தம் நூல் என்று போற்றுகிறார்கள். ஆனால், திருக்குறள் சமண சமயத்தார் செய்த நூல் என்பது அதன் கடவுள் வாழ்த்துக்களிலிருந்து அறிகிறோம். ஆதிபகவன், மலர்மிசை ஏகினான், அறவாழி அந்தணன், பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் சொற்றொடர்கள் சமண சமயக் கடவுளாகிய அருகக் கடவுளையே குறிக்கின்றன என்பதில் ஐயம் இல்லை. மேலும் நீலகேசி என்னும் சமண சமய நூலின் உரையில், திருக்குறள் 'எம் ஓத்து' (எங்கள் வேதம்) என்று உரையாசிரியர் கூறுகிறார். இக்காரணங்களால் திருக்குறளை இயற்றியவர் சமண சமயத்தார் என்பது நன்கு விளங்குகின்றது.

நாலடியார் என்னும் நீதிநூலேஇயற்றியவர்களும் சமண சமயத்தாரே. நரிவிருத்தம் எலிவிருத்தம் கிளிவிருத்தம் என்னும் நூல்களேயும் சமண சமயத்தார் எழுதியுள்ளனர். இவற்றில் நரி விருத்தம் கிடைத்திருக்கிறது. எலி விருத்தமும் கிளி விருத்தமும் கிடைக்கவில்லே.

திருநூற்றந்தாதி, திருமேற்றிசையந்தாதி, திருக் கலம்பகம் என்னும் நூல்கள் அருகக் கடவுளேப் போற்றுகிற சிறந்த நூல்கள். மேலே கூறப்பட்ட நூல்களேப் போலவே இந்த நூல்களும் இலக்கிய வளமும் சொல் அழகும் பொருள் செறிவும் உடைய சிறந்த நூல்களாகும். சிறுவர் சிறுமியர் பாடசாலேகளில் கற்பதற்காகக் கணக்கு நூல்களேச் சமணர் இயற்றினுர்கள். நெல்லணி இலக்கம், சிறுகுழி, பெருங்குழி, கணக்கதிகாரம் என்னும் புத்தகங்களே அவர்கள் இயற்றினுர்கள். இந்த நூல்கள் பண்டைக் காலத்தில் பள்ளிக் கூடங்களில் படிக்கப்பட்டன. இக் காலத்தில் இந்த நூல்களேப் படிப்பதில்லே.

பள்ளிக்கூடம் என்னும் சொல் சமண சமயத்தாரின் மடங்களேயும் பௌத்தரின் விகாரைகளேயும் குறிக்கின்றது. சமணப் பள்ளிகளிலும் பௌத்தப் பள்ளிகளிலும் அப்பள்ளிகளேச் சேர்ந்த துறவிகள் பிள்ளேகளுக்குக் கல்வி கற்பித்தபடியால் அந்தப் பாடசாலேகளுக்கும் பள்ளிக் கூடம் என்று பெயர் உண்டாயிற்று. தமிழ் நாட்டில் இருந்து வந்த சமணப் பள்ளிகளும் பௌத்தப் பள்ளிகளும் மறைந்து போன பிறகும், பள்ளிக் கூடம் என்னுஞ் சொல் மறையாமல் இன்றும் வழங்கி வருகிறது.

கலிங்கத்துப் பரணியை எழுதிய செயங்கொண்டாரும், கொங்கு மண்டல சதகம் எழுதிய கார்மேகக் கவிஞரும் சமண சமயத்தவர்களே. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலே சிறு பஞ்ச மூலம், ஏலாதி முதலிய நூல்களே எழுதினவர்களும் சமண சமயப் பெரியோர்களே யாவர். சமண சமயத்தார் தமிழில் எழுதிய நூல்கள் இன்னும் சில உள்ளன. அவற்றையெல்லாம் இங்குக் குறிக்காமல் விடுகிருேம்.

சமண சமயம் தமிழில் இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றை எழுதித் தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் வளர்த்தது. மேலும் விருத்தப்பா என்னும் புது வகையான செய்யுளே அமைத்துக் கொடுத்துத் தமிழ் மொழியை வளர்த்துள்ளது. சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை முதலான அழியாப் புகழ் பெற்ற காவியங்களே அளித்திருக்கிறது. இவ்வாறெல்லாம் தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டு செய்த சமண சமயம், பிற்காலத்தில் மறைந்து விட்டது. தமிழ் நாட்டிலே சமண சமயத்தார் இன்னும் சிற்சில இடங்களில் இருந்து வருகின்றனர். தமிழ் நாட்டில் தோன்றிய பக்தி இயக்கத்தின் காரணமாகச் சமண சமயம் சிறப்புக் குன்றித் தாழ்ந்து விட்டது. ஆனுல், அந்த மதம் தமிழ் மொழிக்குச் செய்திருக்கிற பெருந் தொண்டு தாழ்ந்து விடவில்லே.

சமண சமயம் தமிழ் மொழிக்குச்செய்திருக்கிற அளவற்ற பெருந்தொண்டு தமிழ் மொழி உள்ளவரையில் நிலேத்திருக்கும். சமணரின் தமிழ்த் தொண்டுகளேத் தமிழர் மறக்க முடியாது. தமிழ் மொழி வரலாறு, தமிழ்இலக்கிய வரலாறுகளிலே சமண சமயத்தாரின் மொழித் தொண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும். தமிழராகிய நாம் சமண சமயத்தாரின் தமிழ்த் தொண்டுகளேப் போற்றுகிருேம், புகழ்கிருேம்; தலே வணங்கி நன்றி செலுத்துகிருேம்.

[சென்னே அனேத்திந்திய வானெலியில் ஒலிபரப்பப்பெற்ற இவ்விலக்கியப் பேச்சுக் கட்டுரை, அநுமதி பெற்று, இங்கு வெளியிடப் பெறுகின்றது.]

—ஆசிரியர்,

இறை வழிபாடு

(அருண்மொழியரசு திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்)

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் 'இறு' என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள் களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

"பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரணனந்தமே"

"அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்தது"

உடம்பிலே உயிரும் உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதை பந்து—பந்துக்குள் "பிளாடர்'; அதற் குள் காற்று என்பது போல், எல் லாப் பொருள்களேயும் எல்லா உயிர் களேயும் இயக்குகின்றதனுல் அப் பரம் பொருள் இயவுள் எனப் பேர் பெற்றது. "பெரும் பெயர் இயவுள்" என்பார் நக்கீரர். எல்லா வற்றையும் கடவுவதனுல், கடவுள் எனவும் பேர் பெற்றது.

ஒரு மருத்துவ மனேயில் மருத்துவர் தங்கியிருப்பதன் நோக்கம், அம் மருத் துவ மனேயில் உள்ள பிணியாளர்களின் பிணிகளேப் போக்குவதே யாகும். அது போல், இறைவன் எல்லா உயிர்களி லும் தங்கி அவ்வுயிர்களின் பிறவிப் பிணியைப் போக்குகின்றனன்.

உள்ளொடு புறங்கீழ் மேலாய்
உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வன்

என்பார் பரஞ்சோதி முனிவர்.

அண்டமும் அளவிலாத உயிர்களும்
ஆகமாகக் கொண்டவன்

என்பதும் அவர் திருவாக்கு.

இன்னணம் இறைவன் எங்கும்இருப் பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங் கித் தோன்றுகின்ருன். ஏனைய இடங் களில் இறைவன் மறைந்திருக்கின்ருன்.

'ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே'

—மாணிக்கவாசகர்.

பாலில் நெய் மறைந்திருப்பதுபோல், பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கிருன். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டுவெளிப் பட்டிருப்பது போல், ஞானிகள் உள்ளத் திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சி யளிக்கின்ருன்.

மற்ற இடங்களில் இறைவனே நாம் நினேந்து தியானிப்பதனுலும் துதிப்ப தனுலும் வழிபடுவதனுலும் வினேகள் வெதும்புகின்றன. கோயிலில் இறை வனே வழிபட்டால் வினேகள் வெந்து எரிந்து கரிந்து நீருகி விடுகின்றன.

கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி, வெதும்புமே யன்றி வெந்து சாம்பராகாது. சூரிய காந்தக் கண்ணுடியை வெய்யிலில் வைத்து அதன்கீழ் வரும் மற்ருெரு வெய்யிலில் துணியை வைத்தவுடனே அத்துணி சாம்பராகி விடுகின்றது. நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல், சூரியகாந்தக் கண்ணுடியின் கீழே வரு கின்ற வெய்யிலுக்கு உண்டு.

பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவ னுடைய வெப்பத்தை ஒன்று படுத்தித் தன் கீழே சூரியகாந்தக் கண்ணுடி பாய்ச்சுகின்றது. பிற இடங்களில் இறைவனே வழிபடுவது, வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனே வழிபடுவது, சூரியகாந்தக் கண்ணுடியின் கீழே வைப்

பது போலாகும். ஆதலால், திருக்கோயில் வழிபாடு இன்றியமையாத தாகும்.

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

என்பது சிவஞான போதம்.

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப் பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று, வழிபடுவோருடைய வல்வினைகளை யகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள் புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவது போல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூலமாக நாம்பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பது போல், இறை வழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்

என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

அன்புடன் ஆசார பூசை செய்து
உய்ந்திட வீணாள் படாது அருள்புரிவாயே

என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்.

திருக்கயிலாய மலையில் பார்வதி பரமேச்வரர் மீது விளையாட்டாக வில்வக் கிளையை உதிர்த்த குரங்கு அபுத்தி பூர்வமாகச் செய்த அச் சிவ புண்ணியத்தால் பூவுலகிற் பிறந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகும் ஆண்டது.

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனைச் செய்தனையே

—திருவருட்பா.

இறைவழிபாடு செய்து மார்க்கண்டேயர் மறலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

ஆத்ம சோதியினால் அருட்சோதி சூழச் சிவசோதி விளங்குகின்றது.

ஆத்மசோதி—வட்டமாகிய கல்.

அருட்சோதி—அதனைச் சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார்.

சிவசோதி—மேல் நோக்கிய இலிங்கம்.

இதுதான் சிவலிங்கத்தின் உண்மை.

'ஜோதியுள் ஜோதியுள் ஜோதி'

என்பார் இராமலிங்க அடிகளார்.

கோயில் ஐந்து பிராகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில். இந்த உடம்பும் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற பஞ்ச கோசங்களை யுடையது.

உடம்பில் 32 கட்டுக்களோடு கூடிய முதுகந் தண்டே, திருக்கோயிலில் கொடிமரமாகக் காட்சியளிக்கிறது. கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கின்றான். அதுபோல், முதுகெலும்பாகிய வீணா தண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறுதாரங்களையுங் கடந்து, பிரமரந்திரத்தைத் தாண்டி சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவசோதி காணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலி பீடம் பாசத்தை யும், நந்தி தேவர் பசுவையும், சிவலிங் கம் பதியையும் குறிப்பிடுகின்றன.

நமது சாரீரத்தில் உள்ள மூலாதா ரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலில்உள்ள யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்ட பம், மகா மண்டபம், அர்த்த மண்ட பம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின் றன. எனவே, திருக்கோயிலில்சென்று இறைவனை வழிபட்டு, அங்கே கண்ட பரம்பொருளை நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளந் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

—திருமந்திரம்.

கட்டையில் கனல் மறைந்திருக்கின் றது. ''விறகிற் றீயினன்'' என்கின் றார் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன், அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல், உயிரில் ஒளிந் திருக்கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமாயின், சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது.

எண்ணில் காலமாக எண்ணில்லாத உடம்பு எடுத்து வருகின்ற நாம் இறை வனை மெய்யன்புடன் உள்ளம்குழைந்து உருகி மலரிட்டு அருச்சனை செய்துவழி பட்டால் பிறவி நோய் தீரும்.

கன்றெடுத்து விளவெறிந்து
காலெடுத்த மழைக்குடைந்த காலிகாக்கக்
குன்றெடுத்த மால்விடையின்
கொடியெடுத்து வடிவெடுத்துக் கூறொணாத
மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்
சாத்தியர்பின்வழிபட் டோர்கள்
இன்றெடுத்த வுடற்பிறவி யினியெடா
வண்ணமெண்ணம் எய்து வாரே

—சிவரகசியம்.

(தொடரும்)

காஞ்சி காமகோடி பீடம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்

அவர்களின் அவா.

ஆரம்பப் பள்ளிகளில், ஐந்தாவது வகுப்பில் பயிலும் சிறுவர் சிறுமிகள் திருப்பாவை - திருவெம்பாவைப் பாசுரங்களை மனப்பாடம் செய்து, மார்கழி மாதம் முப்பது தினங்களும் ஊர்வலம் வந்து பாராயணம் செய்வதுடன், தற்போதைய நாட்டின் இன்னல்கள் தீரத் திருஞான சம்பந்தர் அருளிச்செய்த ''கோளறு பதிகம்'' முழுவதையும் சேர்த்துப் பாராயணம் செய்துவரவேண்டுமென ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.